1520

[Reg.] No. M. 2210

வருஷ சந்தா ரு 1-8-0

[Proprietress] & [Edi]tor } வை. மு. கோதைநாயகி அம்மாள்.

# JEGAN MOHINI

# ஜகன்மோ[கி]னி

மலர் V Nov. 19[..]

[...] OF THE REGISTRAR [...] No. 15 DEC [...]



தனிப் பிரதி அணா 6

[ஜக]ன் மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

JL
ஸ211,N22JM
N28.5.12
182851

குறிப்பு :—ஒவ்வொரு மாதமும் கடைசி[...]திக்குள் பத்திரிகைவெளியாகும்.

## நமது சந்தா நேயர்கட்கு முக்கிய அறிவிப்பு.

பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத் கையை எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். அங் மிருக்க சிலர் அடுத்த சஞ்சிகை வந்தபிறகு முன் மாதத்து சஞ்சி வரவில்லையென்றும், நாம் அனுப்பத் தவறிவிட்டதாகவும் எ கிறார்கள். இன்னும் சிலர் 2, 3 மாதங்கள் கழித்து சஞ்சிகை வ வில்லை யென்கிறார்கள். இது மிகவும் விசனிக்கத் தக்கதே. ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 10 தேதிக்குள் உள் நாட்டு சந்தா நேயர்களுக்கும், 15 தேதிக்குள் வெளி நாட்டு சந்தா நேயர் களுக்கும் கிடைக்காவிட்டால் தபாலில் தவறிவிட்டதெ தெளிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகை யனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்று அணு ஸ்ட அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

நமக்கு எழுதும் கடிதத்தில் தங்களது சந்தா நம்ப மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காததால் சஞ்சிகை தவறி விடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

மானேஜர்:—:"ஜகன்மோகினி" ஆபீஸ்
திருவல்லிக்கேணி சென்னை

---

## "ஜகன்மோகினி"யின் முதல் இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த நாவல்கள்

மலர் I. ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) ரூ.

மலர் II. விலாஸவதி (2-பாகங்கள்) ரூ.

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.

கனக சபை .... .... ரூ.

கோகிலம் .... .... ரூ.

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தோடித் ெ
திருவல்லிக்கேணி, செ

# ஒரு விக்ஞாபனம்.

No. 15 DEC 1928 MADRAS

அன்பார்ந்த சந்தா நேயர்களே!

அகண்டாகார ரூபனையும், ஆனிரைமேய்த்த அச்சுதனையும், கார்மேக வண்ணனையும், கருணைபரிபூரணனையும், ருக்மிணி சமேதனையும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பார்த்தஸாரதியின் திருவருளாலும் நமது சந்தா நேயர்களின் அன்பு கூர்ந்த ஆசீர்வாதத்தினாலும், ஆதரவினாலும் நமது "ஜகன் மோகினி" க்குழவியின் ஐந்தாவதாண்டு இச்சஞ்சிகையுடன் இனிது முடிவடைந்து, டிசம்பர் மாதத்தில் ஆறுவதாண்டு ஆரம்பமாகப்போகிறது நேயர்களறிந்த விஷயமாகையினால் அதை நாம் விளக்கிச் சொல்லவேண்டுவதில்லை. இனி வரப்போகிற அடுத்த ஆண்டிலும் மகா அறிவாளிகளாகிய நேயர்கள் தமது பூரணமான ஆதரவை முன்போலவே அளித்து நமது மோகினியின் முன்னேற்றத்தை விருத்தி செய்ய முற்படுவார்களென்று நம்புகிறோம்.

சென்ற 11-வது இதழில் தெரிவித்தபடியே அடுத்த ஆண்டுமுதல், சஞ்சிகை அதிக பக்கங்களுடன் அழகிய சித்திரப்படத்தோடுகூடிய "நவநீத கிருஷ்ணன்" என்ற நாவலைத் தாங்கி வெளியாகும்.

நமது புதிய நாவலாகிய கௌரீ முகுந்தனுக்கும் ஆறுவதாண்டின் மோகினிக்கும் உங்களுடைய பரிபூரணமான பேராதரவை அளித்து, உதவி புரிந்து எமக்கு உற்சாகத்தை யுண்டாக்கி ஊக்கமுறச்செய்ய வேண்டுமாய் உங்களை மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

அடியில் குறிப்பிட்டுள்ள நமது கௌரவ பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் அவ்வவ்வூர் சந்தா நேயர்கள் சந்தாவுக்கு நேரில் பணத்தைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

தங்கள் சகோதரி

**வை. மு. கோதைநாயகி.**

# கௌரீ முகுந்தன்

"சுதேசமித்திரன்"

(10—11—28)

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் இயற்றிய கௌரீ முகுந்தன் என்னும் புத்தகம் வெறும் நவீன மன்று. சரோஜாமணி மனோகரனிருவரும் முதலில் யாருமற்ற அனாதைகளாக விருப்பதும், வறுமையின் கொடுமையால் அவர்களடையும் துன்பமும் உருக்கமாய் எழுதப்பட்டுள்ளன. ராஜகுமாரன் தயவால் அரசியுடன் இருக்கும் நாளில் தூமகேது என்னும் விரோதி சரோஜாமணியை பயமுறுத்தி விட்டுச் செல்வதும் அதனால் அவள் ஜ்வரத்தினால் பிரக்ஞை தப்பி யிருப்பதை யறிந்த இளவரசன் பரிதாபத்தால் அவளைப் பார்க்க வந்திருக்கையில் தூமகேது அரசனிடம் சென்று இளவரசன் யாரோ ஒரு ஸ்திரீயைக் கற்பழிப்பதாய் அழைத்து வந்து காட்டுவதும் அரசன் தீர விசாரியாமல் சிறையி லடைப்பதும், பிறகு சரோஜாமணியின் புத்தி நுட்பத்தால் எல்லாவற்றையு மறிந்து சிறையிலிருக்கும் ராஜகுமாரனை விடுவிப்பதும் எல்லாம் படிப்பதற் கினிமையாய் இருக்கும். தன் தாய் மரணத்தறுவாயி எழுதிய ஓர் கடிதத்தால் தானே முகுந்த னென்னும் இளவரச என்பதை யறிந்து படையுடன் சென்று விரோதியை வென்று தான் காதலித்த லலிதா என்ற பெண்மணியை மணந்து தனது சகோதரியாகிய கௌரியை சத்திய சீலனென்னும் இளவரசனுக்கு மணம் செய்விப்பது இவையெல்லாம் படித்தே இனிமையை உணரத் தக்கன. கதையோடு நில்லாமல் இதன் ஆசிரியை சில தர்மங்களையும் தக்க விடங்களில் உபதேசிக்கத் தொடங்குகிறார். கொடை, அன்பு, தெய்வபக்தி, செங்கோன் முறை முதலியவற்றின் பெரு... யைக் காட்டுவதோடு கற்பு, சிநேகம் போன்ற பல நற்குணங் அனுஷ்டிக்க ஆசிரியை அவசியத்தை விளக்கி யிருக்கிறார். பெண் இருபாலரும் படிக்கத்தக்க இனிய எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

---

# Tamilian Residents of Calcutta.

Those who wish to save unnecessary postal expenses that may be incurred by remitting to us direct on :—

(1) Subscription for the New Year &

(2) Cost of other books published by us,

are hereby requested to pay the amounts to our Honorary Representative, Mr. R. Vasudevan, at the following addresses :—

(1) C/o "Capital" Ld.,
1, Commercial Buildings,
Clive Street,
*CALCUTTA.*

*Or*

(2) 33/B, Chandranath Chatterjee Street,
* *BHOWANIPORE* CALCUTTA.

*Manager*,
**"JAGANMOHINI" Office**,
Triplicane, **MADRAS**.

---

## சந்திர மேனகா

By

**கமலவாஸன்**

ஒரு இனிய தமிழ் நாவல். ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தையும் மயிர்க் கூச்சையும் உண்டாக்கக் கூடியது. படித்துக் கீழே வைக்கும் வரைக்கும் படிப்போர் மனதைக் கவரத்தக்கது. **மதுரவேணி** இறக்கும் தறுவாயில் **தாராவதி**க்குப் போதித்த நற்குணங்களும், **புஷ்பாவதி மேனகாவை** அவளுடைய தம்பியையே மணக்கும்படி செய்த சூழ்ச்சிகளும், **சந்திரன்** மேனகாவை அடைவதற்காகப் பட்ட கஷ்டங்களும், தன்னைக் காட்டிக்கொள்ளாமல் தாராவதி மேனகாவுக்குச் செய்த உதவிகளும் ஒவ்வொரு பக்கத்திலும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியவை விலை அணா 8.

**விலாஸம்:—எஸ். கே. ஸ்வாமி, 1086 மேலசித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.**

பின் கூறப்படும் இடங்களில் புஸ்தகம் கிடைக்கும்.

1. M. நடன சுந்தரம் Bros, புது மண்டபம், மதுரை.
2. டி. எம். வி. பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி.
3. ஹனுமான் வர்த்தக சாலை, ராயப்பேட்டை.
   ஹைரோட், மைலாப்பூர் சென்னை
4. எ. வீ. ஸ்ரீனிவாஸ அய்யர், 30 முதல் தெரு,
   மன்னார்குடி.
5. N. இராமபத்திர அய்யங்கார், மேல மேட்டுத்தெரு கும்பகோணம்.

## Our Honorary Representatives & Principal Agents.

*CALCUTTA.*
Mr. R. Vasudevan
c/o, "Capital" Ltd.,
Post Pox No. 14.

*CHIDAMBARAM.*
Mr. K. S. Narasimha Iyengar,
Kamaleswarer Koil St.

*CUDDALORE,*
Sri Venkata Nilayam,
Chinnappa Mudaly Street.

*COLOMBO.*
Mr. A. Abdul Gani Sahib,
26. Keyzer Street.

*DHARMAPURI,*
Mr. K. V. Ramaswamy Iyer,
Bazaar Street.

*ERODE*
Mr. A. N. Subbarayachar,
20, New Street.

*GOLMURI.*
Mr. M. R. Krishnamurthy,
No. 1, Wardha Road.

*JAMSHEDPUR.*
D. V. V. Sastri & Co.

*KUMBAKONAM.*
Mr. T. B. Seetharama Chettiar,
Special Magistrate,
West Iyen Street.

*KUALALUMPUR.*
M. Mohamed Dulfakir & Co.,
G. P. O. Box No. 268.

*MANANTODDY.*
Mr. P. A. Parameswara Iyer,
Reading Room,
Payingatri Village.

*MATUNGA, (G. I. P. Ry.)*
Mr. V. Krishnaswamy,
22, Visrani Bhavan,

*NEGAPATAM.*
Mr. T. V. Balarama Chettiar,
17, Veerabadraswami
Koil Street.
&
Mr. S. Rangaswamy
c/o, S. Srinivasa Iyengar Esq.
Vakil, Velippalayam.

*PONDICHERRY.*
Mr. Swaminatha Padmanaba
Pillai,
112, Madras St.
&
Messrs. Lakshmanprasad & Co.

*NATAL.*
Mr. V. Murugan
c/o, Tongaat Sugar Co.,
Tongaat.

*RANGOON,*
Naveenakatha Book Depot,
121, Montgomery Street.

*SINGAPORE.*
Mr. M. Oli Mohamed,
3, High Street.
&
M. Mohamed Dulfakir & Co.,
Corner of High Street &
34, North Bridge Road.

*SALEM.*
Mr. T. S. V. Krishnamurthy
Chettiar,
Shevapet.

*TIRUPPAPULIYUR.*
Mr. P. Ramalinga Chettiar,
Vani Vilas Book Depot.

*TIRUTTANGAL.*
Kamma Balan Book Depot.

*UDUMALPET.*
Mr. T. V. Radhakrishna Chetti,
No. 54. Dhali Road.

## 15—வது அதிகாரம்

### பதி பூஜையே மாதருக்குக் கதிமோக்ஷம்

11-வது அதிகாரத்தின் இறுதியில், மைலாவின் வீட்டு மெத்தையிலிருந்து மணிவண்ணன் மஞ்சுளாவை ஆத்திரத்துடன் தூக்கித் தள்ளி விட்டானென்று கூறியிருக்கின்றேமல்லவா? அதன் மேல் நடந்த விஷயங்களை இங்குக் கூறுவாம்:—அத்தருணம் அங்கிருந்த மைலாவும், அவள் அன்னையும் மணிவண்ணன் செய்கையைக் கண்டு திடுக்கிட்டார்கள். ஏனெனில் மெத்தையிலிருந்து அவன், அப்பெண்மணியை உருட்டி விட்டதால் அவளுடைய உயிருக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்து அதனுல் தங்களுக்கு எதிர்பாராத ஆபத்து நேருமோ! என்னும் கலக்கம் அவர்களுக் கேற்பட்டு விட்டது. அவ்விதம் அஞ்சி அவர்கள் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கியவாறு விழித்தார்கள்.

மணிவண்ணன் மாத்திரம் அஞ்சவில்லை; அவனுக்கு அப்போது மூண்டிருந்த ஆத்திரத்தின் முதிர்ச்சியினுல், அவன் மஞ்சுளாவின் உயிரையும் வாங்கி விடத் தயாராயிருந்தான். அவனுக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை. அங்கு மஞ்சுளாவுடன் வந்த கிழவி இவ்வெதிர்பாராத அதி பயங்கரமான செய்கையைக் கண்டு லபோ! லபோ! என்று அடித்துக் கொண்டே வீதிக்குச் செல்ல ஓடும் போது, "ஐயோ! பாவிங்களே! படுபாவிங்களே! இப்படியும் பாழாப் போன மனது துணியுமா! உன் மனங் கல்லோ! கடினமான இரும்போ!" என்று கூக்குரலிட்டுக் கொண்டே நடையின் பக்கம் ஓடினுள். அப்போது வீதிக்கதவு தாளிடப்பட்டிருந்தது. அதன் தாழ்ப்பாள் ஓர் புது மாதிரியாக அமைக்கப்பட்டிருந்ததால் அதை அக்கிழவி இலகுவில் திறக்க முடியவில்லை. அவள் அக்கதவைத் திறப்பதற்கு அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

அதற்குள் மைலாவும், அவள் தாயாரும் மணி வண்ணனை நோக்கி, "தாங்கள் ஆத்திரங்கொண்டு செய்து விட்ட இக் காரியமானது பின்னர் எங்களுக்கு ஆபத்தாக முடியுமோ என்னவோ!

விழுந்தவள் என்னவானளோ! அவளைப் பார்க்காது நாம் புழக்கடையின் பக்கமாக லாயத்திற்குச் சென்று வண்டியிலேறி வெளியே போய் விடுவோம்'' என்று கூறி அவனை இழுத்துக் கொண்டு அப்படியே வெளியிற் போய் விட்டார்கள்.

அவ்வமயம் பொழுது அஸ்தமித்து நன்ருக இருட்டிவிட்டது. விராண்டாவிலிருந்து தள்ளப்பட்ட மஞ்சுளாவின் கதியையும், அப்போதைய அவளுடைய நிலைமையையும் என்ன வென்று கூறுவது! அவளை அவள் புருஷன் ஆத்திரத்துடன் தூக்கி இமைப் பொழுதில் தள்ளிவிட்ட சமயத்தில், முதலில் அவன் தொடும் போது அவள், தன் தேகம் புனித மடைந்து விட்டதாக எண்ணினுள்; பின் கீழே உருட்டி விட்டபோது பெருந் திகிலடைந்தாள். அப்படி அவள் முதலில் திருப்தியும், பின் திகிலும் அடைந்த தன்மை எப்படியிருந்ததெனில், பசியோடிருந்த ஒருவனுக்கு, ஒருவர் உயர்ந்த போஜனம் படைத்து அவன் உண்ணத் தொடங்கும் போது அதனை அவரே எடுத்தெறிந்துவிட்டால் அவன் மனம் எவ்வாறு முதலில் திருப்தியையும், பின்னர்க் கலக்கத்தையுமடையுமோ அவ்வாறே யிருந்தது. அவ்விராண்டாவுக்கும் அதன் கீழ்ப்பாகமாகிய தரைக்கும் சுமார் 10-12 அடி உயரமிருக்கும். அவ்விராண்டாவிலிருந்து கீழே உருட்டித் தள்ளப்பட்ட மஞ்சுளவல்லி தபீரென்று கீழே விழுந்து விட்டதுதான் அவளுக்குத் தெரியும். அத்துணை உயரத்திலிருந்து விழுந்ததால், அவள் அவ்வாறு விழும் போதே மூர்ச்சையடைந்து விட்டாள். விழுந்த விடத்தில் இருந்த படிக் கற்களில் அவளுடைய தலை தாக்கப்பட்டதால், அதில் இரத்தம் பெருக வாரம்பித்து விட்டது. அப்போது பலத்த மழையும் பெய்து கொண்டே இருந்தது; அதனுல் அங்கு ஜன நட மாட்ட மற்றிருந்தது. சிறிதுநேரத்திற் கொருவண்டியாகச் சில வண்டிகள் மட்டும் போய்க் கொண்டிருந்தன.

அப்போது மஞ்சுளாவுடன் வந்த வேலைக்காரி மேற் கூறியபடி கதவைத்திறக்க முடியாமையால் அந்தக் கதவை இடித்து இடித்து ஓட்டிக் கொண்டிருந்தாள். அச் சத்தம் கேட்டு அவ் வீட்டுச் சமையல்காரி அங்கு வந்து கதவைத் திறந்து விட்டு அக் கிழவியின்

22851

அமர்க்களமான புலம்பலைக் கண்டு வியந்தவாறு, "நீ இவ்வாறு புலம்புவதற்கு என்ன காரணம்?" என்று அவளை விசாரித்தாள். தலை கால் தெரியாது விசனத்தினால் கத்தும் கிழவி, இன்ன விஷயம் நடந்ததென்று கூறமாட்டாது வாயில் வந்தவாறெல்லாம் திட்டிக் கொண்டே வீதியிற் சென்று பார்த்தாள். பலத்த மழை பெய்து கொண்டே இருந்தது; பின்னர் மஞ்சுளாவை உருட்டித் தள்ளப்பட்ட விடத்திற்கு ஓடிப் போய் அவளைப் பார்த்தாள். அங்கு அலங்கோலமாக விழுந்து கிடந்த மஞ்சுளவல்லியின் பரிதாபகரமான காட்சி அவள் மனத்தைக் கலக்கிவிட்டது அவள் துயரம் சகிக்க மாட்டாது ஓவெனக்கத்திச் சத்தமிட்டு, "ஐயோ! பாவி சண்டாளன் கொலை பண்ணி விட்டானே!" என்று கூறியவாறு வாயிலும், வயிற்றிலும் அறைந்து கொண்டு மஞ்சுளாவைத் தூக்கினாள்.

அவள் தலையிலிருந்து உதிரம் ஒழுகிற்று அதைக் கண்ட கிழவி முன்னிலு மதிகரித்த ஆத்திரத்துடன் அபாரமான வருத்தத்தை யடைந்து இன்னது பேசுகிறோம், இன்னது செய்கிறோம் என்ற உணர்ச்சியே யின்றிக் கதறினாள். அத்தகைய பெருமழையிலும் கிழவியின் கூச்சல் பலமாகக் கேட்ட படியால் அதைக் கேட்டு அங்குச் சில மனிதர்கள் கூடி விட்டார்கள். அவர்கள் கிழவியை நோக்கி, "என்ன செய்தி? என்ன இந்த அம்மாளுக்கு?" என்ற கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்கள்.

மஞ்சுளவல்லி வீட்டிலிருந்து புறப்பட்டு வரும் போதே, அவள் இக்கிழவியை நோக்கி, "அடீ! மீனாட்சி! நாம் இப்போது செல்லுமிடத்தில் எனக்கு என் கணவராலேயோ, அன்னவரின் ஆசை நாயகியினாலேயோ ஏதேனும் அவமானமோ, ஆபத்தோ, நேர்ந்த போதிலும் அவைகளை நீ கடவுள் ஆணைப்படி வெளியிடக் கூடாது" என்று கூறி அவ்வாறு அவள் வெளியிடாதிருக்கும்படி அவளிடம் சத்தியம் வாங்கிக் கொண்டிருந்தபடியால் கிழவி இவர்களின் வினாவுக்குச் சரியான விடை பகரச் சாத்திய மற்று ஏதும் சொல்லாது புலம்பினாள். இதைக் கண்ட அம்மனிதர்கள் கிழவியை நோக்கி, சற்று கடு கடுத்த முகத்துடன், "ஏ கிழவி! என்ன இது? இந்த அம்மாளுக்குத் தலையிலிருந்து இரத்தம் வருவதை நோக்கின்

பலத்த காயம் பட்டு இவள் மூர்ச்சித்திருப்பதாகத் தெரிகின்றது; உண்மையான காரணத்தைக் கூறு; உடனே இப் பெண்ணை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வேண்டும்'' என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட கிழவி சற்று மருட்சி தெளியப் பெற்றவளாய் சுய உணர்வை அடைந்து, 'இவர்கள் கேட்பதற்கு இச் சமயம் ஏதேனும் சரியான காரணத்தைக் கூறி இவளை ஆஸ்பத்திரிக்கு இவர்களுடைய உதவியைக் கொண்டே எடுத்துச் செல்ல வேண்டும்' என்ற யோசனையைச் செய்தவாறு அவர்களை நோக்கி, "ஐயோ! நான் என்னவென்று சொல்லுவேன்! நாங்கள் இரண்டு பேரும் ஓர் ரிக்ஷாவண்டியில் வந்து கொண்டே இருந்தோம்; அந்த வண்டிக்காரன் நன்றாகக் குடித்து விட்டிருந்தான்; அதை யாங்களறியோம்; அவன் தனது சுரணையின்றித் தாறு மாறாக வண்டியை இழுத்துக் கொண்டு வந்ததால் திடீரென்று இப் பள்ளத்தில் சக்கரம் இறங்கி வண்டி கவிழ்ந்து விட்டது; நானும் இந்த அம்மாளும் கீழே விழுந்து விட்டோம்; நான் மெல்லத் தப்பித்துக் கொண்டு எழுந்து விட்டேன்; மிகுந்த சுகுமார தேகத்தையுடைய இந்த அம்மாளின் தலை கற்களில் மோதுண்டதால் அதில் இரத்தம் வந்து விட்டது; அந்த அதிர்ச்சியினால் இவள் மூர்ச்சையாகி விட்டாள்; வண்டிக்காரன் நிற்காது வண்டியுடன் ஓடிவிட்டான்'' என்று ஓர் சரியான கட்டுக் கதையைக் கூறி விட்டதுடன், மஞ்சுளாவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல உதவி புரியவேண்டுமென்று கேட்டுக் கொண்டாள்.

இந்தக் கதையை எல்லோரும் உண்மை யென்றே நம்பி விட்டார்கள். பின்னர், உடனே ஓர் வண்டி தயார் செய்து அதில் மஞ்சுளாவை எடுத்துக் கிடத்திக் கிழவியையும் ஏற்றிக்கொண்டு அவர்களில் முக்கியமான இருவர் கூட அமர்ந்து வண்டியை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு விடச் செய்தார்கள்.

இரவு சுமார் 9 மணிக்கு வண்டி ஆஸ்பத்திரியை அடைந்தது. உடனே மஞ்சுளா உள்ளே கொண்டு போகப் பட்டாள். டாக்டர்கள் அவளுடைய தலைக் காயத்திற்கு மருந்து போட்டுக் கட்டி, மூர்ச்சை தெளிவதற்கான சிகிச்சையைச் செய்து மிகுந்த சிரத்தையுடன்

அவளைக் கவனித்து வந்தார்கள். கிழவி அன்று இரவு 10 மணிக்குத் தன் வீட்டை யடைந்தாள். பிறகு மஞ்சுளாவுக்கு 4 நாள் சென்ற பின்னரே தனது சுய உணர்வு வந்தது. அதன் மேல் கிழவியால் தன் சம்பந்தமாகக் கூறப்பட்ட சகல செய்திகளையும், அவள் தந்திரமாகக் கூறிய கட்டுக் கதை முதலிய எல்லாவற்றையுமறிந்து கொண்டாள். பின்பு தன்னைக் கிழவி, அவளுக்கு உறவினளென்றே யாவரிடமும் கூறும்படி செய்ததுடன் தானும் அவ்வாறே கூறி வந்தாள். அவளுக்குத் தலையில் பட்ட அடியினால் இரத்தம் அளவுக்கு அதிகமாக வெளி வந்து விட்டதால் அதிகமான பலஹீனமும் நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டு விட்டன பிறகு கிழவி, தினம் ஒருதரம் ஆஸ்பத்திரிக்கு வந்து மஞ்சுளாவைப் பார்த்துச் சென்று கொண்டிருந்தாள். மஞ்சுளாவின் தலையின் இரணம் ஆறி அவள் சௌக்கிய மடைந்து வீடு வந்து சேருவதற்குச் சுமார் இரண்டு மாதகாலமாகியது.

அவள் புருஷனாகிய மணிவண்ணன் அன்று அவளைத் தள்ளிவிட்ட பின்னர் மஞ்சுளாவைப்பற்றிச் சிறிதும் கவனிக்கவே இல்லை. மைலாவின் மோக சாம்ராஜ்ய பதவியிலேயே தனது முழுகவனத்தையும் செலுத்தி ஆநந்தித்து வந்தான். அவனுக்குக் கையில் ரொக்கமாக விருந்த எல்லாப் பணங்களும் பைசா மிச்சமின்றிப் பைலலாகிவிட்டது. அவன் பணம் வாங்கி யிருந்த மார்வாடியும் அவனிடம் கடனைக் கேட்க ஆரம்பித்து விட்டான். அவன், 'இதோ, அதோ' என்று மார்வாடிக்குச் சமாதானம்சொல்லிக் கொண்டே காலத்தைத் தள்ளி வந்தான்.

நமது மஞ்சுளவல்லி, மேற்கூறியபடி ஆஸ்பத்திரியி லிருக்கும் போது தன்னைத் தன் நாயகன், கவனிக்காதிருந்ததைக் குறித்து அவன்மீது சிறிதும் கோபமோ, அருவருப்போ கொள்ளவில்லை. தன்னையே தான் நொந்துகொள்ளலானாள். தனது பிராணபதி தன்னைத் தூக்கித் தள்ளியது மிகவும் பொருத்தமானதென்ற நோக்கமே அவள் மனத்தில் குடிகொண்டுவிட்டது. அதனால் அவள், "ஆகா! நாம் செய்த காரியம் மிகவும் தவறுதலானது; நம் பிராணபதி மன உல்லாசமாக விருந்த சமயத்தில், நாம் பூசை வேளையில்

காடி புகுந்தவாறு சென்றது மிகவும் தப்பிதமானவேலை; உத்தம பத்தினியானவள் தனது கணவனின் மனங் கோண நடப்பதைப் போலான பாபச் செயல் வேறு உண்டோ! ஐயோ! நாம் ஆத்திரப் பட்டுப் பொறாமை என்னும் பேயினால் பிடிக்கப்பட்டு மிகுந்த பாப மூட்டையைத் தேடிச் சுமந்துகொண்டதுடன், பிராணபதியின் மனத்தின் உல்லாசத்திற்குப் பங்கம் உண்டாகவும் செய்து விட்டோமே! ஆகா நம்மைப்போன்ற பெண்மணியாகிய நளாயினி தேவி தன் நாயகனைத் தானே தாசி வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு செல்லவில்லையா! ஐயோ, நாம் எத்தனையோ அரிய நூல்களைப் படித்திருந்தும் முழு மூடமாகிவிட்டோமே! இவ்வெண்ணத்தை ஈசன் நமக்கு முன்னமே அளிக்கலாகாதா! நாம் எல்லா வகையிலும் நல்வினை செய்திருப்பின் நமது பதியின் குணம் இவ்வாறு மாறுபாடடைந்து இத்தகைய நிலைமைக்கு வராது; நாம் பதி சிச்ருஷையின்றிப் பாவியாகி அலையமாட்டோமல்லவா'' என்று சிந்தித்து வருந்தினுள். தன் நாயகனுக்குத் தான் பணிவிடை செய்ய எவ்விதத்திலேனும் ஓர் வழி கிடைக்குமா என்று மிகுந்த கவலையிலாழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அவளுக்கோர் யோசனை தோன்றியது. அதாவது, தான் எவ்வித தந்திரத்தையேனும் கைக்கொண்டு மைலாவின் வீட்டுக்கு ஓர் ஊழியக் காரியாக அமர்ந்துவிட்டால் அதன் மூலம் தன்னுடைய பர்த்தாவுக்குத் தான் பணிவிடை செய்ய ஏதுவாயிருக்குமென்றும், அந்த ஒரு திருப்பணி செய்யும் பாக்கியம் தனக்குக் கிடைத்தால் தன் பிறவியில் ஒரு சிறு புண்ணியமேனும் கிடைக்கும் என்றும் எண்ணத்துடன் அவள், "எப்போது நமக்குத் தலை ரணம் ஆறி நாம் குணமடைந்து இந்த எண்ணத்தை நிறைவேற்றுவோமோ'' என்ற ஆவலுடன் இரண்டு மாத காலத்தையும் ஆஸ்பத்திரியில் கடத்தினுள்.

தலையில் பெரிய காயம் பட்டிருந்ததாலும், படுத்தபடியே அவள் புரண்டுகொண்டிருந்ததாலும் அவளுடைய தலைமயிர் முழுதும் சிக்குண்டுவிட்டது. அவ்விதம் சிக்குண்டுவிட்டது மருந்து போடுவதற்குத் தடையாயிருந்தமையால் ஆஸ்பத்திரி டாக்டர்கள்

அவள் தலைமயிர் முழுவதையும் அடியோடு வெட்டி மொட்டை யாக்கிவிட்டார்கள். ஏற்கெனவே அவள் தன்னுடைய கணவனைப் பிரிந்த துயரத்தால் உடல் மெலிந்து உருவம் மாறி யிருந்ததுடன் இவ்வாறு மொட்டை யடிக்கப்பட்ட தலையுடனும் ஆஸ்பத்திரியில் கஞ்சி யாகாரத்தையே சாப்பிட்டுக்கொண்டு இரண்டு மாதம் கிடந்தமையால் அவளுடைய உருவம் அடியோடு மாறிவிட்டது. அவளை அடிக்கடி பார்த்துக்கொண்டிருக்கும் மனிதர்களுக்கும் அவளுடைய உருவம் சிறிதும் அடையாளம் கண்டுகொள்ள வியலாத வகையில் அவள் நிலைமை வந்துவிட்டது. பின்னர் அவள் சௌக்கியமாகித் தன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

அதன்மேல், அவளுடைய வேலைக்காரியாகிய கிழவி யொருத்தி யிடம் மட்டும் அவளுக்குப் பூரண நம்பிக்கை யிருந்ததாகையால் அவளிடத்தில் தனது விருப்பத்தைத் தெரிவித்து, "எவ்விதத் திலேனும் நீ எனக்கு மைலா வீட்டில் ஓர் வேலை கிடைக்கும் வழி செய்யவேண்டும்" என்று வேண்டினாள். முதலில் கிழவி தடுத் துச் சொன்னாள்; எனினும் பின்னர் அவளுடைய பதிபக்தியைக் கண்டு மெச்சி அவளிஷ்டப்படியே அவளுக்கு உதவி செய்வதாக வாக்களித்தாள். அதன்மேல் மைலாவின் வீட்டு வேலைக்காரிகளில் ஒருத்தியை இக் கிழவி தன் கைவசம் செய்துகொண்டு அவளிடம் தனக்கு ஓர் உறவினள் இருப்பதாயும், அவளுக்கு ஓர் வேலை வேண்டுமென்றும், அதை எவ்விதமேனும் முடித்துத் தரவேண்டு மென்றும் கூறியதுடன், அந்தவேலைக்காரிக்கும் இன்னும் அதிக மான சம்பளத்தில் ஓர் வேலை தான் பார்த்துத் தருவதாகக் கூறி அவள் மனத்தைக் கலைத்து அவளை வேறு வீட்டில் வேலைக் கமர்த்தி விட்டு மஞ்சுளவல்லிக்கு மைலா வீட்டு வேலை காலியானதைத் தெரி வித்தாள். இதைக்கேட்ட மஞ்சுளா மிகுந்த சந்தோஷத்தை யடைந்து, கிழவியின் பேருதவிக்கு மெச்சித் தன் விரலில் முன்னர் அணிந்திருந்த மோதிர மொன்றை எடுத்து அக் கிழவிக் களித்தாள். பிறகு மஞ்சுளா கேவலமான பழைய ஆடை யொன்றை மராட்டி ஜாதிக்காரர்கள் அணிவதுபோல முக்காடிட்டு அணிந்துகொண்டு மைலாவின் வீட்டிலிருந்த பழைய வேலைக்காரியின் உதவியைக்

கொண்டே கமலாவின் வீட்டை யடைந்து அங்கு வேலைக்கு அமர்ந்தாள்.

மைலாவும், அவள் தாயாரும் நமது மஞ்சுளவல்லியைச் சில மாதங்களுக்கு முன்னால் இராக்காலத்தில் ஒரே தரம் பார்த்தார்களா தலாலும், அதற்குப் பின்னர் அவளுடைய உருவமே அடியோடு மாறிவிட்டபடியாலும், அவள் முக்காடிட்டுக்கொண்டு இருப்பதாலும் அந்த மஞ்சுளாவை அவர்கள் இன்னாள் என்று தெரிந்துகொள்ளவே யில்லை. மணிவண்ணான், மைலாவைத் தவிர வேறு பணிப் பெண் களைச் சிறிதும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை யாதலால் அவ் வழக்கப்படியே அப்பொழுதும் வேலைக்காரியாகிய மஞ்சுளா வைக் கவனித்துப் பார்க்காமலே யிருந்து வந்தான்.

நமது மஞ்சுளா தன் மனத்திலுள்ள விசனங்களை யெல்லாம் உள்ளடக்கிக்கொண்டு வெகு வணக்கமாய் அவ்விடத்தில் மைலா வுக்கும், கிழவிக்கும் தகுந்தவாறு நடந்துகொண்டு வீட்டில் சமையல் வேலை முதலிய சகலமான வேலைகளையும் தானே செய்து வந்தாள். தன் பர்த்தாவுக்கு எந்தெந்தப் பண்டங்கள் பிடித்தமோ அவைகளை யெல்லாம் செய்து பரிமாறுவது, அவனுக்கு வெந்நீர் வைத்து ஊற்றுவது, துணி தோய்த்துப் போடுவது முதலான சகல வேலைகளையும் வெகு பிரியத்துடன் செய்துவந்தாள். அந்த விதம் அவனுக்குத் தான் செய்யும் திருப்பணியால் அவள் அளவற்ற ஆனந்தத்தையும், தேகப் பூரிப்பையும் அடைந்து வந்தாள். மணிவண்ணன் மைலாவின் ஆநந்தத்தினால் எவ்விதம் மெய்ம் மறந்திருந்தானோ அதே போல மஞ்சுளாவும் தனக்குத் தன் பதியின் பாத சேவை கிடைத்த பேராநந்தத்தினால் மெய்ம் மறந்து, பேரின்பப் பதவி கிடைத்துவிட்ட தென்று எண்ணி மனமகிழ்ந்தவாறு இருந்தாள். மஞ்சுளா, தன் ஆவலின்படியே அவள் புருஷனுக்குப் பணி செய்து வந்ததால் மைலாவுக்கும், அவள் தாயாருக்கும் வெகு இஷ்டமுள்ளவளாகி விட்டாள்.

இப்படி யிருக்கும்போது மஞ்சுளா ஓர் தினம் மாலை நேரத்தில் கடைக்குச் சென்று வீட்டுச் சாமான்களில் சில வாங்கிக்கொண்டு

திரும்பி வந்தாள். அப்படி வந்துகொண்டே இருக்கையில் வழியில் ஓர் விநோதம் நடந்தது. அதாவது, நமது மணிவண்ணன் குடி முதலிய துர்ப் பழக்கங்களைக் கையாண்டு வருகிறான் என்பதை நாம் முன்னரே கூறியுள்ளோ மல்லவா? அவ்வாறே அவன் அன்று தலை கால் தெரியாதபடி அதிகமாகக் குடித்துப் போதை தலைக் கேறி விட்டதனால் கால்கள் தள்ளாடி நடக்க மாட்டாது தாறுமாறாகச் சுழன்று சுழன்று நடந்துகொண்டே வந்ததால் காலில் ஓர் கல் தடுக்கி வீதியிலுள்ள முனிசிபாலிடிக் கால்வாயில் திடீரென்று விழுந்து விட்டான்.

இவன் விழுந்ததைச் சிறிது தூரத்தில் வரும்போதே பார்த்துக் கொண்டுவந்த மஞ்சுளவல்லியின் உயிர் துடித்தது. அவளால் தாங்க மாட்டாத துக்கம் அவள் மனத்தில் பொங்கி யெழுந்து விட்டது. உடனே அவள் மணிவண்ணன் விழுந்த விடத்திற்கு ஒரே ஓட்டமாக ஓடிவந்து, தனது பக்திப் பெருக்கினாலும், அன்பினாலும், கிழே விழுந்துவிட்ட தன் கணவனை இரு கரங்களா லும் தூக்கித் தன் தோளின் மீது சாய்த்துக் கொண்டபடியே, தான் வாங்கி வந்த சாமான் மூட்டையைத் தலை மேல் தூக்கி வைத் துக் கொண்டு அவனை அதிகப் பிரயாசையுடன் நடத்தி இழுத்துக் கொண்டே போய் அருகிலுள்ள மைலாவின் வீட்டையடைந்து, கூடத்திலிருக்கச் செய்து, தான் உடனே உள்ளே சென்று ஓர் பெரிய பாத்திரத்தில் வெந்நீர் கொண்டு வந்து அவனுடைய உடை களைக் களைந்து விட்டு, அத் தண்ணீரால் தேகம் முற்றும் சுத்தம் செய்து அவனுக்கு வேறு உடை அணிவித்து, அவனை மெல்ல மெத் தையில் கொண்டு போய்ச் சேர்த்து, ஓர் சோபாவில் படுக்கவைத்து விட்டு, தான் அருகிலேயே நின்றாள்.

மணிவண்ணனுக்குப் போதை தலைக்குமேல் ஏறி விட்டதால் அவன் வாயில் வந்தவாறெல்லாம் பிதற்றுவதும், மஞ்சுளாவைத் திட்டுவதும், உதைப்பதும், நகைப்பதுமாக விருந்தான். அவனு டைய நிலைமையைக் கண்ட மஞ்சுளவல்லிக்கோ தாங்க வியலாத மன வேதனையுண்டாகி அவளை வதைத்துக் கொண்டே இருந்தது. அவ்வமயம் மைலாவும், அவள் தாயும் வீட்டிலில்லாமையால் நமது

மின்னுள் அச்சமின்றி அங்குச் சென்று நிற்க ஏதுவுண்டாயிருந் தது.

பின்னர்ச் சிறிது நேரத்திற்குள் மணிவண்ணன் நன்றாக அயர் ந்து நித்திரையில் ஆழ்ந்து விட்டான். நித்திரை செய்பவனை எழுப் புவது கூடாதென்ற நோக்கத்துடன் மஞ்சுளா, தன் சமயல் வேலை க்குச் சென்று விட்டாள். அப்போது வெளியில் சென்றிருந்த மைலாவும், அவள் தாயாரும் வந்து விட்டார்கள். அப்படி வந்த அவர்கள் மணிவண்ணனின் செய்தியை அங்கிருந்த மற்றொரு வேலைக்காரனுல் தெரிந்து கொண்டார்கள். அதைக் கேட்ட மைலா வுக்கு அவனிடத்தில் வெறுப்புண்டாகி விட்டது. கேவலமான மது மயக்கத்தினுல் ஆபாசமாகிய கால்வாயில் அவன் விழுந்து விட்டதைப் பற்றி அவள் அவன் மீது மிகுந்த அருவருப்படைந் தாள். அவனுடைய கரத்தைத் தீண்டவும் அவளுக்கு மனம் வர வில்லை. எனினும் அவள், தன்னுடைய வெறுப்பை வெளிப்படை யாக அவனிடம் கூறவில்லை. அன்று முதல் மைலா, தனக்குத் தேக அசுகமென்று ஓர் கட்டுக் கதையைக் கூறிக் கொண்டே அவனருகி லும் செல்லாதிருந்து வரத் தொடங்கினுள். மேலும் அவனுல் அதன் மேல் தனக்கு யாதும் பிரயோஜனமில்லை என்பது தீர்மான மாய்த் தெரிந்த படியால், அவனை விலக்கி விடவும் நாட்டங் கொண் டாள். அதனுல் அவனிடம் சற்று பராமுகமாகவே நடக்கத் தலைப் பட்டாள். அவளுடைய மோகவலையில் சிக்குண்டுழலும் மணி வண்ணன், மைலா தன்னை வெறுக்கிறுள் என்பதையறியாமல் அவளுக்கு உண்மையிலேயே தேக அசுகம் என்று திட்டமாக எண்ணியிருந்தான்.

அருங்குண பூஷணமாகிய மஞ்சுளவல்லி, தனது நாயகனின் திருப்பணியைச் சிரத்தையுடன் செய்து வந்ததோடு தன் பிராண காந்தனிடத்தில் மைலா என்ன விதமாக நடந்து கொள்கிறுள், எவ்விதம் பேசுகிறுள் என்கிற விஷயங்களையும் வெகு கவனத்துடன் ஒரு கண் பார்த்துக் கொண்டே வந்தாள். இங்ஙனமிருக்க, ஓர் தினம் மைலா, தனது தாயாருடனும், மாமாக்களுடனும் கூட்டங் கூடி மணி வண்ணனைத் தொலைக்கும் வழியைப் பற்றி யோசிக்கத்

தொடங்கினுள். அவர்கள் சதியாலோசனை செய்யப் போகின்ற செய்தியை அறிந்து கொண்ட நமது மஞ்சுள மணி, அவர்களறியா தபடி ஓர் மறைவான விடத்தில் நின்று அவர்களின் சம்பாஷணையைக் கவனிக்கலானுள்.

**மைலா:**—மாமா! அந்தக் காராம்பசுவினிடத்தில் இனி மேல் கறப்பதற்கு ஒன்று மில்லை; எல்லாம் செல்லரித்து விட்டது; இனி அவனுல் ஒற்றைக் காசு கூட கிடைக்காது; வீணில் அவனுக்குச் சோறு போடும் தண்டச் செலவு நமக்கு நேர்ந்து விட்டது; ஆதலால் அந்த ஆசாமியைத் தொலைக்கும் வழியை நாம் சடுதியில் தேட வேண்டும்; அதற்கான ஓர் உபாயத்தைக் கூறுங்கள்; அதை உங்களிடம் கேட்கவே நான் இன்று இத்திருச் சபையைக் கூட்டினேன்.

**மாமா:**—மைலி! நானே இவ்விஷயத்தை உன்னிடம் கேட்க வேண்டுமென்று எண்ணினேன்; அதற்குள் நீயே கூறி விட்டாய்; அவன் கைவறண்டு விட்ட செய்தியை யான் சில மாத காலமாகவே அறிந்து கொண்டேன்; அப்போதே அதைத் தெரிவிக்க எண்ணினேன்; எனினும் நீ அவனைப் பிடித்த நாள் முதல் அவன் உன் மீது உண்மையிலேயே பிரியம் வைத்துப் பாட்டுப் பாடுவது முதலிய தொழில்களையும் செய்து வருவதால் நீ அவனை விலக்குவயோ விலக்க மாட்டாயோ என்கிற எண்ணம் எனக்குண்டாயிற்று. அதனுலேயே நான் வாளாவிருந்தேன்; இப்போது நீயே அவனை வெறுத்துக் கூறுவதால் அவன் விஷயத்தைப் பற்றி ஒரு முடிவு செய்து விடுவோம்; உன் யோசனை யாது? அதைத் தெரிவி.

**கிழவி:**—தெரிவிப்பது என்னுங்கோ! அவன் பாட்டுக்காக அவனைக் கட்டிக் கொண்டு அழுவதென்றால் படே படே தொகை வருமானத்திலெல்லாம் மண்ணு விழுந்து போகுமே! இவன் பாட்டுப் பாடிவருவதனுல் நமக்கு அதிக லாபம் ஒன்று மில்லை; இவன் இருக்கையில் நாம் இரகஸியமாக எத்தனை பெயரை அழைத்து வந்து அவர்களிடம் வரும்படி தேடினுலும் அதனுல் நம் பெட்டி நிறையாது; பனி பெய்து குளம் நிறையுமா? இவன் இருக்கையில் நிர

ந்தரமான ஓர் பிரபுவையும் பிடித்தால் இவன் சும்மா இருக்கமாட்டான்; இவனைப் பார்த்தால் வருபவனுக்கும் நம்மிடம் நம்பிக்கை பிராது; ஆகையால் இனி மேல் இவனைத் தொலைத்து விட்டு வேறு பணந் தோண்டும் சுரங்கத்தைத் தேடவேண்டுவது தான் முக்கியம். இவனோ சாதாரணமாகத் தொலைபவனாகக் காணப்படவில்லை; இப்போது சில மாதங்களாக இவனை நம் குழந்தை லக்ஷியம் செய்யாது விலக்கி விட்டுத் தேக அசுக மென்று கூறி இவன் அருகிலேயே வராதிருக்கிறாள்; அதையும் அந்த மனிதன் உண்மை என்று நம்பி நம் குழந்தை மீது வெறுப்படைந்து போகாமலிருக்கிறான்; அவனுக்குக் கடன்காரர்களோ அளவற்றவர்களாகி விட்டார்கள்; அவன் இனிக்கடன்காரருக்குப் பதில் கூற வழியில்லா நிலைமையை அடைந்து விட்டான்; அதனால் இனி அவன் நமக்கு வாங்கிக் கொடுத்த எதையேனும் கேட்கவும் தலைப்படுவான்; அப்போது நாம் இல்லை என்று கூறி இவனை விரட்டுவதைப் பார்க்கிலும் இப்பொழுதே துரத்தி விடுவது நல்லது; அவன் அவ்வளவு தூரம் வருகிறவரையில் நாம் அவனை இங்கே வைத்திருக்கக் கூடாது; உடனே தொலைத்து விடவேண்டும்; நேற்றுக் கூட கடன் கேட்க ஓர் மார்வாடி வந்து வெகுவாக அவனைத் திட்டிச் சென்றான்; அவனுக்கு ஆயிரக்கணக்கான தொகை கொடுக்க வேண்டுமாம் ஆகையினால் இவனை முதலில் விலக்கி விடவேண்டும்.

மைலா:—மாமா! அவன் அதிகமாகக் குடிக்கவும் பழகி விட்டான்; கண்ட கண்ட விடங்களிலெல்லாம் குடித்து விட்டுக் கீழே விழுகிறானும்; சென்ற சில நாட்களுக்கு முன் அவன் குடி வெறியால் வீதி சாக்கடையில் விழுந்ததை நமக்கு முக்கியமாக வேண்டியவர்களான சிலர் பார்த்துக் கொண்டே இருந்து என்னை ஏளனம் செய்தார்கள்; அது எனக்கு மிகுந்த அவமானத்தை யுண்டாக்கிவிட்டது. அவன் குடிப்பழக்கம் ;செய்து கொண்டிருப்பதால், இனி அவனுடைய சாரீரமும் கெட்டுவிடும்; சங்கீதமும் பாழ்தான்; குடியிருந்தால் கண்டம் சரியாக இருக்கமாட்டாது; ஆதலால் பாடுவதற்கும் இனி அவன் லாயக்குடையவனாகமாட்டான்;

மாமா,—"சரி அப்படியானல் அவனை விலக்கி விடலாம்;

ஆனல் அவனை நாம் திடீரென்று விலக்கினல் நம்மையவன் பகைத்துக் கொள்வதுடன் நமக்கோர் இழிவான பெயரைக் கூறி நாம் கதை செய்யும் தொழிலுக்கும் பங்கம் விளைவிப்பான். ஆதலால் அவனைத் தந்திரமாக விலக்க வேண்டும்; அதற்கு நான் ஓர் யோசனை கூறுகிறேன் கேள்; அதாவது:— நீங்கள் இன்னும் சில தினங்களில் ஓர் கலியாணர்த்தமாக ஊருக்குச் செல்வதாகக் கூறி விட்டு எங்கேனும் போய் விடுங்கள்; நான் மட்டும் இவ்விடத்திலேயே இருக்கிறேன்; பின்னர் அந்தமனிதனை நமது மோகனவின் வீட்டிற்கு அழைத்துச் சென்று அங்கு அவன் ஓர் நகையைத் திருடி விட்டதாக அவன் மீது குற்றஞ் சுமத்தி விடுகிறேன்; அவன் போலீஸ்காரரிடம் மாட்டிக் கொண்டலைவான்; இதற்கான யோசனைகளை நான் முன்னதாகச் செய்து முடித்துக் கொள்கிறேன்; பின்னர் அவன் தானே ஒழிந்து விடக் கூடும்; என்ன? இந்த யோசனை சரி தானா?" என்றான்.

இதைக் கேட்ட மற்ற இருவரும் ஆமோதித்துக் கை கொட்டிச்சிரித்தார்கள். பின்னர் கூட்டம் கலைந்தது; எல்லோரும் எழுந்து சென்றார்கள். இந்த விஷய முழுவதையும் மறைவிடத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த நமது மஞ்சுளவல்லியின் விழியாகிய வானத்திலிருந்து கண்ணீராகிய மழை பொழிந்தது. மகா மேன்மைக் குணம் தங்கிய தன்பதியை ஓர் கள்ளனக்க அவர்கள் முயல்வதை நினைத்து அவளுள்ளம் பற்றி எரிந்தது. அதன்மேல் அவள், "நாம் என்னவிதமான உபாயம் செய்து நம் பர்த்தாவை இவ்வாபத்தில் மாட்டிக்கொள்ளாதபடிசெய்யலாம்?" என்ற யோசனையிலேயே அவள் மனம் சென்றுலைந்திருந்தது. அவள் தன் நாயகனுக்குப் புத்தி கூறலாமா என்று நினைத்தாள்; எனினும், அவள் எந்தவிதமாக மணிவண்ணனுக்குப் புத்தி கூறினலும் அவன் அதைக்கேட்கமாட்டானென்பது அவளுக்குத் தெரியுமாதலால் அந்த எண்ணத்தையும் விடுத்து, தாங்கவியலாத துயரத்துடன் உள்ளே சென்று தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அன்று மாலையில் மைலா முதலிய எல்லோரும் வெளியில் சென்றிருந்தார்கள்; மணிவண்ணனும் வீட்டிலில்லை. அவ்வமயம்

மணிவண்ணனுக்கு கடன் கொடுத்திருந்த கடன்காரனும், தாகனும், ஓர் சம்மன் சேவகனும் அவ்விடம் வந்து சேர்ந்து வெகு ஆடம்பரமாயும், தடபுடலாயும், "மணிவண்ண ரெட்டியார் எங்கே? அவருக்குச் சம்மன் வந்திருக்கிறது; அவருடைய வீட்டில் சென்று பார்த்தாலும் அவர் அகப்படுவதில்லை; இவ்விடம் வந்தாலும் காணப்படுவதில்லை; எங்கே அந்த ஐயா?" என்று கடுகடுத்த பார்வையுடன் கேட்டார்கள்.

இந்த வார்த்தைகளை உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த நமது மின்னிடை மாதரசியாகிய மைலாவின் மனம் புழுங்கித் திடுக்கிட்டது. அவள், "ஐயோ! இவர்களுக்கு நாம் என்னவிதமாகப் பதில் கூறுவது!" என்று திகைத்துவிட்டாள். அவளுடைய தேகம் முற்றும் பற்றி எரிவதுபோல விருந்தது. அவர்கள் மேலும் மேலும் கூச்சலிட்டு ஆத்திரத்துடன், "அந்தக் கடன்கார ரெட்டியார் எங்கே? எங்கே?" என்று கேட்டுக்கொண்டே யிருந்தார்கள். அவர்கள் போடுங் கூச்சல், அவளுடைய மனத்தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்துகொண்டிருந்தது. அவள் தனது சமயல்காரிக் கோலத்துடன் அவர்கள் முன்னிலையில் சென்று பேசுவதற்கும் அவள் மனம் இடந்தரவில்லை. பின்னர் அவள் ஓர் இமைப் பொழுதில் ஓர் யோசனை செய்து முடித்தாள். அதாவது,— தான் உடனே மெத்தைக்குச் சென்று தனது பர்த்தாவின் உடைகளை எடுத் தணிந்துகொண்டு ஆண் வேடத்துடன் அவர்களிடம் பேசிச் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதேயாம். அவ்வாறு அவள் முடிவு செய்து கொண்டவுடனே மெத்தைக்குச் சென்று தனது பர்த்தாவின் வேஷ்டியை கட்டிக் கொண்டு, சொக்கா யணிந்து, தலைப்பாகை தரித்து, அங்கவஸ்திரத்தைப் பிரித்துப் போர்த்திய வண்ணம் கீழே இறங்கி அவர்களின் முன்னிலையில் வந்து சேர்ந்து, "நீங்கள் யார்? என்ன செய்தி?" என்று கேட்டாள். அவர்கள் மணிவண்ணன் கடன் வாங்கியதையும், பத்திரம் எழுதிக் கொடுத்ததையும், பலமாசங்களாகியும் கடன் தொகைக்கு ஒரு பைசா கூட வட்டி கொடாமலிருப்பதையும் விரிவாகக் கூறினார்கள்.

இதைக் கேட்ட மஞ்சுளா, மனவருத்தத்தை உள்ளடக்கிக் கொண்டு பேசத் தொடங்கி, "ஓகோ! அப்படியா செய்தி! தங்களிடம் அவர் கடன் வாங்கிய பணத்தைக் கொண்டு தான் இந்த வீட்டுக்கார அம்மாளுக்கு வைரச் செட்டு நகைகள் செய்து போட்டதாக நான் கேள்விப்பட்டேன்; நான் இருப்பது தஞ்சாவூர்; அந்த மணிவண்ண ரெட்டியார் எனது அத்தை மகன்; (அத்தை என்றால் மாமியார்; மாமியாரின் மகன் தன் புருஷன்; ஆதலால், அவனைச் சிலேடையாக, மஞ்சுளா இவ்வாறு அத்தை மகன் என்று சாமார்த்தியமாக விளம்பினாள்) நான் இச்செய்தியைக் கேள்விப் பட்டே அவரை விசாரிப்பதற்கு சமீபத்தில் இவ்வூருக்கு வந்தேன்; வந்து வீட்டில் பார்த்ததில் அவரைக் காணமுடியவில்லை. பின்னர் இவ்விடத்தில் காணலாமென்று தீர்மானித்து இங்கு வந்தேன்; இங்கேயும் அவரைக் காணவில்லை; அவர் என்னிடம் அதிகப் பற்று யிருந்தது; அப்பற்றையும் இவ்வீட்டுக்கார அம்மா ளிடத்திலேயே அளித்துவிட்டதாக அறிந்தேன்; (பற்று என்பது அன்பு என்றும், பற்றுகிய கடன் தொகை யென்றும் பொருள் படும்; ஆதலால், அவள், தன் கணவன் தன்மீது அன்பு வைத் திருந்து பின் அதை மைலாவிடம் செலுத்தி விட்டானென்றும், தன்னிடம் கடனுகத் தொகையைப் பற்றி மைலாவுக்குக் கொடுத்து விட்டானென்றும் இருவகைப் பொருள் படும்படி இவ்வாறு சிலேடையாகக் கூறினாள்) அதைக் கேட்டு வாங்கும்பொருட்டே நான் இவ்விடம் வந்துள்ளேன்; நான் எவ்விதமாகவாவது இன்று அவரைக் கண்டு அவரிடம் எல்லா விஷயத்தையும் தெரிவிக் கின்றேன்; ஆனால் உங்களை யொன்று கேட்டுக்கொள்கிறேன். அவர் எனக்குத் தரவேண்டிய பற்றுகிய தொகைக்கு நான் வட்டியைத் தள்ளிவிடப்போகிறேன்; அசலையும் அவர் கொடுத்தவரையில்தான் வாங்கிக்கொள்ளப் போகிறேன்; தயவுசெய்து தாங்களும் வட்டி யைத் தள்ளிவிட்டுக் கிடைத்தவரையில் அசலைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்; பின்னர் நான், தங்கள் வட்டியையும் பாக்கி அசலையும் அவர் கொடுக்கும்படியான வழியைத் தேடுகிறேன்; தாங்கள் அவரை அதிகமாக உபத்திரவிக்காது அவர் கொடுத்த வற்றை வாங்கிக்கொள்ளுங்கள்; நான் எப்படியாயினும்

மிகுதித் தொகை வருவதற்கான ஏற்பாடு செய்கிறேன்; என் வார்த்தையை நம்புங்கள்; நான் வேண்டுமானால் எனது பணத்தையும் சேர்த்துத் தங்களுக்கு வாங்கித் தருகிறேன்; அவரை எவ்விதமேனும் நான் இவ்விடத்தை விட்டு நீக்கி ஊருக்கு அழைத்துச் செல்ல வந்துளேன்; அவருடைய மனைவி மிகவும் கேவலமான நிலையில் உயிர் போகும் தறுவாயிலிருக்கிறாள்; அவரைப் பார்க்க வேண்டுமென்ற அவாக் கொண்டு புலம்புகின்றாள்; அதை உத்தேசித்தும், பணத்தை யுத்தேசித்துமே நான் வந்திருக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு ஏதேனும் இது விஷயமாக கஷ்டம் நேரிட்டால் அந்த அம்மாளின் அவா பூர்த்தியாகாமல் அவள் இறந்துவிடுவாள்; ஆதலால் நீங்கள் தயவுசெய்து அவரை ஹிம்சிக்காமலிருக்க வேண்டும்; அவரிடம் கூறி யான் உங்களுடைய தொகைக்கு வழி செய்து கிடைப்பவைகளை யானே தங்களிடம் சேர்த்துவிடுகிறேன்; தாங்கள் சற்று மனமிரங்கவேண்டும்" என்று மிகவும் கெஞ்சி அவர்களுடைய மனம் இளகும்படி அவர்களிடம் கேட்டுக்கொண்டாள்.

அவளுடைய மதுரம் போன்ற மொழிகளையும், அச் சொற்களின் நயத்தையும் கேட்ட அவர்கள் மிகுந்த பரிதாபத்தையடைந்தவர்களாய் மனமிளகி விட்டார்கள். பின்னர் மஞ்சுளாவை நோக்கி, "ஐயா! தாங்கள் கூறுவதைக் கேட்க எங்கள் மனமும் வருந்துகின்றது; என்ன செய்யலாம்; பணத்தின் விஷயத்தில் பகைமை கொள்ளாத மனிதர்களே உலகில் இல்லை; பணத்தினுடைய குணம் இத்தகையது. பெற்றோர், உடன்பிறந்தார், உற்றார், உறவினர், சிநேகிதர்கள் முதலிய யாவரிலும் பண விஷயத்தில் மட்டும் கணக்கிடாத குணமுடைய மனிதர்கள் பூவுலகில் எங்கனும் காண்பதரிதென்றே கூறலாம்; எங்கேயோ ஆயிரத்திற்கோர் மனிதர் கூட அதைப் பாராட்டாதவராய் அகப்படுவது அரிதினு மரிது. பெரும்பாலும் சொந்தத்தில் வரும் மனஸ்தாபங்கள் முற்றும் பணத்தின் விஷயமானதேயாகும்; இது உலக அனுபவம்; அவ்விதமிருக்கப் பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்கிப் பிழைப்பதே தொழிலாகக் கொண்டுள்ள எங்களைப்போன்றவர்கள் அதன்

விஷயத்தில் எவ்விதம் பொறுமை வகிக்கக்கூடும்? வட்டியைக் கொண்டே வேறு முதல் தயார் செய்வது எங்கள் தொழில்; அங்ஙனமிருக்க அசலும் கொடாமல், வட்டியிலும் கொஞ்சம் கூடக் கொடாமல் இருக்கும் இந்த மனிதர் விஷயத்தில் எப்படித் தயை காட்டுவது? அங்ஙனம் தயை காட்டினால் எங்களுக்குப் பெருத்த நஷ்ட முண்டாகுமே! நீங்கள் கூறும் விஷயத்தைக் கவனித்தாலோ மனமுருகுகின்றது; அவர் மனைவி உயிர் நீங்கும் தறுவாயிலிருக்கையில், நாங்கள் அவரை வாரண்டில் பிடித்துவிட்டால், அந்த அம்மாளின் ஆன்மா தத்தளித்து எங்களையே சபிக்கும் என்பது எங்கள் உள்ளம் அறியாததன்று; ஏதோ இந்த முறை தங்களுடைய வார்த்தைக் கிசைந்து நாங்கள் செல்கிறோம்; இன்னும் ஒரு வாரம் தாமதிக்கிறோம்; அதற்குள் பணத்தைக் கொடாமல் அவர் மோசம் செய்ய நினைத்தால் அதனால் அவருக்கு மிகுந்த தீங்கு நேரும்; பின்னர் தாங்களும் பணத்திற்கு உத்திரவாதியாவீர்கள்; நீங்கள் சொல்வதைக் கேட்டு நாங்கள் செல்வதால் நீங்கள் எங்களுக்கு உறுதி மொழிச் சீட்டு ஒன்று எழுதித் தரவேண்டும்; அப்படி யளித்தால் அது மெத்த நம்பிக்கையாக விருக்கும்'' என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட மஞ்சுளா, தைரிய லக்ஷ்மியின் பலத்தைப் பெற்றவளாய்ச் சற்றும் தியங்காமல் பேசத் தொடங்கி, "ஆகா! தாங்கள் கேட்பது மிகவும் நியாயமானதேயாம்; யான் உடனே அதை எழுதிக் கொடுக்கிறேன்; அதைப் பற்றித் தங்களுக்குச் சிறிதும் ஐயம் வேண்டாம்; காகிதம் பேனாக் கொடுங்கள்'' என்றாள். உடனே அவர்கள் காகிதம் பேனாக் கொடுத்தார்கள். மஞ்சுளா அதை வாங்கி, அதில்,

ம-ா-ா-ஸ்ரீ. சம்பத்லால் 'அவர்களுக்கு:—உங்களிடம் கடன் பெற்றுள்ள மணிவண்ண ரெட்டியாரின் பணத்தை இயன்ற மட்டும் ஒரு வாரத்திற்குள் கொடுத்து விட்டு பின்னர் ஊருக்குச் செல்வது எனது கடமை; இது கடவுளறியச் சத்தியம்; தங்களுக்கு அவ நம்பிக்கை வேண்டாம்.

இங்ஙனம்,
மணிவண்ண ரெட்டியாருக்காக
வார்சுதாரராய் நிற்கும்
மகாதேவன்''

என்று எழுதி அதையவர்களிடம் கொடுத்து விட்டு, "ஐயன்மீர்! உங்கள் விலாசத்தை இக்கடிதத்தின் மூலம் தெரிந்து கொண்டேன்; நான், எனக்குச் சௌகரியமான சமயத்தில் அங்கே வருவேன்; தங்களுக்குத் தொகையைச் செலுத்தி விடுகிறேன். நீங்கள் கவலைப் படவேண்டாம்; அந்த ஆசாமியைக் கண்டு முதலில் இதற்கு வழி செய்கிறேன்'' என்று கூறினுள். பிறகு அவர்கள் அவளிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு போய்விட்டார்கள்.

அதற்கு மேல் மஞ்சுளா முன்போல மாடிக்குச் சென்று அவளணிந்திருந்த உடைகளைக் களைந்து விட்டுத் தனது சுய உடையை அணிந்து கொண்டு சமயலறைக்கு வேலை செய்யப் போய் விட்டாள். அவ்வீட்டில் அவளைத் தவிர ஓர் கிழவனும், ஓர் வீடுகூட்டியும் இருந்தார்கள். அவர்களில் கிழவன் அப்போது தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். வீடு கூட்டி வீட்டிற்குப் போய் விட்டாள். ஆதலால் மஞ்சுளா மேற் குறித்தவாறு பேசுவதற் கனுகூலமாயிருந்தது.

சமையலறையை அடைந்த மஞ்சுளவல்லிக்கு இன்னது செய்வதென்று ஒரு யோசனையும் புரியவில்லை. அவள், தன்னுடைய கணவனுக்கு அனுகூலமான விஷயங்களை எழுதிவைக்கலாமென்று நினைத்தாள்; உடனே, தன்னுடைய கை எழுத்துக்கள் அவனுக்குத் தெரிந்து விடும் என்ற யோசனை அவளுக்குண்டாகிவிட்டது; அதனுல் அதைச் செய்ய அவள் மனம் இசையவில்லை. பின்னர் அவள், அவனிடம் தான் அன்னியமாது போலவே தூரவிருந்து அவ் விஷயங்களைச் சொல்லலாமா என்று நினைத்தாள். அவ்வாறு நினைத்த போது, தான் பேசுங் காலத்தில் தனது பேச்சின் தோரணையினுலேயும், குரலின் ஒலியினுலேயும் அவன், தன்னைப் பற்றிச் சந்தேகம் கொள்ள ஏதுவாகும் என்ற எண்ணம் அவளுக்குதித்தது. அதனுல் அவள் அதையும் செய்யத்துணியவில்லை. இவ்வாறு எதையும் செய்ய முடியாமல் அபாரமான மனக் குழப்பத்தினுல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

இதற்குள் வெளியே சென்றிருந்த மைலா முதலிய எல்லோ

ரும் வந்து விட்டார்கள். அப்போது இரவு எட்டு மணியாய் விட்டது. மணிவண்ணன் மாத்திரம் வந்து சேரவில்லை. அவனுக்காகச் சிறிதும் தாமதம் செய்யாமல் மைலா, கிழவி முதலியோர் போஜனம் செய்து முடித்துக் கொண்டார்கள். மணிவண்ணன் வராமையினால் நமது அருங்குணபூஷணியாகிய மஞ்சுளவல்லியின் துயரம் முன்னிலுமதிகரித்து விட்டது. அவளுக்குப் பற்பல எண்ணங்கள் மனத்தில் தோன்றவாரம்பித்து விட்டன. அவள், "ஐயோ! இன்று மைலா முதலியவர்கள் கூட்டங் கூடி அவரைத் தொலைத்து விட வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டபடியே இன்றே ஏதேனும் தந்திரஞ் செய்து அவரைத் தொலைத்துவிட்டார்களோ! அல்லது கொலை செய்து என்னவாவது செய்து விட்டார்களோ! எங்கேனும் தண்ணீரில் தள்ளியிருப்பார்களோ! அல்லது விஷம் முதலியன கொடுத்துக் கொன்றிருப்பார்களோ! ஒன்றும் தெரியவில்லையே! அல்லது அவர்கள் கூறிக் கொண்டபடியே எங்கேனும் திருட்டு விஷயத்தில் அவரைச் சம்பந்தப் படுத்தியிருப்பார்களோ! ஆ! கடவுளே! என் பிராணபதிக்கு யார் எத்தகைய ஆபத்துக்களை விளைவித்த போதிலும், பிரகலாதனுக்கு இரண்யன் எத்தனையோ கொடுமைகளைச் செய்த காலத்தில் அக் கொடுமைகளினின்றும் அவனைக் காப்பாற்றியது போல என் பர்த்தாவையும் காத்து ரக்ஷித்தருளவேண்டும்; என்னப்பனே! நரஸிம்மா! பேதை என்னுள்ளத்தைப் பலவிதத்திலும் கலங்கச் செய்து வேடிக்கை பார்த்து விட்டாய்; எனினும் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நீ கிருபை செய்ய வேண்டும்: என் பிராணபதியின் உயிருக்கு ஹானி நேராமல் அவரைக் காத்து ரக்ஷிக்க வேண்டும். ஜகதீசா!" என்று கூறித் தனக்குள் கடவுளைத் தோத்திரம் செய்தவாறு மணிவண்ணனுடைய வரவையே எதிர்பார்த்திருந்தாள். மைலாவின் வீட்டுக்கு வந்த நாள் முதலாக மஞ்சுளவல்லிக்குச் சரியானபடி ஆகாரமே கிடைப்பதில்லை. அவள் தன் ஜாகையை அங்கு அருகிலேயே ஓரிடத்தில் வைத்துக் கொண்டாள். எப்போதேனும் ஒழிந்த நேரத்தில் அவ் வீட்டிற்குச் சென்று ஏதேனும் ஆகாரம் செய்து புசிப்பாள்; ஆகாரம் தயார் செய்யச் சந்தர்ப்பப்படாவிட்டால் பட்டினி கிடப்பாள்; அல்லது கடையில் ஏதேனும் வாங்கியுண்பாள். இவ்விதமாகவே அவள்

காலத்தைக் கடத்தித் தன் பிராணபதியின் சிச்ருஷையிலேயே நாட்டமாக விருந்தாள்.

இரவு 10 மணியாயிற்று. மைலா மணிவண்ணன் வராமையைப் பற்றிச் சிறிதும் கவலையின்றிச் சயனத்திற்கும் சென்று விட்டாள். கிழவியும் மஞ்சுளாவிடம் அவன் வந்தால் சோறு படைக்கும் படிக் கூறி விட்டுப் போய்ப் படுத்து விட்டாள். மணிவண்ணனே வரும் வழியைக் காணவில்லை. மஞ்சுளா என்ன செய்வாள் பாவம்! அவளுடைய உள்ளம் கலங்குகின்றது. அதற்கு மேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை; அவள் கதவை சாத்திக் கொண்டு வீதிக்குச் சென்று சுற்று முற்றும் பார்த்தாள். எங்கும் எந்த விதமான சந்தடியுமில்லை. வீட்டிலும் எல்லோரும் துயின்று விட்டார்கள். மணியும் 11 அடித்து விட்டது. மஞ்சுளா நேரே மெத்தைக்குச் சென்று சாயங்திரம் தான் களைந்து வைத்த தனது பர்த்தாவின் உடைகளை ஓசையின்றி எடுத்துக் கொண்டு கீழே இறங்கி வந்து நடையில் சென்று முன் போல அவ்வுடைகளை அணிந்து கொண்டு வீதிக் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டு வீதியில் இறங்கி இரண்டு மூன்று தெருக்களில் அலைந்து பார்த்தாள். எங்கும் அவன் காணப் படவில்லை. பின்னர் அவள் மற்றோர் தெருவில் சென்றாள். அவ்வாறு செல்லும் போது வழியில் 5-6 பேர்கள் சூழ்ந்த கூட்டம் அவளுக்குத் தென்பட்டது. அவள் அவ்விடத்திற்குச் சென்று பார்த்தாள்.

அக் கூட்டத்தின் மத்தியில் மணிவண்ணன் குடியின் வெறியினால் ஆடிக் கொண்டே நின்றான். அவனைச் சிலர் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் அவனை நோக்கி, "ஏனையா! எங்களிடமிருந்து பணத்தை வாங்கும் போது வெகு சந்தோஷமாக வாங்கினையே! இப்போது கொடுப்பதற்கு மட்டும் ஏன் அழுவேண்டும்? உனக்கு அப்போது பணம் கொடுப்பதற்கே எனக்கு மனமில்லை; எனினும் ஏதோ தாக்ஷணியத்தினுல் கொடுத்து விட்டேன்; ஏனையா! நீ கொடுக்கவேண்டியது ஆயிரமா, ஐந்நூறு! 50 ரூபாய்தானே; இதைக் கொடுக்க எத்தனை நாள் என்னை இழுத்தடிக்கிறுய்! வீட்டில் போய் பார்த்தால் நீ அந்த வீட்டு வழியே

செல்வதில்லை யாதலால் அங்கு அகப்படுவதில்லை; தாசி வீட்டிற்கு வந்தாலோ அங்குள்ளவர்கள் என்னை உள்ளே விடுவதில்லை; அதனால் உன்னை அங்கும் பார்க்க முடிவதில்லை; பின்னர் நான் உன்னைக் கண்ட விடத்தில் பிடித்துக் கொள்வது தான் சரி என்று எண்ணியிருந்தேன்; அவ்விதம் பிடித்துக் கொள்ளும்படி இன்று தான் நீ இங்கே அகப்பட்டாய்; குடியின் வெறியினால் ஆடுகின்றாயே! ஐயோ! உனக்கென்ன தலைவிதியிது! நீ முன் இருந்த நிலைமை என்ன! தற்போதிருக்கும் மாதிரி என்ன! உம்; மகா உத்தமியைப் பிரிந்து வந்ததன் பலன் இது; என்ன ஐயா! பதில் பேசாதிருக்கிறாயே!'' என்று கூறிக் கொண்டே அவன் கையை இழுத்துத் தாறு மாறாக ஆட்டிய வண்ணம் கேட்டான்.

இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டேயிருந்த மஞ்சுளா, தான் ஒரு நிமிடமும் தாமதியாமல் உடனே தனது ஜாகைக்குச் சென்று 5 பவுனில் செய்திருந்த தன் கைக் கொலுசை எடுத்துக் கொண்டு ஓடோடியும் வந்து அந்தக் கூட்டத்தில் தானும் கலந்து கொண்டு, மணிவண்ணனுக்குப் பணம் கடன் கொடுத்தவனை நோக்கி, "ஐயா! சற்று நிதானியுங்கள்; தமக்கு இந்த ஐயா எத்தனை ரூபாய் கொடுக்கவேண்டும்?'' என்று கேட்டாள்.

இதைக் கேட்ட அந்த மனிதன், "இவர் 50 ரூபாய் வாங்கினார்; வாங்கி ஒரு வருடமாகிறது; இன்னும் கொடுப்பதற்கு வழியில்லை; இவர் வாங்கும்போது 10 தினங்களில் கொடுப்பதாக வாங்கினார்; அதுமுதல் ஆசாமி அகப்படவேயில்லை; இன்று தற்செயலாக இவர் சாராயம் குடித்துவிட்டு ஆடிக்கொண்டே வந்தார். அப்படி வருகையில் வழியில் நான் இவரைக் கண்டுபிடித்தேன்'' என்றான். உடனே மஞ்சுளா அவனை நோக்கி, "ஐயா! இவர் எனது அத்தையின் மகனவர்; இவருடைய பணத்திற்காகத் தாங்கள் இந்தக் கொலுசை எடுத்துக்கொண்டு இவரை விட்டுவிடுங்கள்; நான் இவ்வழியாக வருகையில் இங்கு நடந்த விஷயத்தைக் கண்டு வீடு சென்று இதைக் கொண்டுவந்தேன்; நீங்கள் பெற்றுக்கொண்டு போங்கள்'' என்று கொலுசை அவனிடம் அளித்துவிட்டு

மணிவண்ணனை நோக்கித் தன் குரலை மாற்றிக்கொண்டு பேசத் தொடங்கி, "வாருங்கள்" என்று அழைத்தாள்.

மணிவண்ணனுக்கோ அங்கு தன்னை 5, 6 பேர்கள் சேர்ந்து பிடித்திழுத்ததும், பணம் கொடுத்தவன் தன்னைத் திட்டிப் பணத்தைக் கேட்டதும் குடி வெறியால் சரியாகத் தெரியவே யில்லை. குடி மயக்கமே அவனுக்கு அதிகமாக விருந்ததால் அவன் அவர்களுக்குச் சரியானபடி பதிலளிக்க மாட்டாது ஆடிக்கொண்டே இருந்தான். பின்னர் மஞ்சுளா அழைத்தபோதும் பதில் பேசாமல் நின்றான். பின்னர் அவள் அவனைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று மைலாவின் வீட்டிற் சேர்த்தாள். அப்போது மஞ்சுளா, அவனை அப்படியே தன் ஜாகைக்கு அழைத்துக்கொண்டு போய் விடலாமா என்று யோசித்தாள். உடனே, அவ்விதம் செய்தால் அவனுக்கு மயக்கம் தெளிந்த பின்னர் அவன் தன்னைக் கோபிப்ப தோடு தான் அதுகாறும் அவனுக்கு ஊழியம் செய்துவந்த இரகசியத்தையும் தெரிந்துகொள்வான் என்பதும், தன் தலை மொட்டையையும், அழகிழந்த தன்மையையும் கண்டு அருவருத்து மீண்டும் தாசி வீட்டிற்கே சென்று விடுவானென்பதும், அவ்வாறு சென்றுவிட்டால் பின்னர் அவ் வீட்டிற்குத் தான் வேலைக்குப் போகமுடியாதென்பதும் அவளுக்கு விளங்கின. அதனுல் அவ் வெண்ணத்தை விடுத்து மேற்கூறியபடி மைலாவின் வீட்டிலேயே அவனைக் கொண்டுபோய் விட்டுவிட்டுத் தான் சமயலறையில் சென்று உடையை மாற்றிக்கொண்டு வேறு வழியால் சென்று தன் புருஷனுடைய உடைகளை இருந்த விடத்தில் வைத்துவிட்டுத் தன் புருஷன் போஜனம் செய்ய வரும் வேளையை எதிர் பார்த்திருந்தாள்.

மணிவண்ணனுக்குத் தன்னுடைய நிலைமையைச் சிறிதும் அறிந்துகொள்ளக் கூடவில்லை. அவன் அங்குச் சென்றதும் உடனே படுத்துவிட்டான். அன்றிரவு போஜனத்தை அடியோடு விரும்பவே யில்லை; மயக்கத்திலேயே ஆழ்ந்துவிட்டான். அதன் மேல் மஞ்சுளா அவன் போஜனம் செய்யமாட்டான் என்பதை யறிந்து, தன் வேலைகளை முடித்துக்கொண்டு படுத்தாள். அன் றிரவு முற்றும் அவளுக்குச் சிறிதும் தூக்கமே பிடிக்கவில்லை.

அவள் அலகிலா யோசனையில் ஆழ்ந்தபடியே அன்றிரவைக் கழித்தாள்.

மறுநாள் உதயமாயது. மஞ்சுளாவின் மனத்தில், "நாம் கடன்காரர்களுக்கு எந்த வழியில் தொகை சேரும்படி செய்வது?" என்ற யோசனையே பலத்துவிட்டது. அன்றும் மணிவண்ணன் வெளியேறிப் போய் இரவில் வீட்டிற்கு வரவில்லை. அதனால் முதல் நாளிற் செய்ததுபோலவே மஞ்சுளவல்லி மாறுவேட மணிந்து, பலவித யோசனைகளோடு அவனைத் தேடிக்கொண்டு சென்றாள். அப்போது இரவு 11 மணிக்கு மேலாகி விட்டது. அந்த இராக்காலம் மிகுந்த பயங்கரமாக விருந்தது. அத்தகைய நிலையில் அவள் தெருவில் தேடிக்கொண்டே செல்கையில் தலை கால் தெரியாது குடித்துவிட்டுச் செல்லும் 4 சோதாக்கள் அவ்வழியில் வந்தார்கள். மஞ்சுளா அவர்களைக் கண்டு சற்று பயந்தவாறு வீதியின் ஓரமாகச் சென்றாள். உடனே அந்தச் சோதாக்கள் அவளை நோக்கி, "அடே! ஜோபியில் என்ன விருக்கிறது! அதை இப்படிக் கீழே வை" என்று கேட்டவாறு அவளை வளைத்துக் கொண்டார்கள். அந்தோ! இந்த எதிர்பாராத பேராபத்தான சம்பவத்தினுல் நமது மாது சிரோமணி நடுநடுங்கிப் பூனையின் வாயிலகப்பட்ட எலி "போலத் துடித்து நின்றுவிட்டாள்.

---

## 16—வது அதிகாரம்

### அழகிய பூங்காவில் அதிசய புஷ்பங்கள்

13-வது அதிகாரத்தினிறுதியில், நமது சற்குண பூஷணியாகிய மரகதவல்லி ரெயிலிலிருந்து திடீரென்று விழுந்து விட்டாளென்று நாம் கூறியிருக்கின்றோ மல்லவா? இனி அவளுடைய கதி என்னவாயிற்று என்பதைப் பற்றிக் கூறத் தொடங்குவாம். அவள் அப்படி விழும்போது அவளுடைய உயிர் என்னபாடு பட்டிருக்கும்? அதை நாம் கூறவேண்டியதில்லை; வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம். அவள் விழுந்ததைப் பார்த்து அருகிலிருந்தவர்கள்

கூக்குரலிட்டவுடனே மற்றொரு புறத்தில் உட்கார்ந்திருந்த ஒருவன், உடனே துள்ளி எழுந்து ஓடிவந்து ரயிலை நிறுத்தும் விசையைப் பலமாக இழுத்தவாறு கூச்சலிட்டான். அதே தருணம் பக்கத்து வண்டியில் உட்கார்ந்திருந்த தம்பதிகளிருவர் இந்த கோர சம்பவத்தை தற்செயலாகக் கண்டு துடித்தவாறு அவர்களும் "கூ, கூ" என்று சத்தமிட்ட வண்ணம் விசையைப் பற்றி இழுத்தார்கள்.

ரயிலை நிறுத்தக்கூடிய விசையை இழுத்ததினால் ரயில் 10 அடி தூரம் சென்று நின்றது. உடனே அங்கு கூட்டம் கூடிவிட்டது. ரயில் போய்க்கொண்டிருக்கையில் விழுந்துவிட்டதால் மரகத மணியின் தேகத்திலும், தலை, முகம் முதலிய விடங்களிலும் பலமான காயம் பட்டுவிட்டதால் ரத்தம் கிளம்பி வழியத் தொடங்கியது. கீழே கிடந்த கற்கள் தேகத்தில் நன்றாக குத்தி காயத்தை யுண்டாக்கிவிட்டன. வண்டியிலிருந்து சங்கிலியை இழுத்தவாறு திடீரென்று குதித்த ஒரு மனிதனும் பக்கத்து வண்டியிலிருந்து இறங்கிய தம்பதிகளும் மரகதமணி விழுந்த விடத்திற்கு ஓடோடியும் வந்து அவளை சர சர வென்று தூக்கி ரயில் பாதைக்கு 10 அடி ஒற்றிக் கிடத்தினார்கள். அப்போது பின் நிலவாகையினால் வெளிச்சத்தில் இவளை மரகதவல்லி என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டவுடனே அம் மூவரும் திடுக்கிட்டு வியந்து விட்டார்கள். அவர்களை யறியாது துக்கம் மூண்டுவிட்டது.

மரகதவல்லிக்கு அப்போது சிறிது ஸ்மரணை இருந்தது. அவளும் அங்கு வந்த தம்பதிகளையும் கண்டுகொண்டு ஆச்சரிய மடைந்தவாறு மிகவும் ஹீன சுரத்தினால் பேசத் தொடங்கி, "ஆ பாலாமணி! நான் இன்னாரென்பதை வெளியிடாமல் உன்னுடைய சொந்தமானவள் என்றும், தேக அசுகத்தினால் வாந்தி செய்த விடத்தில் விழுந்துவிட்டாளென்றும் கூறிவிடு. பின்னர் பேசிக் கொள்ளலாம்." என்று கூறி முடிக்குமுன் அவளுக்குக் களைப்பு மேலிட்டு ப்ரக்ஞை யற்று விட்டது. கூட விருந்த மனிதனும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு எல்லோரும் ஒன்றாக வந்தவர்கள் போலவே நடிக்கத் தொடங்கி' ஐயோ! வாந்தி பண்ணுவதற்காக

வந்து விழுந்துவிட்டாயே! என்று கூறிக்கொண்டே மரகதத்தின் முகத்தி லொழுகும் ரத்தத்தைத் துடைத்து அவளை மடியில் போட்டுக்கொண்டு கத்த வாரம்பித்தார்கள். இதற்குள் மற்றைய ஜனங்களும் வந்து கூடிவிட்டதுடன் ரயிலைச் சேர்ந்த உத்யோகஸ் தர்கள் வந்துவிட்டார்கள். அங்கு விழுந்து கிடக்கும் மரகதமணி யைக் கண்டு "யார் இந்தம்மாள்? ஏன் விழுந்தார்கள்?" என்று விசாரிக்கத் தொடங்கினார்கள்.

இது கேட்ட பாலாமணியும் அவள் புருஷனும், கூட விருந்த மனிதனும் முன் மரகதம் கேட்டுக்கொண்டது போலவே கூறி விட்டார்கள். அவ்வாறு அவர்கள் கூறியது மிகவும் பொருத்த மானதாக விருந்தமையால் அதைப் பற்றி அதிகமான விசாரணை எதுவு மின்றி மரகதத்தை அந்த இரயிலிலேயே தனித்த ஓர் வண்டியில் படுக்கச் செய்து அடுத்த ஸ்டேஷனை யடைந்து அங்குள்ள ஆஸ்பத்திரிக்கு அவளை ஓர் வண்டியில் போட்டுக் கொண்டு போய் விட்டு சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார்கள். போலீஸார் வந்து விசாரித்ததில் மரகதம் தானக தவறி விழுந்து விட்டாள் என்பதனுலும், அவள் உயிருடனிருப்பதனுலும் அதிக மான விசாரணை நடத்தாமல் போய் விட்டார்கள்.

ஆஸ்பத்திரியில் கிடக்கும் மரகதவல்லி 4, 5 நாட்கள் சென்ற பின்னரே தனது சுய உணர்வைப் பெற்றுக் கண்ணைத் திற ந்து பார்த்தாள். அப்போது அவள் பக்கலில் பாலாமணியும், சற்று தூரத்தில் அவள் புருஷனும், மற்றொருவனும் உட்கார்ந்திருப்பதைக் கண்டு தாங்க மாட்டாத துயரத்தினல் மனமுருகி வாய்விட்டுப் பேச மாட்டாது கோவெனக் கதறியழுது விட்டாள். தன்னை தனக்கு முக் கியமாகத் தெரிந்த பாலாமணியே கண்டு கொள்ள நேர்ந்து விட்டதே என்று வருந்தினள். பாலாமணியும் அவள் புலம்புவதைக் கண்டு சகியாதவளாய் கதறியவாறு "ஹா! எனது சகோதரி! உனக்கு இத் தகைய ஆபத்து நேருவதற்குக் காரணம் யாது? உனது சரிதை யைக் கேட்டு யான் தபித்ததை ஈசனே யறியவேண்டும். பல பேர் பல மாதிரியாகக் கூறிக் கொண்டார்களே! உனது பர்த்தா கூறியகதையோ வெகு விநோதமாக விருந்தது. உண்மை வரலாறு

யாது? நீ இது காறும் எங்கிருந்தாய்? உன் கருவிலிருந்த சிசு என்ன குழந்தையாகப் பிறந்தது? ஆணு, பெண்ணு? உன்னுடைய உத்தம மான மனதின் அன்பின் முதிர்ச்சியால் எனக்குச் செய்த உதவியா லும், ஆசீர்வாதத்தினுலும் எனது கணவரிடம் யான் போய்ச் சேர்ந் தேன். அதோ எனது கணவரும் இங்கு வந்துள்ளார். சகோதரீ! மற்ருெரு விஷயம். எங்களுடன் கூடவே ஓர் மனிதர் ரயிலில் வந்து உன் விபத்தினுல் திடுக்கிட்டு உன்னைத் தூக்கி எடுத்து எங்களுடன் அவரும் கலந்து கொண்டு வெகு அன்புடனும் அக்கரையாயும் உன்னைக் கவனித்து வருவதோடு, சதா கண்ணில் நீர் பெருகிய வாறு இருக்கிருர். அவர் உன்னை நன்ருகத் தெரிந்து கொண்டிருக் கிருர் என்பது தெட்டென விளங்குகின்றது. அதோ அவரும் உனது விழிப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர். அவரை இங்கு அழைக்கிறேன். அவர் யார் என்பதைத் தெரிந்து கொள்வாய்!" என்று கூறியபடியே அங்கு வெளியிலிருந்த மனிதனை அழைத்து வந்தாள்.

அந்த மனிதனும் மரகதத்தினருகில் வரும்போதே தாங்க மாட்டாத துயரத்தினுல் புலம்பியவாறு "ஹா! என்ன இது! மரகத வல்லி! உன் கதி இவ்விதமெல்லாம் அவதியடையவோ முடிந்தது!" என்று கூறிக் கொண்டே அவள் பக்கலில் நின்ருன். நமது மரகத மணிக்கோ அந்த மனிதனைச் சட்டென இன்னுரென்று தெரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் அம்மனிதனுடைய கனிவான அன்பையும், வாஞ்சையையும் கண்டவுடன் 'இம்மனிதன் யாராக விருக்கக் கூடும்?' என்ற யோசனை கிளம்பிவிட்டது. அவளுடைய அப்போதிய நிலைமையில் ஒன்றையும் கண்டு கொள்ளமுடியாமல் தவித்தவாறு அந்த மனிதனை பரிதாபமான பார்வையினுல் நோக்கி, "ஐயா! இப்பாவியினிடத்தில் இத்தகைய அன்பை வைத்திருக்கும் தாங்கள் யாரென்பதைத் தெரிந்து கொள்ள மாட்டாது விழிக்கின் றேன். தம்மைப் பார்த்தால் மகா ஞானி போலும், தீர வைராக்ய முள்ளவர் போலும், கருணை நிறைந்த மனத்தினர் போலும் தமது முக ஒளியானது விளக்குகின்றதே! தாங்கள் அடியாளை எவ்விதம் தெரிந்து கொண்டீர்கள் என்பதையும், புண்ணியாத்மாவாகிய தாங்

கள் யார் என்பதையும், தயவு செய்து கூற வேண்டும்'' என்று வெகு மரியாதையுடன் கேட்டாள்.

இதைக் கேட்ட அந்த மனிதன் கண்ணில் நீர் தாரைதாரை யாகப் பெருகிய வண்ணமாகவே பேசத் தொடங்கி, "ஆகா! மரகத மணி! தற்போது நம்முடைய கால விதியின் பயனால் ஒருவரை யொருவர் தெரிந்து கொள்ளவும் மாட்டாத நிலைமையில் கடவுள் நம்மை வைத்து விட்டார். எனினும் என்னுடைய விதியைக் காட்டினும் உன்னுடைய கதியை நினைக்க என் அங்கமே அனலாக மாறுகின்றது. அம்மா! மரகதம்! பாவி என்னை தாமோதரன் என்று கூறிக் கொள்ளவும் வெட்கமாக விருக்கின்றது. இனி மேல் என்னைத் தெரிந்து கொள்வாயல்லவா?'' என்றான்.

இதைக் கேட்ட மரகதம் அலறியவாறு திடுக்கிட்டு, வியந்து, ப்ரமிப்படைந்து, "ஆகா! எனதரிய அத்தானுகிய தாமோதரனு நீ! ஐயோ! காலக் கொடுமையே! இதென்ன விது! உன்னைப் பார்த்தால் சுத்த பரதேசிபோலக் காணப்படுகின்றாயே! இதென்ன காஷாயம்! தீக்ஷை என்ன! இவை எல்லாம் என்ன கோலமப்பா! நீ இத்தகைய கோலங்களணிவதற்கு யாது காரணம்? நீ எங்கிருந்து எங்கு செல்கிறாய்? வீட்டில் அத்தை, உன் பிதா, என் மதா பிதாக்கள், தம்பி நரஸிம்மன், உன்னரியகாதலி ராஜேச்வரி முதலிய யாவரும் சுகமாக விருக்கின்றார்களா?'' என்று பல பல கேள்விகளை அடுக்கடுக்காய் கேட்டு வியப்பே வடிவாய் அபாரமான மனத் தாங்கலுடன் தாமோதரனை நோக்கினாள்.

சற்றேறக் குறைய ராஜேச்வரியின் முகமும் மரகதமணியின் முகமும் சாயல் ஒன்றாக விருப்பதால் தாமோதரன் மரகதவல்லியைப்பார்த்தவுடனே ராஜத்தையே பார்ப்பது போலான மன மகிழ்ச்சியடைந்தான். எனினும் மகா புத்திமானும், மேன்மை குணம் பொருந்தியவனுமாகையால் தனது மனத்திலுள்ள சுக துக்கங்களை வெளியிட்டுக் கொள்ளாது அடக்கியவாறு பேசத் தொடங்கி, "எனதன்புள்ள மாமன் செல்வி! உன்னுடைய ராமாயணம் எவ்வெவ் விதமாக நடந்துள்ளதோ அதே போல எனது ராமாயண

மும் ஒரு விசித்திரமாக நடந்து, முடிவையும் அடைந்து விட்டது. ஆகையால் அவற்றை இனிக்கூறுவதும் அவசியமன்று. மேலும், உன்னுடைய இன்னிலைமையில் நீ உன் மனத்தில் உன் விஷயமாக விருக்கும் துயரத்துடனிருப்பதே உனது நிலைமைக்கு மிகுந்த அதிர்ச்சியாயிருக்கும். அதோடு எனது விஷயத்தையும் நீ தற்போது தெரிந்து கொள்ள வேண்டாம். உன் தேகம் குணமடைந்த பின்னர் தெரிந்து கொள்ளலாம். அதைப் பற்றி நீ கவலையை கொள்ள வேண்டாம். முதலில் உன்னுடைய சரித்திரத்தின் உண்மையை சுருக்கமாகக் கூற முடியுமாயின் இப்பொழுது விளம்பு; இல்லையேல் பிறகு பார்த்துக் கொள்ளலாம்; கண்ணீர் விடாதே" என்று கூறித் தேற்றினன்.

இதைக் கேட்ட மரகதம் கட்டு மீறிய துயரத்தினுல் கலங்கிக் கொண்டே "அத்தான்! என்னுடைய சரித்திரச் சுருக்கத்தைக் கூறுவதற்கு என் மனமும் நாவும் எழவில்லையப்பா! என் மனக் கொதிப்பைத் தெரிவிக்க என்னுள்ளம் சம்மதிக்கவில்லை. நீ சொல்லியது போலவே பின்னர் தெரிவிக்கிறேன். எனக்கு மயக்கம் வருகின்றது." என்று கூறியவாறு கண்ணை மூடிவிட்டாள். பின்னர் அவளுக்கு மயக்கம் தெளிவிக்க வேண்டிய சிகிச்சையைச் செய்தார்கள். பிறகு பாலாமணியும் அவன் புருஷனும் இரண்டு தினங்கள் வரையில் அங்கு தங்கியிருந்து, பின்னர் ஊருக்குப் போகப் புறப்பட்டார்கள். மரகதம் வெகு மன வருத்தங்கொண்டு தான் இன்னும் என்னென்ன அனுபவங்கள் அனுபவிக்க வேண்டுமோ அதனுல் தான் பிழைத்துக் கொண்டதாகக் கூறிக் கதறியதுடன், தான் பிழைத்திருக்கின்றதை எவருக்கும் அறிவிக்க வேண்டாமென்று வேண்டிக் கொண்டதுடன், தன்னுடைய உண்மையான வரலாற்றை அவர்களிடம் கூறுது மறைத்து விட்டுத் தன் பர்த்தா கூறிய கட்டுக் கதைக்கு அனுசரணையாகவே ஓர் கதையைக் கூறி தான் பைராகியிடமிருந்து தப்பித்துக் கொண்டு வந்து விட்டதாயும் இனி மேல் தன் பர்த்தாவிடமோ, பெற்றோரிடமோ செல்வதற்கு அவமானமாக விருக்கிறதென்றும் அதனுல் உயிரை விடத்துணிந்து விழுந்து விட்டதாயும் பொருத்தமாகக் கூறிவிட்டாள்.

இதைக்கேட்ட பாலாமணி நிரம்பவும் வருத்தமடைந்து தான் மரகதத்தின் விஷயத்தைப் பிறருக்குத் தெரிவிக்கவில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டாள். தன் கஷ்டம் நீங்கிற்றென்றும், தன்னை தன் நாயகனே வந்து அழைத்துச் சென்றதாயும் இப்போது தன் மாமி வீட்டாருக்கும் பெற்றோருக்கும் ஒருவித மனஸ்தாபமு மில்லை என்றும் சொல்லி தான் ஊருக்குச் சென்று மறுபடியும் வந்து பார்த்துக்கொண்டு போவதாகக் கூறி விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டாள்.

பின்னும் சில தினங்களாயின. மரகதவல்லிக்கு ரணங்கள் சிறுகச் சிறுக ஆறத் தலைப்பட்டன. அவளுடைய தேக போஷணையை நமது தாமோதரன் வெகு சிரத்தையுடன் கவனித்து வந்தான். மரகதமணி தாமோதரனுடைய வரலாற்றை அறிய மிக்க ஆவல் கொண்டவளாகவே இருந்து வந்தாளாகையினால் அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் தருணத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து ஓர் நாள் தாமோதரன் வந்திருக்கையில் அவனிடம் மெல்ல பிரஸ்தாபிக்கத் தொடங்கி, "அத்தான்! அன்று உன்னை நான் உன் விஷயமாக விசாரித்த பொழுது பிறகு தெரிவிப்பதாகச் சொன்னாயே! எனக்கதை யறிய ஆவல் மிக்க அதிகமாயுள்ளபடியால் நீ யான் கேட்ட விஷயங்களைத் தெரிவிக்க வேண்டும் அதோடு எனது பர்த்தா விஷயமாக உனக்கேதேனும் தகவல் தெரியுமாயின் அதையும் கூற வேண்டுகிறேன்" என்று வெகு வணக்கத்துடனும், பரிதாபமான பார்வை யுடனும் கேட்டாள்.

இதைக் கேட்ட தாமோதரன் அபாரமான துக்கத்தினால் சகிக்க வியலாத வருத்தம் பொங்கிக் கண்ணீர் வடிந்தவாறு பேசத் தொடங்கி"அம்மா! மரகதம்! நான் உன்னைப் பார்த்தது முதல் உனது உண்மையான சரித்திரத்தை அறிந்துகொள்ள என்னுள்ளமும் பறந்து தவித்தது. முக்கியமாக உனது சரித்திர வினோதக் கூற்றில் என் மாமனார் என்னையும் சம்பந்தப்படுத்தி யிருப்பதன் பயனாக நான் அதை யறிய மிகுந்த ஆவல் கொண்டிருந்தேன். எனினும், உன்னுடைய வெகு அபாயகரமான நிலைமையில் உன்

மனத்திலும் விசனத்தைத் தாக்கூடிய விஷயங்களை யூட்டுதல் கூடாதென்றும் உன்னுடைய 'நீறு பூத்த நெருப்பு' போல விருக்கும் துயரத்தையும் கிளப்பி அதனுல் அதிர்ச்சியை உண்டாக்கக் கூடாதென்ற நோக்கத்தினுலும் நான் இதுகாறும் வெகு பிரயாசையுடன் பொறுத்து வந்தேன். இன்னமும் உனது நிலைமை முற்றும் குணமடையவில்லையெனினும் உன் மனத்தின் அவா பூர்த்தியாகாவிட்டால் அந்த வேதனையே தேக சுகத்திற்குப் பங்கம் செய்யும்; ஆதலால் கூறுகிறேன் கேள்'' என்று கூறி, ராஜேச்வரியின் தம்பியின் அக்ஷராப்யாச தினத்தன்று தான் அங்கு சென்றது முதல் பின்னர் ராஜத்தின் கடிதம் வந்தவரையிலுள்ள சகலமான விஷயங்களையும் ஒன்று விடாது கூறி முடித்ததுடன், தன் மாமனுர் எழுதிய கடிதத்தையும், பின்னர் ராஜம் எழுதிய கடிதத்தையும் தன் சட்டைப் பையினின்றும் எடுத்து மரகதமணியின் கையிலேயே கொடுத்துப் படிக்கச் சொன்னுன்.

இந்த அதி விநோதமான வரலாற்றைக் கேட்ட மரகதமணி அடக்கமுடியாத துயரம் மேலிட்டுக் கதறிவிட்டாள். "ஐயோ! என் தந்தையின் குணம் இவ்விதமும் மாறிப் பாழாகிவிடுமோ! அனியாயமாக உயிரையும் உடலையும் பிரிப்பதுபோல இவ்விதம் உன்னையும் என் ராஜத்தையும் பிரித்துவைக்கலாகுமா! அடாடா! எனது விஷயத்திலுமா உன்னை அப்பா சம்பந்தம் செய்துவைத்திருக்கிறுர்! என்ன மதியீனம்! என்ன அறிவின்மை!'' என்று கூறியவாறே கடிதங்களைப் படித்து முடித்தாள். அந்தோ! அவளுடைய ஆத்திரத்திற்கும், கோபத்திற்கும், அனுதாபத்திற்கும் ஓர் எல்லையே இல்லாது மீறிவிட்டது. அவளுக்கு ஆவேசம் வந்துவிட்டதுபோலான நிலைமையை அடைந்துவிட்டாள். கண்களில் நீர் ஊற்றெடுத்துவிட்டது. "ஐயோ! அத்தான்! எனக்கு தற்போதுள்ள நிலைமையை விவரித்துக் கூறுவதற்கே சாத்தியமாகவில்லையே! என் தந்தை தற்போது என்னெதிரில் இருந்தால் அவரை யான் என்ன சொல்வேனோ, எனக்கே தெரியவில்லையே! ஐயோ! படுமோசமே! மந்திரவாதியாம், தந்திரவாதியாம். இதெல்லாம் வெறும் கட்டுக் கதையாக வல்லவா விருக்கிறது. உண்மையில் என்னை பைராகி அழைத்துச் சென்றிருந்தாலல்லவோ

மேற்படி விஷயங்களும் மந்திரமும் உண்மையாக விருக்கும்? முதலுக்கே மோசமாகவிருக்கையில் வட்டிக்கு வாய்தாவா" என்பதுபோல எனது விஷயம் நடந்துள்ள விவரத்தைக் கடவுளும் யாங்களும் தவிர மற்றையோர் அறிந்திலரே! அங்ஙன மிருக்க கேவலம் ஒன்றையு மறியாத நிரபராதியாகிய உன் தலைக்கு யாரோ வேண்டுமென்று வைத்த கொள்ளியே இது என்பதில் சிறிதும் ஆட்சேபமே இல்லை. ஐயோ! தாமோதரா! என் கண்மணி ராஜத்தின் கடிதத்தைப் படிக்க என்னுள்ளம் உருகித்தவிக்கின்றதே! என்ன செய்வேன்? எந்த சண்டாள வஞ்சனைக்காரன் வீட்டில் வந்து உட்கார்ந்து மந்திரம், தந்திரம் என்று கூறி வீட்டையும் வீட்டிலுள்ளோரையும் வீட்டைச் சார்ந்தோரையும் அடியுடன் மடியவைக்கப் பார்க்கின்றானோ தெரியவில்லையே! அடாடா! அனியாயமே! உன் மண்டையை உடைத்து உனக்குத் தீங்கிழைக்க அந்த மனிதனுக்கு எவ்விதம் தான் மனந் துணிந்ததோ? இத் தகைய குணங்களெல்லாம் வரப்போவதை யான் அங்கிருந்தால் தடுத்துவிடுவேன் என்றுதான் முதலிலேயே என்னை ஈசன் பிரித்து விட்டான் போலும். ஐயோ! நமது குடியைக் கெடுக்க யாரோ ஒரு கோடரிக் காம்பு காத்துக் கொண்டிருக்கிறது. அது யார் என்பதைக் கண்டுபிடித்துப் பழிக்குப் பழி தீர்த்தாலன்றி என் னுள்ளக் கொதிப்பு அடங்காது. என் வயிற்றுத் தணல் அவியாது. ஐயோ! தருமதேவதை என்றாலும் பூமிதேவி என்றாலும் உனக்கே தகும் என்பது சிறிதும் ஐயமே இல்லை. நீ ரங்கோனிலிருந்தவன் இங்கு எவ்விதம் வந்தாய்? பின்னர் அவ்விடத்து செய்தி யாதே னும் தெரியுமா?" என்று நிரம்பவும் வருத்தத்துடன் கேட்டாள்.

இதைக் கேட்ட தாமோதரனுக்கு அடங்கியிருந்த வருத்தம் முற்றும் மேல் கிளம்பிவிட்டது. அபாரமான சோகத்துடன் தள்ளாடியபடியே பேசத் தொடங்கி "ஆகா! மரகதமணி! அவரவர் தலைவிதிப்படியே அவரவர் அனுபவித்துத் தானே தீரவேண்டும். ஐயோ! உன்னுடைய சரிதையை சுருங்கக் கூறிவிட்டாலன்றி என் மனம் சமாதான மடையாது. நீ முதலில் நடந்த விஷயமே வேறு என்று கூறியதால் ஏதோ பெருத்த நூதனமான சம்பவம் நடந்

திருக்குமென்று தோன்றுகின்றது. அந்த சம்பவமானது உன் உயிருக்கே ஹானி வைக்கத்தக்க விதம் நடந்துவிட்டதென்பது எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. உனக்கும் உன் பர்த்தாவுக்கும் உள்ள விஷயத்தை யான் கேட்பது கூடாது. என்றாலும் அளவுக்கு மிஞ்சிவிட்ட விஷயத்தை முக்கியமாக பாதிக்கக் கூடிய இரண்டொருவர் அறிந்துகொள்வது அத்யாவச்யமானதேயாம். இதனால் உனக்கு தப்பிதமே இல்லை. காரியத்தையும் காரணத்தையும் உத்தேசித்து நீ கூறவேண்டுவது வெகு முக்கியமாகையால் தடையின்றி கூறிவிடு. அது விஷயமாக நான் என்னாலான முயற்சியை செய்து உனது கஷ்டத்திற்கு நிவாரணம் ஏதேனும் உண்டோ வென்று வழி தேடுவதுடன் என்மீது மாமன் கொண்டுள்ள வீணான எண்ணத்தையும் களைந்துவிட முயற்சிக்கின்றேன்'' என்று உறுதியாகக் கூறினான்.

இதைக் கேட்ட மரகதமணிக்கு தன் விஷயத்தின் உண்மையை வெளியிடவும் மனமிசையவில்லை; வெளியிடாது வாளாவிருந்தாலும் தன் பிதா வீணான மந்திரவாதி படுபாவியின் தூண்டுதலாகிய ஞாபத்தினால் குடும்பத்திற்கே பெருத்த விபத்துக்களை விளைவிப்பதுடன் நிரபராதியாகிய தாமோதரனுடைய உயிரும் நீங்கிவிடக் கூடிய நிலையைச் செய்துவிடுகிறார்; ஆதலால் முக்கியமான சில நன்மைகளை உத்தேசித்துத் தனது சரித்திரத்தை நடந்தது நடந்தவாறு, தான் முதலில் தன் கணவனை மகிழ்ச்சியுடன் விருந்துண்ண அனுப்பியது முதல் குழந்தையைக் கொண்டு தன் கணவனின் வீட்டுத் திண்ணையில் சேர்த்துவிட்டுத் தான் உயிரை மாய்த்துக்கொள்ளும் பொருட்டே ரயிலிலிருந்து விழுந்துவிட்டது வரையில் சவிஸ்தாரமாகக் கூறி முடித்தாள்.

அந்தோ! இந்த அனியாயமானதும் சிறிதும் நம்பத்தகாததுமான இக் கோரமான விஷயத்தைக் கேட்டவுடன் தாமோதரன் திகைப்பூண்டை மிதித்தவன் போல, திகைத்துப்பிரமித்து, கட்டு மீறிய வியப்பினால் அபாரமான மனக் கிளர்ச்சி யடைந்து, அதன் மூலம் துயரம் மேலிட்டுக் கண்ணீர்பெருக இன்னது பேசுவதென்பதை யறியாது பரம சங்கடமான நிலைமையில்

தம்பித்து விட்டான். "ஆ! ஆ!" என்ற பெருமூச்சும் ஓர் விதமான ஆத்திரமும் அவனுள்ளத்தினின்று எழுந்து அவனுடைய அப்போதிய நிலைமையை முற்றும் காண்போர் கண்டு கொள்ளும் வண்ணமாக அவனுடைய தோற்றம் காணப்பட்டது. "ஐயோ! மரகதம்! எத்தனையோ விதமான யோசனைகளை எல்லாம் யான் எண்ணிவருந்தினேனே யன்றி இவ்விதமான கண்ராவியான சம்பவம் நேர்ந்திருக்குமென்று யான் கனவிலும் கருதவில்லையே! ஐயோ ! அந்த தணிகாசலத்திற்குத்தான் அறிவு முற்றும் மழுங்கி பாழடைந்தா போய்விட்டது? ஐயையோ! அக்கினிக்குச் சமதையாகிய உன்னையா அந்த அறிவிலி அவ்விதம் செய்தான்? அடாடா! உன் சரித்திரத்தைக் கேட்க என் மனம் கரைந்து உருகிப் பாகாயோடி வதை செய்கின்றதே; ஐயோ! தவம் செய்தாலும் கிடைப்பதற்கரிதான உனது கருவின் சிசுவுடன் நீ யலைந்த வயிற்றெரிச்சலின் கொடுமையும் உன் குழந்தையை நீ வெகு புத்திசாலித்தனமாக அவரிடத்திலேயே சேர்த்துவிட்டதன் மகிமையும் கேட்கக் கேட்க எனக்கு இன்னது பேசுவதென்பது விளங்கா வகையில் மனம் தத்தளிக்கின்றதே! ஐயோ! மரகதம்! உன்னை அந்த முட்டாள்தான் இவ்விதம் செய்தான். மகா புத்திசாலியாகிய நீ உடனே உனது பெற்றோரிடத்தில் சென்று செய்தியை உரைக்காது வெளியேறிவிடலாகுமா? நீயேன் அவ்விதம் செய்திருக்கலாகாது?" என்று வெகு உருக்கத்துடன் கேட்டான்.

இது கேட்ட மரகதம் கலங்கியவாறு பேசத்தொடங்கி "ஆகா! அத்தான்! எல்லாம் தெரிந்த நீயும் இவ்விதம் என்னைக் கேட்கலாகுமா? உலகத்தில் எப்போது பெண் ஜென்மம் எடுத்தேனோ அப்போதே நான் ஒருவர் கீழ் அடிமையாகிவிட்டேன். தற்போது எனது அடிமைத்தனம் என் பர்த்தாவின் கீழ் ஏற்பட்டுவிட்டது. அவருக்கு உரித்தான இச்சொத்தையவர் என்ன செய்தாலும் அவருக்கேயது உரித்தானது. என்னுடன் கூடவிருந்து இத்தனை காலமாகப்பழகிய மனிதரே என்னிடம் சந்தேகங்கொண்டு என்னை அன்னியனுக்கு மனம் துணிந்து முறியல் சீட்டு எழுதிக்கொடுத்துவிட்ட பின்னர் என் பிழைப்பும் ஓர் பிழைப்பாமோ! கணவனே கண்டு

கழித்திட்ட பின்னர் என்னுயிர் இருந்தாலென்ன, இறந்தாலென்ன? அவர் மனத்திற்கு நான் நஞ்சாகிவிட்டேன். பின்னர் நான் யாருக்குப் பஞ்சாமிருதமாக விளங்கவேண்டும்? என்னை என் கணவர் முழு மனத்துடன் அன்னியனுக்குத் தத்தம் செய்துவிட்ட பின்னர் நான் தாய் வீடு சென்றால்மட்டும் என்மீது என் ப்ராணபதிகொண்ட எண்ணம் மாறிவிடுமா? மேலும் நிரம்பவும் ஆபாசமானதும், பிறர் கண்டு பரிகசித்து நகைக்கக்கூடியதுமான என் விஷயத்தை என் வாயினாலேயே பிறரிடம் கூறவும் வேண்டியிருந்ததா! அவ்விதம் கூறி யான் அவ்விடம் சேர்ந்தாலும் முறியல் சீட்டு பெற்ற மனிதன் என்மீதுள்ள அடங்காத கடுங்கோபத்தால் என்னைப் பழிக்குப்பழி வாங்காமலும், வேண்டுமென்றே என்னை மானபங்கம் செய்ய முன் வராமலும் வாளாவிருந்துவிடுவானா! எனது பெற்றோராகவிருந்தால் மட்டும் எனது இழிவான நிலைமையையும் என்னை அன்னியனுக்கு அடிமையாக்கிவிட்டதையும் கூறுவதற்கு என் மனம் துணிந்து சம்மதிக்குமா? இவை எல்லாம் யோசித்தே யான் உயிருடன் அரை வினாடியும் இருக்கலாகாதென்ற தீர்மானத்தின்பேரில் வெளியேறினேன். அவ்விதம் வெளியேறி உயிரிழக்கத் துணிந்தும் மகா கொடிய என்னுயிர் போகாது தடுக்கப்பட்டு, இதுபரியந்தம் இருந்து என் வயிற்றுச்சுமையை யிறக்கிவிடவும், உன்னை சந்திக்கவும் வேண்டி கடவுளின் கட்டளை யிருந்ததால் ரயிலிலிருந்து விழுந்த விபத்தும் நிவர்த்தியாகிவிட்டது. கணவனின் மனத்திற்கு சினத்தையுண்டாக்கிய பரம பாதகி என்ற பெயரைப் பெற்ற பின்னர் இனி என்னுடைய சடலம் எவ்விதம் ஆனால் என்ன?" என்று கூறிக் கண்ணீர் வடித்தாள்.

இவள் கூறிய விஷயங்களை எல்லாம் கேட்ட தாமோதரனுக்கு அவள் கூறிய யாவும் மிகவும் பொருத்தமானதாகவே இருந்தாலும், மகா உத்தமியும் புத்திசாலியுமான மரகதமணியின் தீர்மானத்தைக் கண்டித்து பதில் கூற முடியாமல் திகைத்து உட்கார்ந்துவிட்டான். பின்னர்ச் சிறிது தெளிந்து பேசத்தொடங்கி "ஆகா! மரகதம்! நீ கூறியது முற்றும் உண்மையே! ஏதோ மதியீனத்தினால் நான் கேட்டுவிட்டேன். கணவன் மனம் கோணும்படியாக நடந்துவிட்ட

பின்னர் அக்காரிகையின் வாழ்க்கை யோர் உயர்தர வாழ்க்கையாகுமோ! ஒருபோதுமாகாது. நீ நல்ல விவேகியாகையால் உன் செய்கைக்கு ஒரு குற்றமும் சொல்லுதற்கு இடமுண்டோ! உன்னுடைய கணவன் உன்னைப் பிரிந்த பின்னர் அவர் எத்தகைய மன வேறுபாட்டுடன் இருக்கிறார் என்பதை யிதுபரியந்தம் யானறியேன். ஆகையினால் அதை இனி முதலில் அறிந்துகொள்வதுடன் அவருடைய மனம் திடீரென்று மாறுபாடடைவதற்குக் காரணம் அவரை யார் கலைத்துவிட்டார்கள் என்பதையும் ஆராய்ந்து பார்த்து அதற்குமேல் காரியம் நடக்கவேண்டிய வழியைச் செய்யவேண்டும். நான் ரங்கோனில் வேலையாகவிருந்ததாகத் தெரிவித்தேனல்லவா? அங்குதான் இப்போதும் வேலையில் இருக்கிறேன். என்னுடைய வேலை ஊரூராகச் சுற்றவேண்டுவது. நான் ஆபீஸின் வேலையின் நிமித்தமே இப்போது இந்த ரயிலில் வந்தேன். அகஸ்மாத்தாக உன் விபத்தைக் கண்டேன். எனக்கு முக்கியமாக ஆகவேண்டிய காரியத்தையும் இடை இடையே கவனித்துத் தபால் மூலம் முடித்துவிட்டேன். எனது சிநேகிதன்—எனது ஆபீஸில் கூட வேலையாகவிருக்கும்—சந்திரசேகரன் என்பவனின் உதவியால் சகல வேலைகளையும் செய்துவருகிறேன். அதோடு யான் இவ்விடம் வந்து ஒருமாத காலமாகிவிட்டது. உன்னுடைய நிலைமை முற்றும் குணமடைய இன்னும் ஒருமாதகாலமாகுமென்று தெரிவதால் ஒரு மாதகாலம் ரஜா கொடுக்கும்படியாக எழுதியிருக்கிறேன்.

இதோ இக்கடிதத்தைப்பார். உன் குழந்தை உன் பெற்றோரிடம் சேர்ந்துவிட்டதென்ற விவரத்தைப்பற்றி ராஜம் எனக்கு எழுதியிருந்த கடிதம் ரங்கோனிலிருந்து இங்குள்ள எனது விலாசத்திற்கு இன்றே கிடைத்தது. முதலில் உனது செய்தியின் உண்மையை அறிந்துகொண்டு இக்கடிதத்தைக் காட்டலாம் என்று நினைத்திருந்தேன்". என்று கூறினான். கடிதத்தை வாங்கிய மரகதம் அதைப் படித்துப் பார்த்து கண்ணீரைக்கானாறாக ஓடவிட்டாள். தன் குழந்தையை தன் தாயார்பெற்ற குழந்தையைப்போல பாதுகாத்துவருவதாகத் தெரிந்ததனால் ஒரு சிறிது மகிழ்ச்சியும், தன் தந்தை பலமான நோய்கொண்டு கடுமையாகப் படுத்திருப்பதா

கத்தெரிந்ததனால் வருத்தமும், தன் கணவன் முன் கூறிய பைராகி யின் கதைக்கு அனுசரணையாகவே இப்போதும் கூறியுள்ள கட்டுக் கதையைப் படிக்க வியப்பும், தன்னைப் பிரிந்ததனாலும், தாமோதர னைப் பிரிந்ததனாலும் ராஜம் வெகு துக்கப்பட்டு கடிதமெழுதியுள்ள தைப் படிக்க அன்பினால் உண்டாகும் தோற்றங்களும், தன் தாயார் தன்னை இழந்த சோகத்தினால் பரிதவிப்பதாகக் கண்டுள்ள விஷயத் தைக் காண சகிக்கவியலாத விசனமும் ஒன்றுகூடி அவளை வதைத் துக்கொன்றுகொண்டே இருக்கின்றன.

கேவலம் பலஹீனமும், ரணமும், ஜ்வரமும் கொண்டுள்ள நிலை மையில் மனத்திற்கு அதிக அதிர்ச்சியைத் தரக்கூடிய விஷயங்க ளைப்பற்றியே பேசியதால் மரகதமணிக்கு இளைப்பும் களைப்பும் தோன்றவாரம்பித்துவிட்டன. அதன்மேல் தாமோதரன் அவளு டைய நிலைமையை அறிந்துகொண்டவனாய் அன்று சம்பாஷணையை அம்மட்டுடன் நிறுத்திவிட்டு மரகதத்திற்கு அநேக தேறுதல் மொழி களைக் கூறி அவளைத் தேற்றிவிட்டுத் தன்னிருப்பிடம் சென்றான்.

தாமோதரன் மரகதவல்லியின் போஷணையின் பொருட் டாகவே ஒரு மாதகாலம் ரஜா பெற்று அவ்வூரிலேயே ஓர் ஜாகையை அமர்த்திக்கொண்டு தினம் மரகதத்தைக் கவனிப்பதும் அவள் விஷயமாக ஏராளமான பணத்தைச் செலவிட்டு அவள் சுகம் பெற்று தேறுதலடைவதிலேயே கண்ணுங் கருத்துமாக விருந்தான் இவ்வாறே பின்னும் சில தினங்கள் சென்றன. மரகதம் பூரண சுகமடைந்து வீட்டிற்குச் செல்லக்கூடிய நிலைமையை அடைந்தாள். உடனே தாமோதரன் அவளைத் தான் தனித்திருந்த ஜாகையிலேயே அழைத்து வைத்துக்கொண்டான். மரகதத்திற்கு தாமோதரனால் எத்தனை சௌகரியங்கள் நடந்தபோதிலும் அவளுடைய மனம் உலகத்திலிருப்பதிலேயே நாட்டமற்றுவிட்டது. எனினும் தான் எத்தனை துணிந்து தற்கொலை புரிந்துகொள்ள யத்தனித்தும் தனது துரதிர்ஷ்டவசத்தினால் மீண்டும் பிழைத்துக்கொண்டதே அவள் மனத்திற்கு மெத்த விசனத்தை அளித்துக்கொண்டேயிருந்தது.

இவளுடைய விசனகரமான நிலையை முற்று மறிந்த தாமோ

தாமோதரனுக்கு பெருத்த யோசனை யுண்டாகிவிட்டது. என்னவெனில், "மரகதம் நானறியாதவாறு மீண்டும் தற்கொலை புரிந்துகொள்வாளோ, என்னவோ! இதை நாம் எவ்விதமேனும் தடுக்கவேண்டும். இதற்கு முதலில் இவளுடைய புருஷனின் நிலைமையை அறிந்து கொள்ளவேண்டுவது அத்யாவசியமாகையால் இதை எவ்வித மறிய வேண்டுமென்ற முயற்சியை நாம் உடனே தக்க விதத்தில் செய்ய வேண்டும்" என்று யோசித்து தீர்மானத்திற்கு வந்தவனாய், மரகதத்தை நோக்கி "அம்மா! மரகதம்! எனக்கு ஓர் யோசனை தோன்றுகின்றது. அதாவது, நீ இதுவரையில் அனுபவித்த பல விதமான துன்பங்களும் போதும்; நீ இனி தற்கொலை புரிந்துகொள்வதில்லை' என்று எனக்கு உறுதி வாக்களிக்கவேண்டும். உனது கணவரிடம் நான் எவ்விதமாகவாவது சென்று அவருடைய மனோநிலைமையைத் தெரிந்துகொண்டு பின்னர் உன்னை யவர் ஏற்றுக் கொள்ளத் தக்க வேலையைச் செய்யவேண்டும். இதே என் மனத்தில் போராடுகின்றது. இந்த காரியத்தையும் செய்து முடித்து, என் மாமனார் மனத்தில் என்மீது கொண்டிருக்கும் அனியாயமான எண்ணத்தையும் களைந்துவிட்டால் என் வேலை முடிந்துவிடும். ஆகையால் எனது ஒரு மாத லீவை வீண்போக்காது இவ் வேலையைச் செய்து முடிக்கவேண்டும். நீ என்னோடுகூட நான் செல்லுமிடத்திற்கு வருகின்றாயா; அல்லது இதுகாறும் உனக்குஉதவிபுரிந்து வந்த அம்புஜாவிடம் உன்னை மீண்டும் கொண்டுவிட்டு விடுவதா, அல்லது அம்மாது சிரோமணியை இவ்விடத்திற்கு வரவழைப்பதா! எல்லாவற்றையும் யோசித்து பதில் சொல்" என்றான்.

இதைக்கேட்ட மரகதம் தனது நாயகனின் மன நிலைமையை அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவா அவளுடைய மனத்திலும் உண்டாகியதனல் அவன் கூறியதற் கிசைந்தவளாய், அம்புஜத்தை வரவழைத்துவிடுவதே நலமென்றும் அவளுடைய துணையைக் கொண்டே மற்ற வேலைகளை யெல்லாம் செய்துவிடலாம் என்றும் கூறினாள். இதை தாமோதரனும் ஆமோதித்தான். பின்னர் அன்றே மரகதம் அம்புஜத்திற்கு ஓர் விவரமான கடிதம் எழுதிப் போட்டாள்.

முன்னர் ஒரு அதிகாரத்தில் கூறியபடி, மரகதம் அம்புஜத்திற்கு ஓர் கடிதம் இயற்றி மேஜைமீது வைத்து சென்றுவிட்ட அன்று உதயத்தில் வழக்கம்போல அம்புஜா எழுந்தாள். அங்கு குழந்தை சந்தடி காணவில்லை; மரகதத்தையும் காணாமல் திடுக்கிட்டு நடுங்கினாள். குழந்தையும் தாயாரும் எங்கு சென்றிருக்கக் கூடும் என்று யோசித்துக்கொண்டே வீடு முற்றும் தேடி யலைந்தாள். இருவரையும் காணாத ஆச்சரியத்திற்கோர் எல்லையே இல்லை. அவள் இன்னதென்று விவரிக்க வியலாத விதமான வியப்பும் விசனமு மடைந்தவளாய் அகஸ்மாத்தாக தன் மேஜை யருகில் சென்று பார்த்தாள், அங்கு ஓர் கடிதம் மடித்துவைத்திருப்பது கண்டு வியந்தவாறு அதை எடுத்துப் பின் வருமாறு படிக்கலானாள்.

"என்னுயிரினு மினிய உள்ளன்பு நிறைந்த சோதரி, அம்புஜாவுக்கு!—பாவி என்பொருட்டாக நீ பட்ட சிரமத்திற்கும், என்பால் நீ வைத்திருந்த அபாரமான அன்பிற்கும், என் குழந்தையை உனது குழந்தையாகவே பாவித்திருந்த அதியத்புதமான குண விசேஷத்திற்கும் நான் உன்னிடம் கேவலம் நன்றி யறிவில்லாத பரம பாதகியாகிவிட்டேன். உன்னிடமிருந்து நான் அடைந்துள்ள நன்மைக்குக் கைம்மாறாக நான் உனக்கு எனதும் என் குழந்தையுடையதுமான பிரிவாற்றாமையையே அளித்துவிட்டேன். எனது ஆருயிர் நேசி! நான் இச் சென்மத்தில் உன்னிடம் பட்டுள்ள ரணத்தை தீர்த்துக்கொள்ளாவிடினும் அடுத்த ஜன்மாவில் நான் கட்டாயம் தீர்த்துவிடவேண்டுமாய் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன். எனது பிறவியின் சரித்திரத்தை நீ யறிந்துள்ளா யாதலால் அவற்றை மீண்டும் உரைப்பது மிகையாகும். அவ்வித ஜன்ம மெடுத்த யான் எனது வயிற்றுச் சிசுவை பூமியில் சேர்க்கும் பொருட்டு உயிரை வைத்து இருந்தேனே யன்றி இனி உலகத்தில் ஜீவிக்க யான் எண்ணவில்லை. எனது கோரிக்கை நிறைவேறிவிட்டது. இன்னும் ஒன்றுள்ளது. அதாவது இச் சிசுவை யான் எனது பிராணபதியினிடம் சேர்த்துவிட்டால் எனது பிறவி முடிந்துவிட்டதென்று தீர்மானிக்கலாம். ஆகையால் அதைச் செய்து முடித்துவிட்ட பின்னர் யான் என்

னுயிரை மாய்த்துக்கொள்கிறேன். என்னை நீ கண்டதாகவே எண்ணுதே! அவ்விதமிருந்தால் மட்டும் நீ என்மீதும், எனது குழந்தையின் மீதும் வைத்திருந்த பிரியத்தினுல் வருந்தாது சிறிது தேறுதலடையக் கூடும். என் அன்புள்ள அம்புஜா! இதோடிருக்கும் கடிதத்தை என்னை முதலில் ஆதரித்த பாட்டியிடம் சேர்ப்பித்துவிடு; உன்னுடைய நன்றி விசுவாசத்தை நான் இறந்த பின்னரும் மறக்கமாட்டேன்.

இங்ஙனம்
உனது சகோதரி
**வேதவல்லி.**

இதைப் படித்ததும் அவளையறியாமல் அவளுக்கு அபாரமான துக்கம் பொங்கி வந்துவிட்டதால் அவள் துயரம் தீரக் கலங்கினுள்; கதறினுள். "ஹா! என் செல்வக் குழந்தாய்! சின்னி பாப்பா! முத்து பாப்பா! சிங்கார பாப்பா!" என்று குழந்தையை எண்ணிப் பிதற்றுகிறுள். தொட்டிலைச் சுற்றி வருகிறுள். குழந்தை படுத்திருந்த விடத்தைத் தடவிக்கொண்டே கண்ணீரால் அவ்விடத்தை நனைத்து குளமாகச் செய்கிறுள். "ஐயோ! வேதவல்லி! என்னுயிர் நேசியே! நான் இப்பிறவியில் உனது குழந்தையினுல் இன்பமடையலாம் என்று எண்ணியிருந்தேனே! அதுவும் பாவி எனக்குக் கிட்டாது போய்விட்டதே!" என்று கண் கலங்கிக் கதறினுள்; துடித்தாள். அம்புஜாவுக்கு மரகதவல்லியின் குழந்தையுடையவும் மரகதவல்லியுடையவுமான நினைவே மேலிட்டு அதே பித்து பிடித்தது போலாக அவள் மாறிவிட்டாள். அந்த பிரிவாற்றுமையின் சோகத்தினுல் அவள் தனது சொந்த வேலைகளையும் மறந்து நோய் கொண்டவள்போலாய் விட்டாள். மரகதம் வைத்துச் சென்ற மற்ருெரு கடிதத்தை அவள் குறிப்பிட்ட கிழவியிடம் சேர்த்துவிட்டாள். அதைப் படித்த கிழவியும், அவள் மகளும் பெரிதும் வருந்திக் கண்கலங்கினுர்கள். மரகதவல்லியால் தமக்கு தினம் அதிகமான வருமானம் வந்துகொண்டிருந்ததுவும் நின்றுவிட்டதை எண்ணித் துக்கித்தார்கள்.

* * * * *

இவர்கள் செய்தி இங்ஙனமிருக்க,—நாராயண நாடகக் கொட்டகையின் விஷயமாக, நமது துப்பறியும் நிபுணர் ராஜாராம் நாயுடுகாரு அவ்விநோதமானத் திருடனை எவ்விதத்திலேனும் கண்டுபிடித்துவிடவேண்டும் என்று அவரை வெகு ஜனங்கள் கேட்டுக்கொண்டதனால் அவர் அதற்கு ஒருவாறு இசைந்தவராய் அவ்வேலையைத் தான் செய்வதாகக் கூறினார். நமது நாயுடு இந்த கேஸை எடுத்துக்கொள்வதற்கு முந்தியே ஓர் பெரிய கொலைக் கேஸை தான் எவ்விதமேனும் ஜெயித்துவிடுவதாக உறுதிமொழி யளித்து அதை எடுத்துக்கொண்டிருந்தமையால் அதன் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் நோக்கத்திலேயே தனது முழு கவனத்தைச் செலுத்தி வந்தார். அந்த வழக்கு ஆராய்ச்சி விஷயமாக அவர் சென்னையை விட்டு வெளியூருக்குச் சென்றுவிட நேர்ந்துவிட்டதாலும், அந்த கேஸில் உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடித்து தான் ஜெயமடைவதற்கு அனேக மாதங்கள் சென்று விட்டபடியால் அவர் அந்த கேஸை முடித்துவிட்டு மீண்டும் ஜெயத்துடன் சென்னை வந்து சேர்ந்தவுடனே இந்த கம்பெனி விஷயமாக ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்.

இந்த நாடகக் கம்பெனி விஷயத்தில் அவருக்குச் சரியானபடி துப்பு கிடைப்பதற்கு ஒருவிதமான சாதனமும் கிடைக்கப் பெற வில்லை. அந்த நாடக மேடையில் எழுத்துகள் நிறைந்த திரைச் சீலையொன்றும், அச்சடித்த நோடீஸ் ஒன்றும் தவிர வேறு ஒருவித மான தடயமும் கிடைக்கவில்லை. நமது நாயுடுகாரு அந்தத்திரைச் சீலையை நன்றாக முற்றும் கவனித்தார். அதில் ஒருவிதமான புல னும் காணவில்லை. பல வர்ணங்களைக்கொண்டு எழுதியிருந்ததால் அது வர்ணவேலை செய்யும் மனிதர்களைக்கொண்டு செய்திருந்த தென்பதுமட்டும் விளங்கியதேயன்றி மற்றபடி அதில் ஒன்றும் தெரிந்துகொள்ளக்கூடவில்லை. சர்வேசுவரன் அச்சுக்கூடமென்பது எந்த ஊரில் எவ்விடத்தில் இருக்கிறதென்று அச்சாபீஸுகள் பதிவு செய்துள்ள ரிஜிஸ்தர் ஆபீஸில் விசாரித்துப் பார்த்தார். அந்த பெயருடன் உள்ள அச்சாபீசே கிடையாதென்பதையும் தெரிந்து கொண்டார். இந்த கேஸை எந்தவிதமான ஆதாரத்தைக்கொண்டு துப்பு துலக்குவது என்ற யோசனை நாயுடுவிற்கே பிறந்துவிட்டது.

அத்தகைய யோசனையுடன் அன்று நாடகத்தை நடத்துவதற்காக இடம் கொடுத்துதவிய செட்டியாரிடம் ஓர் தினம் நமது நாயுடு சென்று செட்டியாரைக் கண்டு, "அந்த மாயாவி நாடகக்காரன் இடம் கேட்ட வரலாற்றை உமக்குத் தெரிந்தமட்டில் எனக்குக்கூறவேண்டும்" என்று கேட்டார்.

இது கேட்ட செட்டியார் பேசத்தொடங்கி "ஐயா! நாயுடுகாரு! என்னை முதல்முதல் ஓர் பெரிய மனிதர் கண்டு தான் ஓர் நாடகம் போடப்போவதாயும் அதற்கு கொட்டகை வாடகைக்கு வேண்டுமென்றும் அதற்கான குடிக்கூலியைக் கொடுத்துவிடுவதாயும் தானே நாராயண நாடகக்கம்பெனியின் சொந்தக்காரர் என்றும் கூறி இடம் கேட்டார். அதற்கு நான் இடம் கொடுப்பதாகச் சம்மதித்து 500 ரூபாய் வாடகை கேட்டேன். அதற்கு அந்த பிரபு ஒருவித தடையுமின்றி ஒத்துக்கொண்டு 100 ரூபாய் நோட்டு ஒன்றை அட்வான்ஸாகக் கொடுத்துவிட்டு கொட்டகையின் சாவியை வாங்கிக்கொண்டு சென்றார். பின்னர் இரண்டு நாட்கள் கழித்து 10 காம்ப்ளிமெண்டரி டிக்கட்டுகள் தபால்மூலம் வந்தன. அதைப் பெற்றுக்கொண்டு நான் நாடகம் பார்க்கச்சென்றேன். அதன் பின்னர் நடந்த விஷயங்களைத்தான் தாமறிந்திருக்கிறீர்கள். அவ்வளவே எனக்குத் தெரியும். தாங்கள் கேட்பதைப் பார்த்தால் அந்தத்திருட்டு மனிதன் அகப்படவில்லைபோலிருக்கின்றதே!" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

இது கேட்ட நாயுடுகாரு நகைத்தபடியே பேசத்தொடங்கி "என்ன செட்டியாரவாள்! நான் சில மாத காலங்களாய் இன்னூட்டிலேயே இல்லை. ஓர் பலத்த கேஸில் புகுந்திருந்தேன். சமீபத்திலேயே அதில் ஜெயம் பெற்று இதில் இறங்கினேன். இந்த கேஸைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு அணுப்பிரமாணம்கூட தகுந்த பிடிப்பு கிடைக்காமையால் இதன் துப்பைத் துலக்குவதற்கே மகாகடினமாக விருக்கும்போலத் தோன்றுகின்றது. முக்கியமாக இதில் சம்பந்தப்பட்ட ஆள்களில் யாரையேனும் பார்த்திருந்தாலும் போதும். அல்லது பொருள்களோ, கையெழுத்துக்களோ முதலிய ஏதேனும் அகப்பட்டாலும் போதும். இந்த அதி விநோதமான திருட்டில் ஒன்றையும் காணவில்லை. இந்த கேஸை கவனித்துப் பார்க்கப்போனால் கொலையன்று; உட்புகுந்தடித்த கொள்ளையன்று; வழிப்பறியன்று; இது ஒரு விநோதமானதும் புதுவிதமாதிரியான செய்கையுமாகவிருக்கிறது. இதற்கு ஏதேனும் ஓர் தடயம் கிடைக்காமல் நானும் வெகு நாட்களாகத் திரிந்தலைகின்றேன். தாங்கள் இடமளித்தவர்களாயிற்றே, தம்மைக்கேட்டால் ஒரு சிறிய விஷயமேனும் கிடைக்குமோ என்பதை யறியும் பொருட்டாக யான் வந்

தேன். தற்போது நீர் கூறிய செய்தியிலிருந்தும் எனக்கு ஒன்றும் ஆதாரம் கிடைக்கவில்லை. எனினும் உம்முடைய சரியான ஞாபக சக்தியுடன் யான் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளித்தால் ஏதோ ஒருவாறு அதைக்கொண்டு ஆராய்ச்சி செய்து பார்க்கலாம் என்று தோன்றுகின்றது. அதாவது, உம்மிடம் அந்த மனிதன் கொடுத்த நோட்டு அப்படியே இருக்கின்றதா, மாற்றிவிட்டீர்களா! அதைக் கூறும். மற்றும் அன்று உம்மிடம் வந்த அந்த மனிதனின் அடையாளத்தை உம்மால் கூற முடியுமா? அந்த ஆளை நீர் பார்த்தது பார்த்தபடியே உயரம், பருமன், பேசும் மாதிரி நடையுடைபாவனைகள், நிறம், குணம் முதலியவற்றில் நீர் எதைஎதை கவனித்தீரோ அவைகளை உமக்குத் தெரிந்தமட்டில் கூறும். மேலும் அந்த மனிதனிடத்தினின்றும் உமக்கு ஏதாவது கையினுல் எழுதப்பட்ட கடிதம் ஏதேனும் கிடைத்திருக்கின்றதா; இவைகளை எல்லாம் நீர் சரியானபடி யோசனை செய்து கூறவேண்டும். இவைகளிலிருந்து எனக்கு ஒரு சிறு ஆதாரமேனும் கிடைக்கின்றதோ என்பதைப் பார்க்கலாம்; சரியானபடி விடை பகரும்" என்று காம்பீரமாக மொழிந்தார்.

இதைக்கேட்ட அந்த செட்டியார் உடனே எழுந்து உள்ளே சென்று நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து நாயுடுகாருவினிடம் கொடுத்து "இதோ இந்த நோட்டைத்தான் அந்த நாடக்காரர் கொடுத்துச்சென்றது. இதை நான் மாற்ருது வைத்திருந்தேன். அந்த ஆசாமியின் அடையாளங்களை எனக்குத் தெரிந்தவரையில் கூறுகிறேன் கேளுங்கள். அந்த ஆசாமியின் உயரம் சாதாரணமாக 6 அடி இருக்கலாம். அதிகமான பருமனில்லை. நல்ல எலுமிச்சம்பழம்போன்ற சிவப்புநிறமுடையவர். அவருடைய முகத்தை நோக்கின் வெகு மேன்மை குணங்களும் சாந்தமும் குடிகொண்டிருப்பதே போலத் தோன்றிற்று. சதா சிரித்த முகமாகவே இருந்தார். அவருடைய கண்களின் விழியின் பார்வையானது இரக்கத்தை தன்னிடை யடக்கியதாயும் கன்னெஞ்சனையும் இளகிய மனமுடையவனுகச் செய்துவிடக்கூடிய சக்தி வாய்ந்ததாயும் ஜொலித்தது. அவர் பேசுவதானது கொம்பிலிருந்த தேனை வாயில் வார்ப்பதுபோலான அத்தனை இனிமையாகவிருந்தது. எத்தகைய பிடிவாதமுடைய முரட்டு மனிதனுக விருப்பினும் அவர் பேசுவதைக் கேட்டால் பிடிவாதமெல்லாம் அடியோடு மடிந்துபோய் சாத்வீகமான குணத்தை தக்ஷணமே அடைந்துவிடக்கூடிய தெவிட்டாத மதுரம்போன்ற வசனங்களே அவர் வாயினின்றும் வந்தன. அவருடைய முகத்தின் வலது பக்கம் கன்னத்தில் மிளகு அளவு ஓர் உருண்டையான கறுத்த மச்சம் காணப்பட்டது. அவர்நெற்றியில் அழகிய திருநீர் அணிந்திருந்தார்; உயர்தரமான பட்டினுலான சொக்

காயும், சிகப்பு பட்டில் சரிகை வேலைசெய்த தலைப்பாகையுமணிந்திருந்தார். உயர்தர பட்டுக்கரை வேஷ்டி கச்சைவைத்துக் கட்டியிருந்தார். காதில் வைரக் கடுக்கனும், கை விரல்களில் 4-5 வைர மோதிரங்களும், தங்கச் சங்கிலி பிணைத்த கெடியாரமும் தங்கக்கட்டு பதித்தமூக்குக்கண்ணாடியும் அணிந்திருந்தார். கருங்காலி மரத்தினாலானதும், தங்கப்பிடி வைத்ததுமான வழவழப்பான பிரம்பும் கையில் வைத்திருந்தார். இவ்வளவு வரையில்தான் யான் கவனித்தேன். அவருக்கு ஆங்கிலபாஷையிலும் பரிச்சயமுண்டென்பதை அவர் பேசிய மாதிரியிலிருந்து தெரிந்துகொண்டேன். மற்றபடிக்கு எனக்கு வேறு ஒன்றும் தெரியாது. இப்போது சொல்லியவைகளினின்று தங்களுக்கு ஏதேனும் பிடியகப்பட்டதா?" என்று கேட்டார்.

இது கேட்ட நாயுடுகாரு நகைத்தவண்ணமாக பேசத்தொடங்கி "செட்டியாரவாள்! தாங்கள் கூறியவைகளை எல்லாம் கவனிப்பின் தங்களிடம் வந்த அந்த மனிதன் உண்மையிலேயே மகா உத்தம குணங்களையுடைய சுத்த சாத்விகமான மனிதன் என்று ஏற்படுகின்றது. ஏனெனில் ஓர் நாடகக்கம்பெனியின் சொந்தக்காரராயும் அதோடு இவ்விதம் மோசம்செய்து கொள்ளையடிக்கவேண்டும் என்ற எண்ணங்கொண்டவராயும் இருந்தால் அந்த மனிதன் பேசுவதும், நடந்துகொள்ளும் மாதிரியும் முற்றிலும் வேறுபாடாக மாறியே இருந்திருக்கவேண்டும். அந்த மனிதன் பேசியதும், பார்த்ததும், சகலமான விஷயமும் வெகு மேன்மையாகவே இருந்ததாகத் தாங்கள் தெரிவிப்பதிலிருந்து, அந்த மனிதனின் நோக்கம் உண்மையிலேயே நன்மையான நோக்கமாகவே இருந்திருக்கவேண்டுமென்று நான்நினைக்கிறேன். ஆகையினால் அந்த மனிதருடைய கன்னத்தில் உள்ள மச்ச அடையாளத்தைப் பின்பற்றிக்கொண்டு இனி என் வேலையைத் தொடங்கவேண்டும். அந்த மனிதனுக்கு அந்த மச்சம் கன்னத்தில் எந்தவிடத்தில் எவ்விதம் பதிந்திருந்தது? நகைக்கும்போதோ பேசும்போதோ அம்மச்சம் அசைந்தோ, சுருங்கியோ காணப்பட்டதா?" என்று கேட்டார்.

**செட்டியார்:**—அவருடைய வலது பக்கத்து கன்னத்தில் கண்ணுக்குக் கீழ்பாகத்தில் மிளகுப்பிரமாணம் கறேலென்று பதிந்திருந்தது. நகைக்கும்போது மச்சமும் தாடையுடன் அசைந்தது. அம்மச்சமே கன்னத்தில் கவ்விக்கொண்டிராமல் ஆடிக்கொண்டுதானிருந்தது போலவும் என்னுடைய நினைவு. அதைச் சரியாகக் கூற முடியவில்லை. அவருடைய இருதயத்தில் கடவுளுடைய பக்தி நிறைந்திருப்பதாயும் அவருடைய தோற்றம் காணப்பட்டது.

**நாயுடு:**—அவர் பேசும்போது ஏதேனும் ஓர் பதத்தை அடிக்கடி உபயோகித்ததுண்டா?

செட்டியார்:—ஆம்; உபயோகித்திருப்பது போலதான் நினைவு. அதாவது "ஈகையினும் சிறந்த தவம் இம்மையில் வேறுண்டோ" என்னும் வாக்கியத்தை அடிக்கடி உபயோகித்து அதுவிஷயமாகப் பேசியிருக்கிறார்.

நாயுடு:—அவரே நாடகத் தலைவர் என்பதில் உமக்குச் சிறிதும் ஐயமில்லையே?

செட்டியார்:—அவர் கூறிய சகலமான விஷயங்களிலிருந்தும் அவரே நாடகத்தலைவர் என்பது தீர்மானமாக விளங்கிற்று அதன் உள் மர்மம் வேறாகவிருப்பின் அது எனக்குத் தெரியவரமாட்டாது.

நாயுடு:—அவர் பேசிய மாதிரியிலிருந்து அவருக்கு எந்த பாஷையில் அதிகமான பரிச்சய முண்டு என்பதைத் தாங்கள் கூற முடியுமா?

செட்டியார்:—அவருக்கு பல பாஷைகள் பழக்கமுள்ளதாக யான் தெரிந்துகொண்டேன். எந்த பாஷையிலும் அவர் இடை இடையே சந்தர்ப்பத்திற்கேற்றபடிபேசினர். ஆதலால் இந்த பாஷையில்தான் அவருக்கு அதிக பரிச்சயமுண்டு என்பதை யான் உறுதியாகக் கூறமுடியாது.

நாயுடு:—சரி; நான் சென்று வருகிறேன். நான் என்னல் கூடியவரையில் முயன்று இதில் உழைக்கத் தொடங்குகிறேன். ஒரு சமயம் நீர் கூறிய அடையாளமுள்ள மனிதரை யான் கண்டுபிடித்து விட்டால் உடனே உமக்கு வெளியூராயின் தந்தியும், உள்ளூராயின் ஆள்மூலமாயும் செய்தி யனுப்புகிறேன். நீர் உடனே வந்துசேரவும். நான் விடை பெற்றுக்கொள்கிறேன்." என்று கூறிவிட்டு செட்டியாரளித்த நோட்டின் நம்பரை மட்டும் குறித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

நாயுடுகாரு 'இந்த நோட்டின் நம்பரைக் கொண்டு ஒரு ஆசை பார்க்கலாம்' என்று யோசித்தவராய் பின் வருமாறு ஒரு விளம்பரம் எழுதி மறுதினமே எல்லா பத்திரிகைகளிலும் பிரசுரிக்கச் செய்தார்

அதாவது:—

சமீபத்தில்........இந்த நம்பர் உள்ள நூறு ரூபாய் நோட்டு ஒன்று நடுவழியில் கிடைக்கப் பெற்றுள்ளோம். இந்த நோட்டு யாருடையதோ

அவர்கள் அதன் தேதி முதலிய அடையாளங்களைத் தெரிவித்து நேரில் பெற்றுக்கொள்ளலாம்

விலாசம்:—கோபாலன்
ந........ சைனுபஜார் வீதி
சென்னை

இப்படி விளம்பரஞ் செய்த ஒரு வாரத்திற்குப் பின்னர் அவருக் கோர் கடிதம் வந்தது. அதில்,—

'ஐயா! தங்களுடைய விளம்பரம் கண்டேன். தாங்கள் தெரிவித்த நம்பருள்ள நோட்டை யான்....கோட்டகையின் சொந்தக் காரரான ராகவச் செட்டியாரிடத்தில் பார்த்திருக்கிறதாக நினைவு. அந்த கோட்டு அவருடையதேயாம். அதன் தேதி........இந்த இலக்க முள்ளது. புரசைவாக்கத்திலுள்ள மேற்படி செட்டியாரிடம் அதைச் சேர்ப்பித்துவிடவும்.

இங்ஙனம்
அன்பன்

என்று ஆங்கிலத்தில் டைப்செய்து ஒரு விடத்திலேனும் கையெழுத் தென்பதே இல்லாமலிருந்தது. அதன் தபால் முத்திரையைக் கவனித்தார். அம் முத்திரையில் ஊரின் பெயர் சரியாக விழாது அதிகமான இங்கி படிந்திருந்தது. அதனால் கடிதம் எந்த ஊரி லிருந்து வந்ததென்பதை அறிந்துகொள்ளக் கூடவில்லை. பின்னர் கடிதத்தை திருப்பித் திருப்பிப் பார்த்ததில் அதில் ஏதோ ஒருவித வாடர் மார்கு இருந்தது. அதைக் கூர்ந்து கவனித்ததில் அது சாதாரணமாக கம்பெனிகளில் விற்பனை செய்யும் மார்காக விராது சொந்தமாக உபயோகப்படுத்தும் மார்காயும், அதோடு ஓர்வித தர்மஸ்தாபனத்தின் வாடர்மார்காகவு மிருக்கக் கண்டு திகைத்தார். இந்த கடித மெழுதிய மனிதனுக்கும் அந்த நோட்டிற்கும் ஏதோ சம்பந்த மிருக்கவேண்டும். அவ்வித சம்பந்தமுடையவன் இந்த தர்ம ஸ்தாபனத்தின் சொந்த பேப்பரில் ஏன் எழுதவேண்டும்? இவ்விரண்டையும் நோக்கின் பெருத்த சந்தேக முண்டாகிறது. ஆகையால் இந்த தருமஸ்தாபனம் எந்த விடத்திலிருக்கிறது என்பதை விசாரித்தறியவேண்டும்'' என்று தீர்மானித்து அதை விசாரித்ததில் அது விசாகப்பட்டணத்திலிருப்பதாக அறிந்து உடனே விசாகப்பட்டணத்தை யடைந்து அந்த தர்ம ஸ்தாபகரை மாறுவேடத்துடன் நேரில் சென்று பார்த்தார். அவர் செட்டியார் தெரிவித்த அடையாளமுள்ளவராகக் காணப்பட்டதும் நாயுடுவுக்கு முன்னிலு மதிகரித்த சந்தேக முண்டாகிவிட்டது. இத்தனை பெரிய மனிதர் அத்தகைய வேலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது

இவர் மனத்திற்குத் தெரிந்துவிட்டது. எனினும் அதை திடீரென்று சொல்லிவிடுவது கூடாது; நாம் அதற்கு வேறு உபாயம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்து வந்துவிட்டார். அந்த தர்மஸ் தாபகரைப் பற்றி முற்றும் விசாரித்ததில் அவர் உண்மையில் பலருக்கும் உதவும் பெரிய மனிதன் என்று தெரிந்தது. ஆகையினால் அவரை தந்திரம்செய்து அவர் அந்த குற்றத்தில் சம்பந்தப் பட்டவர்தானா என்பதை நன்றாக அறிந்த பின்னரே நாம் வேறு வேலை செய்யவேண்டும்" என்று தீர்மானித்து உடனே சென்னைக்கு வந்து நாராயண நாடகக் கம்பெனியின் எழுத்துள்ள திரைச் சீலையைப் பெற்றுக்கொண்டு செட்டியாருடனும் போலீஸாருடனும் விசாகப்பட்டணம் வந்து அந்தவூர் போலீஸாரிடம் தனது தீர்மானத்தைக் கூறி எச்சரித்துப் பின் ஓர் தகுந்த இடத்தை வாடகைக் கமர்த்திக் கொண்டு அதில் ஓர் டான்ஸ் வைப்பதாக விளம்பரம் செய்தார். அங்ஙனம் செய்த கருத்தாவது,—நாடகம் காட்டுவதாக மோசம் செய்தவனை நாட்டியம் காட்டியே பிடிக்கவேண்டு மென்பதாம். ஆதலால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அன்று நடைபெறப்போகும் டான்ஸ் பரோபகாரி ஸீதா ராமதாஸரின் ஆதரவில் நடக்கப்போவதென்றும் அதில் வரும் வருமானத்தை ஸீதாராமதாஸரின் தரும கைங்கரிய நிதிக்கு அளிக்கப்படும் என்றும் ஓர் தடபுடலான விளம்பரத்தைச் செய்து ஊரெங்கும் நோடீஸ்களைப் பறக்கவிட்டார். உயர் தரமாக நடிக்கும் நடனமாதர்களையும் கோலாட்டப் பெண்களையும் வரவழைத்து விட்டார்.

குறித்த நாள் மாலை நான்கு மணிக்கெல்லாம் கொட்டகை நிரம்பிவிட்டது. ஜனங்கள் எள்ளு போட்டால் கீழே விழாதபடி திரண்டு கூடிவிட்டார்கள். நாயுடு அச்சபா தலைவர் போல வேட மணிந்து அங்கு வந்தார்.

ஜனத் திரளானது அன்று நாராயண நாடகக் கொட்டகையில் கூடியிருந்ததைப் போலவே அளவுக்கு மீறியதாயிருந்தது. நாயுடு முக்கிய போலீஸ் பெரிய அதிகாரியையும், மற்ற போலீஸ் வீரர்களையும் தனித்த விடத்தில் அழைத்து பேசத் தொடங்கி, "அன்பர்களே! நான் முன்னர் உங்களுக்குத் தெரிவித்தபடி இந்த கட்டிடத்தின் பின்புற வழியாகத்தான் ஜனங்கள் போகவேண்டும் என்ற விதியை நியமித்துள்ளேன். அதன்படியே ஜனங்களை அடக்கி 10—10 பெயர்களாக வெகு ஜாக்கிரதையுடன் போலீஸ் வீரர்கள் கூடி அவர்களை விடவேண்டும். அவர்கள் செல்லும் வழியில் அன்று நாராயண நாடகக் கம்பெனியின் மேடைமீது விட்டிருந்த எழுத்துக்கள் நிறைந்த திரைச்சீலையை எல்லோரும் பார்க்கக்

கூடிய விடத்தில் தொங்க விட்டிருக்கிறேன். அந்தத் திரைச் சீலையைக் கண்ணுற்ற மனிதர்களை முக்கியமாகக் கவனித்துக் கொண்டிருக்கவேண்டும். அவர்களில் அத்திரைச் சீலையில் சம்பந்தப் பட்ட மனிதர்கள் அதைக் கண்டால் அவர்களுடைய அகத்தி லுள்ளவற்றை முகம் தெரிவித்துவிடும். ஆகையினால் அவர்களை நாம் உடனே எளிதில் கண்டுபிடித்துப் பின்னர் நடக்கவேண்டி யதைச் செய்யலாம். இங்குள்ள எல்லாக் கதவுகளையும் தாளிட்டு விட்டேன். இனி பின்புறத்தில் ஜனங்கள் செல்லும்போது வெகு ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ளுங்கள் நாம் கவனிப்பதைப் பிறறியாவண்ணம் மறைந்திருந்து கவனிக்கவேண்டும். இவ்வளவே விஷயம்; ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ளவும்'' என்று கூறினார். இதைக் கேட்ட எல்லோரும் ஆமோதித்தார்கள். பின்னர் நாயுடு தெரிவித்தபடி எல்லோரும் பின் கட்டு வாயிலையடைந்துவிட்டார்கள்.

அதன்மேல் 4-30க்கு டான்ஸ் ஆரம்பமாகி அதியத்புதமாக பரத நாட்டிய சாஸ்திரப்படி நடந்தேறியது. அதன்பின் விசித்திரமான உடை யணிந்த 8 அழகிய பெண்கள் கூடி கோலாட்டத்தை நடத்தினார்கள். 6-மணிக் கெல்லாம் கூட்டம் கலைய வாரம்பித்தது. நாயுடுவும் முக்கியமான போலீஸ் அதிகாரி களும் திரைச்சீலைக்குப் பின்னர் மறைவான விடத்தில் நின்று ஜனங்களைக் கவனித்துக்கொண்டே 10-10 பெயர்களாக விட்டார் கள். திரைச்சீலையைக் கண்டதும் ஜனங்களில் பெரும்பான் மையோர் தெலுங்கு பாஷை பரிச்சயமானவர்களாதலால் அதி லுள்ள தமிழ் எழுத்தை யறியாது ஏதோ திரை என்று கவனி யாமல் போய் விட்டார்கள். தமிழறிந்த சிலர் தகவலை யறியாது படித்து நகைத்துக்கொண்டே போய்விட்டார்கள்.

இக்கூட்ட மத்தியில் கும்பலாக வந்தவர்களில் ஐந்தாறு பெயர்கள் இத்திரைச்சீலையைக் கண்டதும் தம்மை யறியாமல் திடுக்கிட்டுவிட்டார்கள். அவர்களில் ஒரு மனிதன் முன்னே செட்டியார் கூறிய அடையாளங்களையும் கன்னத்தில் மச்சத்தையும் உடையவனாகவிருந்தான். அவனைக் கண்டதும் செட்டியார் நாயுடு வினிடம் "அதோ அந்த மனிதனே என்னிடம் இடங் கேட்டவன்; அத்திரையைக் கண்டு திடுக்கிட்டதும் அவன் முகம் மாறுபாட டைந்துவிட்டது பாருங்கள். ஆகா! நாயுடுகாரு! உமது சூழ்ச்சியே சூழ்ச்சி. உடனே அவனைப் பிடித்துவிடுங்கள்'' என்று வெகு ஆத்திரத்துடன் பதை பதைத்துக் கூறினார். இதற்குள் அந்த ஊர் போலீஸார் பேசத்தொடங்கி "ஆ! இவர் சீதாராமதாஸராயிற்றே. இவரை அடையாளம் தெரியாது கூறுதீர்கள்'' என்றார்கள். இதைக் கேட்ட செட்டியார் இவர் பேர் நானறியேன். இவரே என்னிடம்

122851

இடங் கேட்ட நாராயண நாடகக் கம்பெனியின் தலைவர் என்பது உண்மை'' என்றார்.

இதற்குள் நாயுடு இரு போலீஸ் வீரர்களை ஏவி அவர்களை வெளியில் விடாதபடி பார்த்துக்கொள்ளச் சொல்லி உத்தரவிட்டு அனுப்பிவிட்டுச் செட்டியாரை நோக்கி "ஐயா! நீர் உடனே வேறு வழியாகச் சென்று அவர்களுடன் கலந்துகொண்டு நீங்கள் முன்னால் பார்த்த கவனத்தைக் கொண்டு விசாரிப்பது போல் பேசி அவருடைய உண்மையை எங்களிடம் நீர் தாமாகக் கூறுவது போல் கூறுங்கள்'' என்று எச்சரித்து அனுப்பினார்.

செட்டியாரும் அவ்வாறே சென்று அந்த மனிதரைக் கண்டு அவர் திடுக்கிடும்படியாக அவரெதிரில் நின்று, "என்ன ஐயா! நாராயண நாடகக் கம்பெனியின் சொந்தக்காரராகிய நீங்களே உமது நாடகத் திரைச்சீலையில் சாமார்த்தியமாக வரைந்ததைப் படித்து மகிழ்கிறீர்களோ! பேஷ் உமது சாமார்த்தியமே சாமார்த்தியம்'' என்று பேசிக்கொண்டிருக்கையில், நாயுடுவும் மற்ற போலீஸ் அதிகாரிகளும் அந்தக் கட்டிடத்தின் மற்ற பக்கத்துக் கதவுகளையும் திறந்து ஜனங்கள் இனி எவ்விதம் சென்றாலும் பாதகமில்லை என்கிற நோக்கத்துடன் வெளியில் விட்டு விட்டுத் தாமும் மற்றையோரும் செட்டியாரின் முன்னிலையில் வந்து செட்டியாரை அப்போதுதான் காண்பவர்போல அபிநயித்து "ஓகோ! செட்டியாரவாள்! ஏது வெகு நாளாய்விட்டதே தம்மைத் தரிசித்து! வந்த விடத்திலும் சினேகிதர்கள் கிடைத்து விட்டாற்போல் இருக்கிறது. ஓகோ! இந்த மனிதரை யானுமறிவேன். இவர் சென்னையில் நாராயணன் நாடகக் கம்பெனியில் நாடகங்கள் காட்டி எப்படி ஜனங்களை வஞ்சித்துப் பணத்தைப் பறித்தாரோ; அதே போல இங்கு நாட்டிய கச்சேரி காட்டிய பின்னரே இவரைப் பிடித்தோம். ஆகா! தாங்கள் எல்லோரும் அப்படியே எங்கள் குடிசைகளுக்கு விருந்திற்கு வரவேண்டும்'' என்று கூறிக்கொண்டே கண் ஜாடை காட்டினார். உடனே மறைந்திருந்த பல போலீஸ் வீரர்களும் இங்கிருந்தவர்களை வளைத்துக்கொண்டார்கள், இந்த அதி யற்புதமான காட்சியைக் கண்ட அங்கிருந்த கூட்டத்தில் பல பேர்கள் "ஆ! இவர் மகா காருண்யம் பொருந்திய ஸ்ரீ தாராமதாஸராயிற்றே! இவரை ஏன் கைது செய்யவேண்டும்? என்று கூறியவாறு நின்று வியப்புறுகின்றார்கள்; விஷயம் இன்னதென்று தெரியாமல் திகைக்கிறார்கள். ஒருவரை யொருவர் "என்ன! என்ன!'' என்று கேட்டுப் பேசிக்கொள்கிறார்கள்.

திருநாள் பார்க்கச் சென்று திருடனாக மாறியது போல நாட்டியம்

பார்க்க வந்து போலீஸார் கையில் அகப்பட்டுக் கொண்ட இந்த எதிர்பாராத சம்பவத்தினுல் அவர்கள் நடுங்கித் திகைத்துத் தாம் என்ன செய்வதென்பதேயே மறந்து அங்குக் கண்ட திரைச்சீலையைப் பார்த்தவண்ணம் போலீஸாரின் மத்தியில் அடங்கி நின்று விட்டார்கள். அவர்களில் ஒருவராவது வாய் திறந்து எந்த விதமான பேச்சும் பேசவில்லை. நாயுடு கூறியதற்கும், செட்டியார் கேட்டதற்கும் ஒருவிதமான பதிலும் புகலவில்லை. அவர்கள் அவ்வாறு தம்பித்து வாளா நிற்பதைக் கண்ட ஏனையோரும் ஆச்சரியமடைந்தவாறு அவர்களையே நோக்கியவாறு இருக்கின்றுர்கள். நாயுடுகாரு மீண்டும் அம் மனிதனை நோக்கி "என்ன ஐயா! அங்கு நாராயண நாடகக்கம்பெனியில் 4 சௌ சௌ நாடகத்திற்கு நான்கு நிதர்சனம் காட்டி அழகாயும், புத்திசாலித்தனமாயும் இதோ இத் திரையில் எழுதிக் காட்டிவிட்டீர். இப்போது நீர் நிற்கும் இந்தக் காட்சியை எந்த நாடகத்திற்கு ஒப்பிடலாம் கூறுங்கள் பார்க்கலாம்." என்று நகைத்தவாறு கேட்டார்.

இதைக் கேட்டவுடனே அந்த மனிதன் வெகு ரோஷங்கொண்டு ஆத்திரத்துடன் பேசத்தொடங்கி "ஐயா! இப்போது இந்தக் காட்சி அவமான மெனத் தோன்றிய போதிலும் எங்கள் மனத்திற்கு எவ்வித மிருக்கிற தெனில், அனேக ஏழைகள் அருமையாக வாழ்த்த, அவர்களினிடையில் கடவுளுடைய கருணுகடாக்ஷ வீக்ஷண்யமாகிய விலங்கினுல் கட்டுண்டு, அவருடைய அருள் ஜோதியின் மத்தியில் நிற்பதுபோல் ஆநந்தமாகவே இருக்கின்றது. மனிதர்களுக்கு ஏளனமாகத் தோன்றும் இக்காட்சி தனிப்பரம் பொருளாகிய சர்வேச்வரனுக்கு வெகு உல்லாசமாக விருக்குமென்பதில் சிறிதும் ஐயமின்று. பல்லாயிரக் கணக்கான ஏழைகளின் துயர் நீங்கிய மகிழ்ச்சியின் குளிர்ந்த கிரணங்கள் எங்களையொரு போதும் ஒருவிதமான குறைவுக்குள் அணுகவிடாது; இது திண்ணம். யான் கூறுவது இம்மையிலன்று; மறுமையிலேயேயாகும்." என்று வெகுகாம்பீரமாயும் அழுத்தமாயும் கூறினுர்.

இதைக் கேட்டு அங்கே கூடிய ஏனையோரும் "ஆ! இவர் இன்னுர் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் மாறுட்டப் பட்டு இவ்விதம் செய்கிறீர்களா! இவரை யார் என்பதை முதலில் தெரிந்துகொண்டு பேசுங்கள். ஆயிரக் கணக்கான ஏழைகளை ஆதரித்து வரும் தரும தேவதையாகிய ஸீதா ராமதாஸர் என்பதை மறந்தீர்கள் போலும்" என்று ஆவேசங்கொண்டு போலீஸாரையும் அதம் செய்து விடுபவர் போல் சீறி விழுகின்றுர்கள் அவர்களை அடக்க யாவராலும் ஆகவில்லை.

நாயுடுகாரு ஸ்ரீ தாராமதாஸைப் பார்த்து "ஐயா! தாங்கள் கருணையுடன் ஏழைகளைக் காத்த கண்ணியமென்ன! நாராயண நாடகத்தில் நடித்த நாட்டாமை என்ன? இவைகளை யெல்லாம் யோசித்தால் எனக்கு ஒன்றுமே புலனாகவில்லை. உமது தற்போதிய நிலைமையோ, மோசம் செய்து ஏமாற்றிய குற்றத்தில் பிடிக்கப்பட்டிருக்கிற படியால், மிக இழிவாக இருக்கிறது. ஆகையால் நீர் அரசாங்கச் சட்டப்படியே எங்களுடன் ஸ்டேஷனுக்கு வர வேண்டும்." என்று கூறினர்.

இதைக் கேட்ட ஸ்ரீ தாராமதாஸர் வெகு காம்பீரத்துடன் பதிலளிக்க முற்பட்டு, "ஐயா! நீர் என்னைக் கண்டு கொண்டது போல உம்மை யான் மாறு வேடத்திற்குள்ளிருக்கும் துப்பறியும் ராஜாராம் நாயுடு என்பதையறிந்து கொண்டேன். உம்மைப் பல முறை பத்திரிகைகளில் பார்த்ததுடன் நேரிலும் பார்த்திருக்கிறேன். தாங்கள் அழைத்த படியே இதோ உம்முடன் கூடவே தாம் அழைத்துச் செல்லும் இடத்திற்குத் தயாராக வருகிறேன். ஆனல் ஒரு விண்ணப்பம். நீங்கள் எல்லோரும் என்னுடன் கூட என் வீட்டிற்கு வரவேண்டுகிறேன். ஏனெனில், முக்கியமான சிலவற்றை உங்களுக்குக் காட்ட வேண்டும். அதன் பின்னர் நான் உங்களிடமே இருப்பதில் தடையே இல்லை" என்றார். இதற்குள் அங்கு பெருங் கூட்டங் கூடியது

நாயுடு போலீஸ் வீரர்கள் உள்பட எல்லோரும் தாஸரின் விருப்பப்படியே யொரு வண்டியிலமர்ந்து ஸ்ரீ தாராமதாஸரின் வீட்டையடைந்தார்கள். அவர் வீட்டில் தனது சொந்த அறைக்குச் சென்று தன் பெட்டியில் வைத்திருந்த பல தஸ்தாவேஜுகளையும், தங்கப்பதக்கம், தங்கச்சங்கிலி, மோதிரங்கள் முதலியவற்றையும் எடுத்துப் போலீஸின் அதிகாரியிடத்தில் கொடுத்து விட்டார். இவரைக் கைது செய்திருக்கும் தகவல் இதற்குள் ஊர் முற்றும் பரவிவிட்டதுடன், அவருடைய தரும கைங்கரியங்கள் நடை பெறும் இடத்திற்கெல்லாம் தந்தியின் மூலமாகச் செய்தி பறந்து விட்டது. உள்ளூரிலிருப்பவர்களும் அருகிலுள்ள கிராமங்களிலிருப்பவர்களும், இவருடைய தருமத்தினல் பிழைக்கும் மனிதர்களும், பெரிய மனிதர்களுமாகக் கூடிக் கண் கலக்கத்துடன் நின்றார்கள்.

ஸ்ரீ தாராமதாஸ் எடுத்துக் கொடுத்தவைகளைக் கண்ணுற்ற போலீஸாரும், நாயுடுவும், ஏனையோரும் ப்ரமித்து வியந்தனர். அங்குக் கூடியுள்ள பொது ஜனங்களெல்லோரும் ஒன்று கூடிப் போலீஸார் செய்வது அக்கிரமம். யாருடைய குற்றத்திற்காக, ஆள் மாறுட்டமாய் இந்தப் புண்ணிய சீலரைப் பிடித்துக் கைதியாக்கி அவமா

னத்தையுண்டு பண்ணுகிறீர்கள்?" என்று கலங்கிக் கத்துகின்றார்கள். தன்பால் அபாரமான அன்பு கொண்டு பொது மனிதர்கள் இவ் விதம் கூறுவதை ஸ்ரீ தாராமதாஸர் செவியுற்று வெகு மகிழ்ச்சியுடன் சாந்தமாயும், காம்பீர தோற்றத்துடனும் அவர்களை நோக்கிப் பேசத்தொடங்கி, "எனது அன்பு நிறைந்த நேசர்காள்! நீங்கள் போலீஸார்மீது குறை கூற வேண்டாம். அவர்களுடைய சட்டப்படி யான் செய்தது குற்றமே யாகும். அதற்காக அவர்கள் என்னைப் பிடித்ததில் சிறிதும் தவறுதல் இல்லை. ஆயிரக்கணக்கான ஏழை மக்களின் மனமும் வயிறும் குளிர்ந்ததற்காக என்னுள்ளம் மகிழ்கின்றதே யன்றி இந்த சம்பவத்திற்கு சிறிதும் வருந்தவில்லை. ஆயிரக்கணக்கான ஜனங்களின் நன்மையைக் கோரி யான் எவ்விதமான சிக்ஷைக்குட்படவும் தயாராக விருந்தேன்; இருக்கிறேன். ஆதிகாலத்தில் ராமதாஸர் சர்கார்ப் பணத்தை எடுத்து ஸ்ரீராமசந்திரனுக்குச் சகல திருப்பணிகளும் செய்து விட்டதற்காகப் பன்னிரண்டு வருடகாலம் சிறைவாசம் செய்ததாக நாம் படிக்கவில்லையா? பகவத் ஆராதனையை விட பாகவத ஆராதனையே மிகச் சிறந்ததென்ற சாஸ்திரத்தை நாம் படித்ததில்லையா? ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கைமன்னன் "வழி பறித்தாகிலும் பணம் சம்பாதித்துத் ததீயாராதனம் இடைவிடாமல் நடத்தவேணும்" என்று நடத்த வில்லையா? அதன் கொள்கைப் படியே யான் பகவானுடைய அடியார்களாகிய ஜனங்களுக்காகச் செய்த நன்மைக்கு எத்தனை தண்டனையும் அடைய நான் சித்தமாக விருக்கிறேன். நீங்களெல்லோரும் இன்னுளை ஓர் நன்னாளாகப் பாராட்ட வேண்டியதே யன்றித் துயரப்படுவது கூடாது. எல்லாம் அவனருள்; எல்லாம் அவனுடைய ஆணையின் படி நடக்கின்றன. இதனால் ஒரு வித வருத்தமும் எனக்கில்லை. குசாலாக விருங்கள். ஒரு மரத்தில் பழுத்த பழம் மரத்தடியில் தான்விழும். அது போல அவனுடைய கட்டளையின் படியே நடக்கின்ற எல்லா காரியத்திற்கும் அவனுடைய அருளாகிய நிழல் இருந்து கொண்டே தானிருக்கும். ஆகையினால் வீணாக இவர்களைத் திட்டவேண்டாம். இவர்கள் ஆள்மாறாட்டமாகப் பிடிக்கவில்லை. என்னைதெரிந்தே தான் பிடித்துள்ளார்கள். நீங்களெல்லோரும் வீடு செல்லுங்கள்" என்று வெகு உருக்கமாயும், உறுதியாயும் கூறினார்.

அவருடைய மேன்மையான போக்கின் தன்மையையும், உபகார சிந்தை, கடவுள் பக்தி, ஏழை மீது இரக்கம் முதலியவற்றையும் நோக்கிய அங்குள்ள நாயுடு, போலீஸார் முதலிய ஏனையோரும் அதியாச்சரிய மடைந்து விட்டார்கள். போலீஸார் என்ன செய்வார்கள் பாவம்! அவர்களுடைய சட்டத்தின்படி எதையும் செய்து தீரவேண்டிய விதியைச் செய்தாக வேண்டும். ஆயினும் அவர்களும் இம்மனிதன் பால் இரக்கமே காட்டினார்கள்.

பின்னர் மறுநாள் காலைக்குள் இச்செய்தி எல்லா விடத்திற்கும் தெரிந்து விட்டதனால் அனேக ஆயிரம் பேர்கள் கூட்டம் கூடி விட்டார்கள். போலீஸ் கோர்ட்டில் மாஜிஸ்ட்ரேட்டின் முன்பாக விசாரணை தொடங்கி விட்டது. இவ்விசாரணையின் தீர்ப்பை எதிர் நோக்கி ஆயிரக்கணக்கில் பிரபல மனிதர்களும், மற்றையோரும் கூடி விட்டார்கள். சட்டப்படி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியை நோக்கி "ஐயா! சென்னையில் பல மாதங்களுக்கு முன்னால் நடந்த நாராயண நாடகக் கம்பெனியில் நாடகம் ஆடுவதாக விளம்பரம் செய்து, பொது ஜனங்களிடமிருந்து பணத்தை மோசம் செய்து வாங்கி, இந்தத் திரைச் சீலையை அங்கு விட்டு விட்டுப் போய் விட்டதாக உம் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது. அது விஷயமாக நீர் குற்றவாளியா, அல்லவா!" என்று கேட்டார்.

இதைக் கேட்ட ஸீதாராமதாஸர் சற்றும் தியங்காமலும், வருத்தப்படாமலும், காம்பீரமான சுய நிலைமையுடனேயே பேசத் தொடங்கி:—"கனம் பொருந்திய கோர்ட்டார் அவர்களே! உங்கள் சட்டப்படிக்கு யான் குற்றவாளியே ஆவேன். ஆனால் கடவுளின் திருவருளுக்கும் எனது மனச் சாக்ஷிக்கும் யான் குற்றவாளியாக மாட்டேன். யான் கூறப் போகும் விஷயங்களைத் தயவு செய்து செவி சாய்க்க வேண்டுகிறேன். இவ்விஷயத்தைக் காலஹரணமாவதாக நினைக்கலாகாது. எதற்காக மோசம் செய்தாய் என்று தாங்கள் கேட்டு பதிலளிக்கு முன் என்னுடைய ஜீவியத்தை யானே சுருக்கமாகக் கூறிடுகிறேன்.

எனது ஜனன பூமியும் பூர்வீகமான வாசஸ்தானமும் தென் தேயத்திலுள்ள ஸ்ரீ ராஜமன்னார் எழுந்தருளி யிருக்கும் மன்னார்கோவிலாகும். எனது தந்தைக்கு யான் ஒரே மகன். என் மாதா பிதாக்களுக்கு அதிகச் செல்வமில்லை. அவர்களுக்குச் சுற்றத்தவரும் அதிகம் கிடையாது. என்னுடைய 15-வயதில் எனது பெற்றோர்கள் காலவியோகமாகி விட்டார்கள். கடவுள் பக்தியும், ஜீவகாருண்யமும் என்னுடன் பிறந்தவை. யான் மெட்ரிக்குலேஷன் வரையில் படித்தேன். எனது பெற்றோர் இறந்த பின்னர் நான் அத்தையாரின் ஆதரவில் வளர்ந்து வந்தேன். அப்போது எனக்கு 19 வயதாகிவிட்டது. யான் 30 ரூபாய் சம்பளத்தில் வேலைக் கமர்ந்திருந்தேன். என் அத்தையிடம் 20 ரூபாயைக் கொடுத்து சிக்கனமாக குடும்பத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு மிச்சமுள்ள 10 ரூபாயை மாற்றி ஏழைகளுக்குக் கொடுத்து வந்தேன். என் பிதாவினால் வைக்கப்பட்ட ஒரு ஆயிர ரூபாய் ரொக்கத்தை வாங்கி எனக்கு என் அத்தை

விவாகம் செய்வித்தாள். பின்னர் 4 வருடங் கழிந்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு எனது தாயாரின் திருநாமமாகிய மஞ்சுளவல்லி என்று நாம மிட்டேன். அதற்கு இரண்டாம் வருடத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு எனது தந்தையின் பெயராகிய தாமோதரன் என்று சூடினேன். பெண் குழந்தைக்கு மூன்று வயதும் ஆண் குழந்தைக்கு 1 வயதுமாக குருந்த காலத்தில் யான் ஒரு முக்கிய காரியார்த்தமாக வெளியூருக்குச் சென்று வர நேர்ந்தது. எனக்குப் பிறவியிலிருந்தே தைரியமும், துணிபும் கடவுளால் அளிக்கப்பட்டிருப்பதால் யான் வெளியூர் சென்று இரவு நள்ளிருளில் முக்கிய காரியமாகத் திரும்பி வர நேரிட்டது. அது சுத்த நாட்டுப்புரமாகையாலும் எங்கள் ஊருக்குச் சமீபமாக 3 மைலிலிருந்தபடியாலும் வண்டி யின்றி வெகு தைரியத்துடன் நான் வந்துகொண்டிருக்கும் போது கொள்ளைக் கூட்டத்தார் சிலர் எங்கேயோ களவாடி விட்டு அங்கு அந்தக் காட்டின் மத்தியிலிருந்த ஓர் கோயிலில் கூட்டங் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் என்னைக் கண்டுவிட்டதால் என்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "நீ நல்ல தைரியவானுயும் கட்டுமத்தாயு மிருக்கிறுய்; ஆகையினுல் நீ எங்கள் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு எங்களுடன் நேசமாக உதவியாக விருக்கிறுயா? அல்லது இந்த இரவில் இந்த தேவதைக்குப் பலி யிட்டு விடட்டுமா?" என்று கேட்டுத் துன்புறுத்தினுர்கள். நான் சற்று யோசித்துக் கடவுள் மீது கவனத்தைச் செலுத்தி தோத்திரம் செய்தேன். கடவுளின் ஆணையால் என் மனமே தேவதை என்னை ஊக்கி கள்ளருடன் சேர்ந்து கொள்ளும்படிக்கும் அதனுல் பின்னுல் எனக்கு நன்மைகளுண்டு என்றும் கூறியது. ஆகையால் நான் சேர்ந்துகொள்வதாக வாக்குறுதி யளித்துவிட்டேன்.

பின்னர் அவர்கள் என்னைச் சத்தியம் செய்யும்படியாகக் கேட்டார்கள். நான் மனத்தில், அ என்னும் எழுத்தைக் கூட்டிக் கொண்டு அசத்தியம் என்று செய்தேன். பிறகு அவர்கள் ஏதேதோ பாடல்களைப் பாடி என்னையும் பாடும்படியாகக் கூறினுர்கள். யான் அவர்கள் பாடியபடியே பாடினேன். பிறகு என்னை அவர்கள் தமதிருப்பிடத்திற்குக் கண்ணைக் கட்டிவிட்டுக் கையைப் பிடித்து நடத்தி அழைத்துச் சென்றுர்கள். அதற்குமேல். அவர்கள் தங்களுடன் என்னை ஒருவருடகாலம் வரையில் வெகு ஜாக்ரதையாக வெளியில்செல்லவிடாது பார்த்துக் கொண்டார்கள். அதன் மேல் என்னிடத்தில் அவர்களுக்கு நம்பிக்கை விழும்படியாக காரணுர்த்தமாக நான் நடந்து கொண்டதால் அவர்களுக்கு என் மேல் பூரண நம்பிக்

கை ஏற்பட்டு விட்டது. அவர்களுடன் என்னையும் அழைத்துச் செல்வார்கள். ஆனால் யான் களவாட மட்டும் ஒப்புக் கொள்ளாமல் காவலிருப்பதாகக் கூறி வெளியிலேயே தங்கிவிடுவேன்.

அவர்களுடன் சென்ற விடங்களிலிருந்த பல ஏழைகளையும் வயிற்றிற்கின்றி உயிர் துறக்கும் வறுமையாளர்களையும் காணும் போது என்னுள்ளம் பதறும். அவர்களை யறியாது பணத்தையவர்களுக்குச் சிறிது கொடுப்பேன் இவ்விதமே அங்கு அகப்பட்டுக் கொண்டதால் என் மக்களும் மனைவியும் எவ்விதமானார்கள் என்பதை யானறியக் கூடவில்லை. அவர்களைக் காட்டிலும் நான் இங்கு ஓர் காரியத்தைக் கருதியிருப்பது எனக்கு முக்கிய கருத்தாயிருந்ததால் அவர்களை நான்மறந்தேன். இந்த கள்ளர்கள் களவாடி வைத்திருக்கும் பொருளுக்கு எண்ணிக்கை கூறவே சாத்தியமன்று. எத்தனை பெயர்களின் உயிரையும், மனத்தையும், மானத்தையும் வதைத்து இந்தப் பொருளைக் கொள்ளையிட்டிருக்கிறார்களோ என்ற எரிச்சலே என் மனத்தில் போராடியது. அந்தக் கள்ளர்கள் அம்மட்டுடன் நில்லாமல் தினம் தினம் அழகிய பெண்களைக் கொண்டு வருவதையும் அவர்களுக் கிசையாதவர்களை கண்ணும், கருத்தும், காமும் கூசாது வெட்டி வதை செய்வதையும் என்னால் கண்டு சகிக்கக் கூடவில்லை. இதற்கு நாம் என்ன செய்யலாம் என்று வழி பார்த்திருந்தேன். ஒரு நாள் அவர்கள் ஓர் ஊர் மிராசுதாரர் வீட்டில் கொள்ளையிடத் தீர்மானித்துக் கிளம்பிப் போனார்கள். அத்தருணம் யான் அவர்களுடன் செல்ல தேக அசுகமென்று கூறி மறுத்துத் தங்கி விட்டேன்.

அவர்கள் சென்றதும் யான் அவர்கள் பணம் வைக்கும் ரகஸிய அறைக்கு நள்ளிரவில் சென்று ஏதோ சொற்ப தொகையை அங்கு வைத்துவிட்டு மற்ற லக்ஷக்கணக்கான பொருளை யான் எடுத்துக்கொண்டு இரவோடிரவாக அத் தென்னாட்டை விட்டு வட நாட்டிற்குச் சென்றுவிட்டதுடன், ஊர், பெயர் முதலியன இல்லாமல் அக்கள்ளரிருப்பிடத்தையும் அவர்கள் செய்கையையும் ஓர் கடிதத்தில் வரைந்து போலீஸாருக்கு அனுப்பி விட்டேன்; பிறகு அவர்களைப் போலீஸாரும் பிடித்துவிட்டார்கள். அந்த சம்பவம் நிகழ்ந்து சுமார் 20 வருடங்களாகின்றன. அதை இங்குள்ள கோர்ட்டாரும் அறிந்திருக்கலாம். நான் முதலில் வட மதுரைக்குச் சென்றேன். அங்கிருந்த ஒரு பாழடைந்த காளி கோயிலின் உட்புறத்தில் அப்பொருள்களை ஒரு பெரிய பானையில் போட்டுப் புதைத்துவிட்டு, நான் எனது சொந்த ஊருக்கு மாறு வேடத்துடன் சென்று பார்த்தேன். அங்கு என் குழந்தைகள் சம்சாரம் யாரையும் காணவில்லை. விசாரித்ததில் அந்தம்மா

ளுடைய புருஷன் திடீரென்று காணமல் போய்விட்ட வருத்தத்தினால் அந்தம்மாள் ஆறு மாதகாலம் பார்த்துப் பின் கணவனின் பிரிவாற்ருமையால் குளத்தில் விழுந்து இறந்துவிட்டதாயும் குழந்தைகளை யாரோ புண்ணியத்திற்காக எடுத்துக்கொண்டுபோய் விட்டார்களென்றும் கேள்வியுற்று உயிர் துடித்தேன். குழந்தைகள் யாரால் வளர்க்கப்படுவதென்பதை விசாரித்தும் எனக்கறியக் கூடவில்லை. உடனே என் மனம் முறிந்து, எனக்கு வைராக்யம் பிறந்துவிட்டது. "சீ! நாம் இப்பூமியில் பிறந்ததற்கு ஏதோ நல்வினை செய்து கடவுளின் பதத்தை யடையாது பிள்ளையாம்; பெண்ணும்; இவை யெல்லாம் நீர்க் குமிழியல்லவா? நம்மை யறியாது குழந்தைகளை ஈசன் எங்கேனும் காப்பாற்றட்டும் நாம் செய்த வினை இதுதான். பிள்ளை குட்டிகளிருப்பின் பாசபந்தம் ஏற்படும். ஆகையால்தான் நம்மை ஈசன் நல்லெண்ணத்துடன் இவ்விதம் செய்துவிட்டார். இனி நாம் வீணை கானல் நீரைக் கண்டு ஏமாருமல் நம் கடவுளின் கட்டளையின்படிச் செய்வோம். உற்ருரும் வேண்டாம்; பெற்ரேரும் வேண்டாம். மக்களும் வேண்டாம்; மனிதரும் வேண்டாம்" என்றவைராக்கியத்துடன் நான் மீண்டும் வடமதுரைக்கே சென்றுவிட்டேன். என் மனத்தை எவ்வளவு தேற்றியும் அது என்மீது உயிரை வைத்திருந்த எனது பத்தினி விமலவல்லியின் நினைவையும் குழந்தைகளின் மழலைச் சொற்களையும் மறக்கக்கூடாமல் வருந்திக்கொண்டே இருந்தது.

பின்னர் கள்ளர்களைப் போலீஸார் பிடித்த செய்தியையும் அறிந்தேன். நான் அந்தப் பணத்தை எதற்காக எடுத்துக்கொண்டு வந்தேனெனில் பலதுளி பெரு வெள்ளம் என்பதுபோல பல மனிதரிடமிருந்து வயிறெரியக் கொள்ளை யடித்த பொருள்களை ஏழைகளுக்கு வினியோகம் செய்யவேண்டும் என்ற கருத்தேயாம். யான் திடீரென்று இத்தனைப் பணங்களைச் செலவு செய்ய ஆரம்பித்தால் பிறர் என்மீது சந்தேகிக்கக் கூடும் என்ற நோக்கத்துடன் நான் ஒரு பத்து ரூபாய் பெரிய லாட்டரி சீட்டுக் கம்பெனியில் லாட்டரி போட்டு கடவுளின் அருளால் அதில் முதல் பரிசாகப் பத்து லக்ஷ ரூபாய் பெற்றேன். பின்னர் அந்தப் பணம் வந்த பிறகு நான் அதைப் பெற்றுக்கொண்டு அந்தப் பணத்தில் ஓர் வீடு முதலில் வாங்கிக் கொண்டு மற்றைய பணங்களை யெல்லாம் அவ்வீட்டில் ஜாக்ரதையாக வைத்துக்கொண்டு அதன்மேல் தருமங்களைச் செய்யத் தொடங்கினேன். என்னுருயிர் மனைவியின் பெயராகிய விமலவல்லி என்ற பெயரால் முதலில் அன்னசத்திரம் கட்டி அதில் ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு உணவிட்டு உடை கொடுக்கத் தொடங்கினேன். நான் என்னுடைய சொந்தப் பணத்தில் தருமம் செய்யாவிடினும் மேகமானது கடலின் உப்பு நீரைக் குடித்துவிட்டு அதையே

நன்னீராக மாற்றி உலகிற்கு உதவுவதுபோலவும், சர்க்கரையைத் தண்ணீரில் போட்டால் அது தன்னுடைய ரூபத்தையே மறைத்துக்கொண்டு பிறருக்குத் தனது சுவையைக் கொடுத்து உதவி புரிவதுபோலவும் சொத்துக்காரர்கள் தாம் கஷ்டப்பட்டுச் சேர்த்த சொத்துக்களைத் தாமறியாமலேயே அவை ஏழைகளுக்கு உதவியாகி அதன் பலனை யடையட்டும் என்ற நோக்கத்துடன் செலவிடத் துணிந்தேன். முதலில் பாழடைந்திருந்த கோயிலைப் புதுப்பித்து அங்கு பூஜை முதலியன நடக்க ஏற்பாடு செய்து, குடிவள முண்டாக்கிச் சர்வ மானியம் வாங்கிவிட்டு ஜீவிக்கச் செய்து, பின்னர் பலவிதமான தருமங்களைச் செய்துவிட்டு சிம்மாசலம் வந்தேன். லாட்டரி சீட்டு போடும் போதே எனது முதல் பெயராகிய சிவசாமி என்பதை மாற்றி ஸீதாராம தாஸ் என்று வைத்துக்கொண்டு அதே பெயருடன் விளங்கி வருகிறேன். சிம்மாசலத்தில் அனேகவித கைத்தொழில் முதலிய சகலமும் விருத்தியடையச் செய்தேன். இதே போல பல பல ஊர்களிலும் செய்து வந்தேன். விமலவல்லியின் பெயரால் இந்த ஊரிலும் ஓர் வைத்திய சாலை கட்டினேன். அனேக பிரமுகர்களிடமும் நேரில் சென்று தர்மார்த்தமாக யாசித்துப் பணம் சேர்த்து தருமத்திற்கே செலவிட்டேன். பணம் கொடுத்த புண்ணியாத்மாக்களின் கடிதங்களும் ரசீதுகளும் நேற்று தம்மிடம் சேர்த்து விட்டேன். அவைகளைப் பார்க்கலாம் பிறகு எனது பெயர் ஜகமெங்கும் சிறிய குழந்தைக்கு முதல் தெரிந்துவிட்டது. சில கனவான்கள் நான் விவாகமின்றி இருப்பது கூடாதென்று வற்புறுத்தியதால் எனது குணத்திற்கும் மனத்திற்கும் ஒத்த ஒரு கன்னிகையை முப்பதாவது வயதில் மணந்துகொண்டேன். அவளுக்கு சந்ததியொன்றும் ஏற்படவில்லை. அனேக சிறுமி, சிறுவர்களுக்கு மாதா பிதாக்கள் விவாகம் செய்வதற்குப் பொருளின்றி வருத்தப்படுவதை யறிந்து அதற்கு ஓர் நிதியும் ஏற்படுத்தினேன். எல்லாம் கடவுளின் அருளும் அவன் கட்டளையும்தான்.

தற்காலத்தில் வெளி வேஷமும், விளம்பரமுமே உலகத்தைப் பாழாக்கி வருகின்றன. கேவலம் குப்பையில் கிடக்கும் பொருளை வைத்து விளம்பரம் செய்து பொருள் பறிப்பதும், காசுக்கு உபயோகமற்ற ஆபாசமான பெண்களை பல்லாயிரக் கணக்கில் புகழ்ந்து நாடக விளம்பரம் செய்து ஏழைகளின் பொருளை விரயமாக்குவதுமே மிதமிஞ்சி யிருப்பதை யறிந்தேன். அவ்விதமான விளம்பரத்தைச் செய்யாது பல ஜனங்களிட மிருந்து பொருள் தீட்ட முடியாதாகையால் நாமும் சென்னைக்கே சென்று கிடைத்த மட்டில் பணத்தையும் சேர்த்து ஏழைகளுக்களிப்பதுடன் பொய்யானதும், புரட்டானதுமான விளம்பரங்களைக் கண்டு ஜனங்கள் ஏமாற்ற மடையாமல் தமது பொருளில் தம்பிடி யேனும்

எளியவர் பாலிரங்கி அளிக்கும்படியான வழியைப் பலருக்கும் காட்டும் பொருட்டு இந்த ஏற்பாடைச் செய்யவேண்டுமென்று யோசனை செய்து தீர்மானித்தேன். என்னுடன் கூட விருக்கும் கையாட்களில் முக்கியமான சிலருடன் யான் சென்னை சென்று அங்கு நாராயண நாடகக் கம்பெனியில் நாடகம் நடிப்பதாக நோட்டீஸை இங்கிருந்தே எனது சொந்த அச்சியந்திர சாலையில் வேணுமென்று சர்வேச்வரன் அச்சுக் கூடமென்று விலாசமிட்டு அதைக்கொண்டு விளம்பரம் செய்து, முன்னதாகவே தயார் செய்துவைத்திருந்த இந்த திரைச்சீலையை தானே விழும்படியாக பக்குவம் செய்துவிட்டு நாங்கள் உடனே பணத்துடன் வந்துவிட்டோம். இவ்விதம் செய்ததில் ஜனங்களை மோசம் செய்யவேண்டுமென்ற கருத்து கடவுள் ஆணைப்படி இல்லை. ஏழைகளின் ஆதரவுக்களிக்கவே செய்தது உண்மையே தான். அந்த பணத்தின் செலவுகளின் விவரம் நேற்று கொடுத்துவிட்டேன். சொந்தமாக மூலதனம் வைத்து பெரிய பெரிய ஷாப்புக்களையும், பல பல வித மாறுவேடங்களுடன் நடத்தி அவற்றின் வருமானங்களையும் தருமத்திற்கேசெலவிட்டு வந்தேன். அவற்றின் கணக்கும் கொடுத்து விட்டேன். வைஷ்ணவ மதாசாரியாராகிய இராமானுஜரும், "என் தலை போனாலும் பாதக மில்லை; ஒரு மனிதனுடைய உயிர்தான் சேதமாகும். ஆயிரக் கணக்கான மனிதர்களுக்கு திருமந்திரார்த்தத்தை அறிவித்து மோக்ஷமடையச் செய்த புண்ணியம் ஒன்று போதும் எனக்கு" என்று சாதித்தருளி யிருக்கிறார். அதே போல என்னுடைய ஒரு பிராணி எத்தகைய தண்டனைகளை யடைந்தாலும் பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களின் அகம் குளிர்ந்த நிழல் எனக்குப் போதும். அதொன்றையே நான் கருதுகிறேன். அதை உத்தேசித்தே நான் இவ்விதம்நடந்துகொண்டேன். உலகத்தில் எல்லாவற்றிலும் சிறந்தது தருமமேயாம். அந்த தருமம் இம்மையிலில்லாவிடினும் மறுமையில் தலைகாக்கும். ஆகையினால் தங்கள் சட்டப்படிக்கு நான் குற்றஞ் செய்தவனே யாவேன். எனக்கு அதற்காகத் தண்டனை விதிப்பதை ஏற்றுக் கொள்ளத் தயாராக விருக்கின்றேன். எனக்குச் சிறிதும் வருத்தமே கிடையாது. மற்றும் நான் என்னுடைய ஜீவியகாலம் வரையில் இவ்விதம் அகப்படாதிருந்து விட்டால் எனது முடிவு காலத்தில் யான் இப்போது கூறிய சகல விஷயங்களையும் எழுதித் தெரிவிக்க எண்ணி இருந்தேன். அதற்குள்ளாகவே கடவுள் தெரிவிக்கும் சமயத்தைக் காட்டி விட்டது எனக்கு மெத்த சந்தோஷமே யாகும். ஆதலால் தாங்கள் தீர்ப்புக் கூறலாம். மற்றொரு முக்கிய விஷயம் சிம்மாசலத்தில் தேவதாசி குலத்தில் பிறந்த அம்புஜாவென்னும் உத்தம மாது தனது சொந்த தேக உழைப்பினால் சம்பாதித்த தொகையையும் என்னிடமே அளித்து தருமத்திற்குச் செலவிடும்படியாகக் கூறியிருப்பதும் கணக்கில் பதி

ந்துள்ளது. எல்லாவற்றையும் ஒப்புவித்து விட்டேன். இனி உங்கள் காரியமாகலாம்'' என்று வெகு சுரு சுருப்பாயும் உண்மையான தோற்றத்துடனும் கூறினர்.

ஆகாகா! இந்த அதி யத்புதமான வரலாற்றைக் கேட்ட சகல மனிதர்களும் தம்மையே மறந்து கரகோஷம் செய்து அபாரமான ஆச்சரியத்தை யடைந்து விட்டார்கள். மாஜிஸ்ட்ரேட்டிற்கும் இன்னது தீர்ப்பு கூறுவதென்பதே தெரியாமல் தாஸரின் உத்தம குணத்தினுல் மன மகிழ்ந்து விட்டார். நாயுடு அளவிடவியலாத வியப்பினுல் கட்டுண்டுவிட்டார். பின்னர் மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியை நோக்கி பேசத் தொடங்கி ''ஆகா! ஸீதாராமதாஸரே! உம்முடைய சரித்திரமும் நீர் உமது மக்கள் மனைவியையும் த்யாகம் செய்து விட்டுப் பரோபகாரம் செய்துள்ள மகிமையும் இவ்வுலக முள்ளளவு மழியாது. அவ்விதம் செய்துள்ள உமது ஆத்மாவாகிய நிழல் கடவுளின் ஒளி என்பதற்கையமின்று. உம்முடைய நோக்கம் வெகு மேன்மையானதாக விருப்பினும் எங்களுடைய அரசாங்க சட்டம் அதற்கு ஆதரவளிக்காதாகையால் எங்களுடைய சட்டப்படி யான் இந்தத் தண்டனையை விதிக்கின்றேன்'' என்று கூறி தீர்ப்புப் பத்திரம் வாசித்தார்.

''மகா உன்னதமான வழியில் எவராலும் செய்யக் கூடாத விதமான நன்மைகளைச் செய்யத் தனது உயிரையும் த்யாகம் செய்யத் துணிந்துள்ள புண்ணிய சீலருக்கு நீங்கள் இத்தகைய தண்டனையை விதிக்கவே கூடாது. மனிதன் ஓர் காரியத்தைச் செய்தானென்றல் அதற்கு அவனுடைய நோக்கத்தைப் பிரதானமாக எடுத்துக் கொள்ளவேண்டிய நியாயமொன்றிருப்பதை யாவரும் மறக்க வேண்டாம். நாம் இத்தனை பெயரும் ஒன்றுகூடி இவ் வழக்கின் விஷயத்தையும் குற்றவாளியின் நோக்கத்தையும் விரிவாய் எழுதி அத்துடன் அவராலளிக்கப்பட்ட சகல தஸ்தாவேஜுகள் கணக்குகள் முதலிய எல்லா வற்றையும் இப்போதே மாட்சிமை தங்கிய கவர்னருக்கு அனுப்பவேண்டும். அதற்கு எல்லோரும் கையொப்பமிட்டு உதவி புரிய வேண்டும்.'' என்று வெகு ஆவேசத்துடன் முக்கியமாகப் பத்துப் பெரிய மனிதர்கள் முனைந்து எழுந்து கர்ச்சித்தார்கள்.

அவர்கள் கூறியதை மற்ற இதர பொது மனிதர்களெல்லோரும் ஆமோதித்துக் கரகோஷம் செய்தார்கள். உடனே முக்கியமான மனிதர்கள் ஒன்று கூடி ஓர் விரிவான மனுவை எழுதி அனேக பெரிய மனிதர்களின் கையொப்பங்களை வாங்கி அத்துடன் தாஸர்

அளித்த சகல கடிதங்களையும் கூட்டிக் கவர்னருக்கு அனுப்பி விட்டார்கள்.

இந்த அற்புத விசித்திரமான கேஸ் நடை பெற்ற விவரம் முற்றும் ஸீதாராமதாஸரின் வாக்கு மூல முள்பட பல பத்திரிகைகளிலும் வந்து விட்டது. கவர்னருக்குச் சென்றிருக்கும் மனுவின் விபரமும் ஊரெங்கும் பத்திரிகைகளில் பறந்து விட்டது. இந்த விசித்திர வரலாற்றைப் படித்த டெல்லியிலிருந்த ஓர் மனிதர் வியப்புற்று அதிக ஆச்சரியத்தை யடைந்து, "ஆகா! நம்முடைய மாமனூர் வீட்டிற்கு எதிர் வீட்டிலிருந்து காணுமல் போய் விட்ட சிவசாமி ரெட்டியாரா ஸீதா ராமதாஸ் என்ற பெயருடன் பிரபலமாக விளங்கி வந்தவரும், நாராயண நாடகக் கம்பெனியின் விஷயத்தில் சம்மந்தப் பட்டவரும், நாம் எடுத்து வளர்த்த மஞ்சுளவல்லியின் தந்தையாகியவரும், தற்போது கவர்னருக்கு மனு சென்றிருக்கும் மனிதராகவும் மாறி விட்டார்! அடாடா! நாம் எடுத்து வளர்த்த அவருடைய புதல்வி சென்னையிலிருக்கும் விஷயத்தை நாம் உடனே அந்த மனிதனுக்குத் தெரிவிக்கவேண்டும். நமது கஷ்ட காலத்தின் கொடுமையினுலும் இளைய மனைவியின் கொடிய எண்ணத்தினுலும் நாம் குழந்தை மஞ்சுளவல்லியை சில வருஷ காலங்களாக அறவே மறந்து விட நேர்ந்து விட்டதே" என்று வருத்தப்பட்டுத் தான் மஞ்சுளாவை எடுத்து வளர்த்து தகுந்த விடத்தில் மணம் செய்து ஒருவன் பாதுகாப்பில் ஒப்பித்து விட்டதாயும் சென்னையில் சுகமாக அவருடைய மகள் இருக்கிருள் என்றும் ராமதாஸருக்கு விரிவான கடிதமொன்று வரைந்து மாஜிஸ்ட்ரேட்டின் மூலமாக அவர்பார்க்கும் படியாக அனுப்பி விட்டார்.

இது இங்ஙன மிருக்க, அம்புஜா மரகதத்தின் பிரிவாற்றுமையினுல் வருந்திக் கொண்டு அதே சித்தமாக சிதறி யிருக்கையில் மரகதமணியாலனுப்பப்பட்ட கடிதம் கிடைத்தது. அதைக் கண்டு ஆவலுடன் பிரித்துப் படிக்கலானுள். அது பின்வருமாறு:—

"என தாருயிர்த் தோழி அம்புஜம்! உனக்கு நான் கடிதம் எழுதி வைத்து விட்டு வந்ததை நீ பார்த்திருக்கலாம். அதன் படியே நான் உயிரைவிட ரயிலிலிருந்து கீழே விழுந்தும் துரதிர்ஷ்டவசத்தால் மீண்டும் பிழைத்து விட்டேன். நீ உடனே இந்தக் கடிதம் கண்ட தக்ஷணம் இதில் கண்டுள்ள விலாசத்திற்கு வந்து சேரக்கோருகிறேன். மற்ற விஷயம் நேரில்" வேதவல்லி. என்று வரைந்திருந்ததைப் படித்துப் பரவசமடைந்து கடிதத்தில் கண்டிருந்த விலாசத்திற்கு அன்றே பிரயாணமாகி குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தாள். மரகதம் அம்புஜத்தைப் பிரிந்து வந்து விட்ட பின்னர் நடந்த செய்

திகளையும் தனது உண்மையான வரலாற்றையும் கூறக் கேட்ட அம்புஜம் வருந்தினாள்.

அதன் மேல் பாலாமணியும், அவள் புருஷனும் இவர்களுடன் வந்து கூடிக் கொண்டார்கள். பின்னர் எல்லோரும் நேராக திருவள்ளூரையடைந்து தணிகாசலம் இருக்கிறானா என்பதை ரகஸியமாக விசாரிக்கையில் அங்கு தணிகாசலம் இரண்டு மாதகாலமாக இல்லை என்றும், தேசயாத்திரை சென்றிருப்பதாயும் தெரிந்து கொண்டார்கள். பின்னர் நேராக சென்னையை அடைந்து தனித்த ஓர் ஜாகையமர்த்திக் கொண்டு அதில் வந்திறங்கினார்கள்.

மரகதத்தை நேராக கண்ணபிரானின் வீட்டிற்குச் செல்லும்படியாக எத்தனைசொல்லியும் "என் கணவரை முதலில்கண்டு அவர் மனத்தையறியாமல் யான் ஒருவர் கண்ணிலும் படமாட்டேன்; இது சத்தியம்" என்று மறுத்து விட்டாள். ஆகையினால் அவளுடைய இஷ்டம் போலவே விட்டு விட்டார்கள்.

தாமோதரன் அன்றிரவு ஏதோ முக்கிய கருத்துடன் வண்டியில் செல்கையில் நடுவீதியில் 5, 6 முரடர்கள் யாரையோ அடித்து இம்சிப்பதையறிந்து உடனே வண்டியை நிறுத்தி தானும் சாரதியுமாக இறங்கி அந்த முரடர்களை விரட்டியோட்டி, பயத்தினால் மூர்ச்சையாகிய மஞ்சுளவல்லியை எடுத்து வண்டியில் போட்டுத் தம் வீட்டிற்கே கொண்டுபோய் மயக்கம் தெளிவிப்பதற்கான சிகிச்சை செய்தார்கள். 10 நிமிடத்திற்கெல்லாம் தெளிவடைந்த மஞ்சுளா தன்னை முரடர்களே தூக்கிக் கொண்டு வந்துவிட்டதாக எண்ணி நடுங்கி மிரள மிரள விழித்துக் கொண்டே நாற்புறமும் பார்த்தாள்.

இவளை ஆண் பிள்ளை என்றே எண்ணியிருந்த மரகதம், பாலாமணி, அம்புஜம் முதலியவர்கள் சற்று விலகியே நின்று உபசரித்து வந்தார்கள். தாமோதரனே இவளுக்கான சிகிச்சையைச் செய்து வந்தான். இவள் விழிப்பதை நோக்கி "ஐயா! என்ன பார்க்கின்றீர்கள்? தங்களை முரடர்களிடமிருந்து தப்புவித்துக் கொண்டு வந்து என் வீட்டில் சேர்த்து விட்டேன். தாங்கள் என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

இதைக் கேட்ட மகா உத்தம சிகாமணியாகிய மஞ்சுளமணி தன் னருகில் யாரோ அன்னியன் உட்கார்ந்திருப்பதாக எண்ணிச் சட்டென்று எழுந்து விலகிக்கொண்டாள். "நம் கணவர் இன்னமும் வந்து சேர்ந்தாரோ இல்லையோ" என்ற கலக்கமே அவள் மனத்தில்

குடிகொண்டுவிட்டது. அவள், "நாம் உடனே வீட்டிற்குச் செல்ல வேண்டும்" என்று நினைத்தாள். அவ்வாறு நினைத்ததில் முன்னர் நேர்ந்த விபத்தே தனக்கு மீண்டும் நேருமோ என்ற திகில் பாதித்தது. அதன்மேல் அவள், "நாம் முக்கியமாக வீடு சென்று நம் கணவரின் வருகையை அறியவேண்டும்; ஆதலின், இவர்களிடம் உண்மையைக் கூறி இவர்களுடைய உதவியைக் கொண்டு வீடு செல்வதை முக்கியமாகப் பார்க்கவேண்டும்" என்று தீர்மானித்தவளாய் அங்கு நின்ற மரகதம், அம்புஜம், பாலாமணி முதலியோரைக் கூர்ந்து கவனித்தாள்; உடனே திடுக்கிட்டாள். ஏனெனில் பாலாமணி இவள் கணவனுக்கு, சற்று தூரத்து உறவினள்; அவளை இவள்; அதற்குமுன் எத்தனையோ முறை பார்த்திருந்ததால் உடனே தெரிந்துகொண்டாள் தனது செய்தியை அவர்களிடம் எவ்வித முறைப்படிதென்று யோசித்தாள். அவளுக்குத் தன் கணவனை மைலா செய்த சதியாலோசனைப் படியே எதுவாயினும் செய்துவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது முக்கியமாக விருந்ததாகையால் அவள் உண்மையை உரைத்திடவே எண்ணினாள். அதன்மேல் அவள் தனது ஆணுடைகளை மாற்றிவிட்டு, அங்கு நின்ற மரகதத்தையும், அம்புஜாவையும் நோக்கியவாறு பாலாமணியின் கரத்தைப் பற்றிக்கொண்டு, "ஆகா! பாலாமணி! வெட்கக் கேடான பிழைப்புடைய இப்பாவியை நீ தெரிந்து கொள்ளும்படியான நிலைமையில் ஈசன் வைக்கவில்லை; நான் ஆண் மகனல்ல; உனது உறவினளாகிய பாவி மஞ்சுளாவே; இதைக் கூறவும் என்னுள்ளம் கூசுகின்றது; நீங்கள் என்னைக் காப்பாற்றியதற்காக யான் மெத்த நன்றியுள்ளவளாக விருக்கிறேன்" என்று கூறிக் கலங்கினாள்.

அங்கு இவளை ஆண் பிள்ளை என்றே எண்ணியிருந்த அவர்கள், இவள் பெண்மணியாக மாறியதுடன் பாலாமணியின் உறவினளாகவும் இருப்பதை உணர்ந்து எல்லோரும் வியந்து அவளை நோக்கி, "நீ ஆணுடைதரித்து இராக்காலத்தில் வந்ததன் காரணமென்ன?" என்று கேட்டார்கள். பாலாமணியும் திடுக்கிட்டவளாய், "ஆகா மதினியாரே! தாங்களா இத்தகைய மாறுபாடடைந்து விட்டீர்கள்! தங்கள் பர்த்தா இன்னமும் தாசி மைலாவை விட்டுப் பிரியவில்லையா? உங்கள் துன்பம் நீங்கவில்லையா?" என்று கேட்டாள். அதைக் கேட்ட அம்புஜத்தினுள்ளம் உருகிவிட்டது; கண்கள் கலங்கின; மார்பு துடித்தது. மரகதமும் அதே நிலைமையை அடைந்தாள். ஏககாலத்தில் இருவரும், "ஆகா மைவியின் வீட்டிலிருக்கும் பாடகரான மணிவண்ண ரெட்டியாரின் தரும பத்தினியாகிய தாங்களா இவ்விதம் வந்தீர்

கள்?" என்று வெகு கனிகரத்துடனும், மிகுந்த பிரியத்துடனும் கேட்டார்கள்.

இதைக் கேட்ட மஞ்சுளாவுக்குத் துக்கமும், வெட்கமும் அதிகரித்து அவளை வதைத்தன. அவள், "அந்தோ! நம் பதியின் நிலைமை ஊர் முற்றும் தெரிந்துவிட்டதே!" என்று வருந்தியவாறு பேசத் தொடங்கி, "அம்மணி! என்னுடைய வரலாற்றைக் கூறவும், அதைப் பிறர் கேட்டுக் கலங்கவும் தற்சமயம் என் விதி வந்து மூண்டு விட்டது! எனக்குத் தற்போது முக்கியமான காரியமிருப்பதால் அதை நான் கூறிவிடுகின்றேன்" என்று சொல்லித் தன் பிராணபதி முதலில் மைலா வீடு செல்ல ஆரம்பித்தது முதல் பின்னர் தான் மூடரிடம் அகப்பட்டுக்கொண்டது வரையில் நடந்தவைகளை விரிவாகக் கூறியதுடன், "என்னைத் தயவு செய்து அந்த வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுங்கள்; என் பர்த்தா வந்து சேர்ந்தாரோ, இல்லையோ! அவர்கள் கூட்டங் கூடி யோசனை செய்தவாறு ஏதேனும் ஆபத்தில் சிக்கி அவதி யடைந்து விட்டாரோ என்னவோ; இவ்வுண்மையை யான் அறியவேண்டும்; நீங்கள் எனக்குச் சற்று துணைக்கு வரவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

இந்த அதிசயமான வரலாற்றையும், மஞ்சுளா பதி பக்தியின் முதிர்ச்சியினால், மிக்க கேவலமான நிலைமையை யடைந்தும், தன் உயிருக்கே ஆபத்து நேர்ந்தும் அவற்றைப் பாராட்டாமல் மைலியின் வீட்டில் அவள் அடிமைத் தொண்டு புரிவதான அதி யற்புதமான செய்கையையும் கேட்டு மெச்சி அவர்கள் ஆநந்தக் கண்ணீர் விட்டார்கள். அம்புஜா மஞ்சுளாவைச் சேர்த் தணைத்துக்கொண்டு, "ஐயோ! உத்தம சிகாமணியே! உன்னுடைய சத்துருவாகிய அந்த மகா பாதகி மைலாவின் கூடப் பிறந்த சண்டாளியே யான்; என்னை யவர்கள் என்ன செய்தாலும் சரி, என் உயிரை வதைத்தாலும் சரி; நான் அவற்றிற் கஞ்சாமல் இதோ உன்னுடுகூட அவ்விடத்திற்கு வந்து என்னாலான உதவியை உனக்குச் செய்கிறேன்; புறப்படு" என்று கூறி அவளுக்குத் தைரியமுண்டாக்கினாள். அப்போது இரவு நெடுநேரமாகிவிட்டதால் அவர்கள் உதயத்தில் போகலாமென்று அவளை நிறுத்திக்கொண்டார்கள். மஞ்சுளா, அம்புஜம் மைலியின் அக்காள் என்பதை அறிந்ததும் அளவிலா ஆச்சரியமடைந்தாள். பின்னர் அவள் அங்கிருக்கச் சம்மதக்குறைவுடனேயே அன்றிரவு தங்கினாள்.

சூரியோதயமானதும் அம்புஜா, மஞ்சுளா, தாமோதரன் ஆகிய மூவரும் ஓர் வண்டியிலேறி மைலாவின் வீட்டிற்குப் போனார்கள்.

அவ்வாறு போய்க்கொண்டிருக்கையில் வழியில் ஓர் வீட்டின் வாயிலில் நிறைந்த ஜனக்கூட்டம் கூடியிருந்தது. அக்கூட்டத்தில் மிகுந்த கோஷ்டமாயிருந்தது அக்கூட்டத்தின் மத்தியில் மணிவண்ணன் நின்றான். அவனைச் சிலர் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அச்சம்பவங்களைக் கண்ட மஞ்சுளா வண்டியினின்றும் தபீரென்று ஒரே குதியாகக் குதித்துக் கூட்டத்தின் மத்தியில் ஓடினாள். அவ்வாறு ஓடியவள், மைலா யோசனை செய்தவாறே செய்துவிட்டாளென்பதையுணர்ந்துகொண்டு வெகு ஆத்திரத்துடன், 'இங்கு என்ன விசேஷம்?' என்று அங்குள்ளவர்களிடம் விசாரித்தாள். அங்கிருந்தவர்கள், "இந்த வீட்டுக்கார அம்மாளுடைய தங்கச் சங்கிலி பதித்து வைரமிழைத்த கைக்கடிகாரத்தை இந்த மனிதன் களவாடித் தன் கையில் கட்டிக்கொண்டு ஓர் தெருவின் வீட்டுத் திண்ணையில் குடிவெறியினால் விழுந்துகிடந்தான்; நாங்கள் பார்த்து இவனைப் பிடித்துக்கொண்டுவந்தோம்" என்று கூறினார்கள். இதைக் கேட்ட மஞ்சுளா, வெகு ஆத்திரத்துடன் பேசத்தொடங்கி, "ஐயோ! இந்தக் கடிகாரத்தை இவர் திருடவில்லை; இதை நேற்று இரவு யானே திருடிவிட்டேன்; எனக்குப் பணம் அவசரமாகத் தேவையாயிருந்தபடியால் இந்த ஐயாவிடம் இதை விற்றுப் பணத்தை யான் வாங்கிக் கொண்டேன்; இவரை விட்டுவிடுங்கள்; குற்றவாளி யானேயாவேன்; என்னையே பிடித்துக்கொள்ளுங்கள்" என்று கூறினாள்.

அங்கு மஞ்சுளா குதித்தோடியதும், அம்புஜாவும், தாமோதரனும் அவளைத்தொடர்ந்தோடி அங்கு வந்துவிட்டார்கள்; மஞ்சுளா திடீரென்று பழியைத் தன்மீது போட்டுக்கொண்டதை யுணர்ந்த அம்புஜம், அங்கு நிற்பவனே அவளுடைய கணவன் என்பதை யூகத்தாலறிந்துகொண்டாள்; மஞ்சுளா நேற்றுக் கூறியபடியே இது மைலாவினால் நேர்ந்த சூழ்ச்சி என்பதையும் நொடியிலறிந்துகொண்டாள். அவ்வளவுதான், அவளுடைய ஆத்திரம் கரைபுரண்டுவிட்டது. அவள் ஆவேசத்துடன், அங்குள்ளவர்களை நோக்கி, "இந்தச் சொத்திற்கு எஜமானர் யார்?" என்று கேட்டாள்.

அங்கிருந்த ஒரு பெண்ணை, ஒருவர் காட்டி, 'இவர்கள்தான்' என்று கூறினார். உடனே அம்புஜா அவளை நோக்கி, "அம்மணீ! உங்களுடைய சொத்தை இவ்விருவரும் களவாடவில்லை; நீங்கள் உண்மை யுணராமல் இந்த மனிதர்மீது குற்றம் சுமத்தி யிருக்கிறீர்கள்; அவரைக்காக்க இப்பெண்மணி முன்வந்துள்ளாள்; இருவரும் குற்றமற்றவர்களேயாவார்கள்; உண்மைக் குற்றவாளியை யானறிவேன்; வாருங்கள்: உடனே அங்கு அழைத்துச்சென்று உண்மையை விளக்குகின்றேன்" என்று கூறி அவளைப் பலவந்தமாக அழைத்துக்கொண்டுபோய்த் தான் ஏறிவந்த வண்டியிலேயே அமரச்

செய்து, மணிவண்ணன், மஞ்சுளா இருவரையும் அவ்வண்டியி லேயே ஏற்றிக்கொண்டு மைலாவின் வீட்டைநோக்கிச் சென்றாள்.

அத்தருணத்தில், மணிவண்ணன், தன் குடியின் மயக்கத்தி னால் ஏதோ ஓர் தெருவின் வீட்டுத் திண்ணையில் படுத்திருக்கையில் தன்னைச்சிலர் பலவந்தமாக இழுத்துக்கொண்டுவந்து திருடன் நீ என்று கூறி இழிவாகப் பேசியதையும், அதே தருணத்தில் தனக் காக ஓர் மாது வந்து தன் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையும், உணர்ந்து, வாய் திறந்து எதுவுமே பேசாமல், "நம்மிடம் இப்பெண் மணி கடிகாரத்தை விலைக்கு விற்றுவிட்டதாகக் கூறிய வார்த்தை யும் உண்மையல்லவே; இந்தப் பெண் யாராகவிருக்கலாம்?" என்று மஞ்சுளாவை உற்று நோக்கினான்.

மஞ்சுளாவின் அழகிழந்த தோற்றத்தினால் அவளை திடீரென்று அவன் தெரிந்துகொள்ளக் கூடவில்லை, எனினும் குரலைக்கேட்டதும் "நாம் இதற்கு முன் கேட்ட குரலாகவிருக்கிறதே!" என்று சிந்தித் தான். அவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கையிலேயே வண்டி கிளம்பியது. வண்டியிலும் மணிவண்ணன், மஞ்சுளாவை உற்றுப் பார்த்துக்கொண்டே வந்தான். அவனுக்குச் சிறிது சந்தேகமாய் விட்டது. அதனால் அவன் "இவளுடைய கண் பார்வை மஞ்சுளாவின் பார்வையைப்போலவிருக்கிறதே; குரலும் அவள் குரல் போலவே யிருக்கின்றதே; ஒருவேளை இவள், அவளாகவே யிருப்பாளோ? அவள் சாயலுடன் உள்ள இவள் யாரோ தெரியவில்லையே! நமக்காக இவள் ஏன் குற்றத்தை யொப்புக்கொள்ள வேண்டும்? இவள் மராட்டியர் போல முட்டாக் கிட்டிருப்பதால் ஜாதியே வேறாக விருப்பதுபோலத் தோற்றுகின்றதே!" என்று யோசித்துக் கொண்டே யிருந்தான். அப்படி யிருக்கையில் வண்டி மைலாவின் வீட்டிற்கு முன் வந்து நின்றது. மணிவண்ணனும், சொத்துக் காரியும் இந்த வீட்டில் ஏன் வண்டி வந்து நின்றது என்பதை யோசித்தவாறு இறங்கி முதலில் உள்ளே சென்றார்கள். முன்னே நகையின் சொந்தக்காரியே உள்ளே சென்றாள். அவளை முதலில் பார்த்த மைலா "ஓகோ! என்ன மோகனா! வேலை சரியாக முடிந்து விட்டதா?" என்று கேட்டாள். அவ்வாறு கேட்டு முடிக்குமுன், மணிமண்ணன், அவள் வீட்டுச் சமையல்காரியாகிய மஞ்சுளா, அவள் தமக்கையாகிய அம்புஜா, தாமோதரன் முதலியோர் உள்ளே வந்து விட்டார்கள். அவர்களைக் கண்ட மைலாவுக்கு குடல் நடுக்க மெடுத்துக்கொண்டது. மாமாவும் அங்கு ஓர் மூலையில் உட்கார்ந்திருந்தான்.

அம்புஜம் தாங்கமாட்டாத ஆவேசத்துடன் பேசத் தொடங்கி, "அடி மைலி! நீ இந்தப் பிழைப்பு பிழைப்பதைவிட நாக்கைப்

பிடுங்கிக்கொண்டு உயிரை விட்டுவிடலாமே! நெருப்புப் பற்று வதற்குக் காற்றடிப்பது போல இந்த (மாமா) சண்டாளப் பாவிகள் கூடி அனியாயமாக நமது குலத்தையும், இதர குடும்பங்களையும் அடியோடு கெடுக்க வந்து முளைத்துவிட்டார்களே! உலகத்தில் ஈவு, இரக்கம், பச்சாத்தாபம் முதலிய குணங்களைக் கடவுள் ஒவ்வொரு மனிதரிடத்திலும் அளித்திருக்க அக்குணங்கள் உங்களிடத்தில் மட்டும் இல்லாமல் உங்கள் குணம் நஞ்சாக அமைந்ததேனே! இவ்விதம் குடிகெடுக்கும் தொழில் செய்து பிழைப்பதைவிட கௌரவமாகக் குப்பை வாரிப் பிழைக்கலாமே! அதன் மேன்மையும் உங்களிட மில்லாது போயிற்றே! அனியாயமாக ஓர் குடும்பத்தை அல்லலுறச் செய்ததோடு நிற்காமல் சதியாலோசனை செய்து வேண்டுமென்று திருட்டுப் பட்டத்தை ஒருவர் தலையில் ஏற்றி அவரை நாசமாக்கத் தொடங்கிவிட்டீர்களே! நீங்கள் செய்த குற்றத்தை யான் உடனே தக்க ஆதாரங்களுடன் போலீஸாருக்கு எடுத்துரைத்து உங்களுக்குப் பேராபத்தை உண்டாக்குவதுடன், நீயும், உன் தாயும் முன் ஒருவரை விஷமிட்டுக் கொன்று இப்போது மறைந்திருக்கும் குற்றத்தையும், இதர குற்றங்களையும் தற்போது கிளப்பிவிடுவேன்; அவ்விதம் நீ அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்ளவேண்டுமாயின் இந்த மனிதரிட மிருந்து பறித்த பணத்தையும், நகைகளையும் உடனே எதிரில் வைத்து மகா உத்தமியாகிய இந்த அம்மாளைப் பிரதக்ஷணமாக வந்து நமஸ்காரம் செய்து இவளிடம் மன்னிப்புக்கேட்டுக்கொள்.

இந்த அம்மாளை நீ யார் என்று எண்ணினாய்! இதோ உட்கார்ந்திருக்கும்—உன்னால் பாழாய்ப் போன—மனிதருடைய தரும பத்தினி என்பதை இப்போதேனும் அறிந்துகொள்வாய் பிணமே! இந்த அம்மாள், ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளிச் செய்தபடி,

> "கண்டாரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
> கொண்டானையல்லா லறியாக் குலமக" ளாதலின்

பதி பக்தியின் முதிர்ச்சியால் மகாபாதகியாகிய உன் வீட்டிலும் துன்பத்தைச் சகித்துக்கொண்டு ஊழியக் காரியாக அமர்ந்து, தனது பதியினுடைய பணிவிடைகளைச் செய்து வந்திருக்கிறாள்; இவள் மகா பதிவிரதாசிரோமணி; சண்டாளி! உன் மோகத்தி லீடுபட்டு மதி மயங்கிக் கட்டிய மனைவியின் மண்டையை உடைத்த புண்ணியாத்துமாவாகிய இவருடைய செய்கை யினாலேயே இந்த அம்மாள் அவர் அடையாளங் கண்டு கொள்ளாத விதமாக உருவம் மாறிவிட்டாள்; கேவலமான தாசி மோகத்தி லீடுபட்டு மனைவியை மடியச் செய்யும்

பாதகத்தை விட வேறு பாபம் உலகத்தி லுண்டோ! வெட்கம் கெட்டு,மான மழிந்து, வேசி வீட்டில் புகுந்து,அவளையே சரணமாக நம்பி, அவளுடன் ஐக்கியமாகி, அலகிலாத் துர் நடத்தைகளில் புகுந்து, அவமானங்களை அடைந்து நிற்கும் மனிதருடைய நிலைமைக்கு ஒப்பிட்டுக் கூறுவதற்கு அவ்வளவு கீழான ஒரு உபமானமும் கிடைக்கவில்லை'' என்று கூறிப் பின் மணிவண்ணனை நோக்கி, "ஐயா! உமக்கு இதைவிட வேறு அவமானம்என்ன விருக்கின்றது; அறிவாளியாயும், சங்கீதாபிமானியாயும், கலைவல்லவராயு முள்ள நீர் இவ்விதம் இந்த அம்மாளை வருத்தி, வெட்கங் கெட்ட வாழ்க்கை வாழ்வதை எண்ண என்னுள்ளம் பதறுகின்றது; இனியேனும் இந்தப் பைசாசத்தின் பிடியை விட்டகலுவீரோ மாட்டீரோ!'' என்று சொல்லிவிட்டு மீண்டும் மைலாவை நோக்கி, "அடி மைலி! உம். எடுத்துவை; இல்லையேல் உன்னை அதோகதியாக்கி விடுவேன்; கூடப் பிறந்த தோஷத்திற்காக இப்போது இதையேனும் சொல்கிறேன்; எடு நகைகளை'' என்று கூறியதுடன், மைலாவின் அக்கிரமத்தையும், மணிவண்ணனை அவள் தொலைப்பதற்காகவே இந்தவித சூழ்ச்சி செய்தாளென்பதையும், மஞ்சுளா மணிவண்ணனைக் காக்கும் பொருட்டாகச் செய்த நன்மையையும் விரிவாக உடைத்துக் கூறிவிட்டாள்.

மணிவண்ணன் தனது மனைவியே தன்னைப் பல ஆபத்துகளிலிருந்து காத்துக் கடன்காரர்களுக்கு வார்சுப் பத்திரம் எழுதிக் கொடுத்து அவளே தன் பால் கொண்ட அன்பினால் தாசிவீட்டில் ஊழியக்காரியாக விருந்து தனக்குச் சிச்ருஷை செய்ததையும், சற்று முன் தன்மீது ஏற்பட்ட குற்றத்தை அவள்மீது சுமத்திக் கொண்டாளென்பதையும் தெரிந்துகொண்டதுடன், அம்புஜா கூறும் வார்த்தைகளாகிய அம்புகள் தன் நெஞ்சத்திற் பாய்ந்ததால் அவன், தன்னுடைய உயிரே ஆபாசமான சடலத்தை விட்டுக் கிளம்பி வேறு கூண்டிலடைந்துவிட்டது போலாகிவிட்டான். அவனுக்கு வெட்கமும் துக்கமும் அதிகரித்தன. அவன், தன்னுடைய ஜீவியத்தின் அவகேடான நிலைமையையும்,தான் அதுகாறும் மைலாவின் மயக்கில் மூழ்கி மனைவியை மறந்துவிட்டதையும், தான் நம்பிய மைலா தன்னைக் கொன்றுவிட நினைத்ததையும், தான் கைவிட்ட மனைவியே கடைசி வரை தன்னைக் காத்த விநோதத்தையும் அப்போதுதான் நன்கு உணர்ந்தான். அவனால் அதற்குமேல் துக்கம் தாங்கமுடியவில்லை. அதனால் அவன், "ஐயோ! அனியாயமாய் நாம் பலவிதத்திலும் பாழாகி அழிந்துவிட்டோமே'' என்று வருந்தினான். தன்னுடைய மதியீனத்தைப் பற்றித் தானே தன்னை நொந்துகொண்டான். அவன் தானாகவே மைலாவின் மோகத்தில் விழுந்ததால் அவள்மீதும் குறை கூறுவதற் கிடமில்லை. அவன்

சரேலென்று எழுந்து அம்புஜத்தை வணங்கிப் பின் கோ வெனக் கதறியவாறு மஞ்சுளாவை இறுகத் தழுவி யணைத்துக் கொண்டு "ஐயோ! மஞ்சுளா! பாவி யான் உன்னைத் தீண்டவும் யோக்கிய மற்று விட்டேனே; சண்டாளன் யானுனக்குச் செய்த சதிகளைச் சிறிதும் கவனியாமல் பூமியைப் போன்ற பொறுமையுடன் நீ என்னைக் காத்து வந்துள்ளதற்கு யான் என்னவிதமாக ஈடு செய்வேன்? எனக்கு என்ன விதமாகப் பேசுவதென்பதே தெரிய வில்லையே! பாவி யான் அன்று மனந் துணிந்து உன்னைத் தள்ளிய தன் பயனுல் உன் தலை மொட்டையாகவும், இங்கு நீ ஊழியக் காரியாகவும், உன்னுருவம் குலையவும் ஏது வுண்டாகிவிட்டதே. என்னை என்ன சித்திர வதை செய்தாலும் தகுமே" என்று கதறினுன்; கத்தினுன்; பித்தன்போலப் பிதற்றினுன்.

மஞ்சுளா, தன் பர்த்தாவின் சித்தம் மாறித் தன்மீது திரும்பி யதை யறிந்து, அதற்குக் கர்த்தாவா யிருந்துதவிய அம்புஜத்தை யும், கடவுளையும் வணங்கிப் பின் தன்னுயகனின் இருபாதக மலங்களிலும் விழுந்து பணிந்தெழுந்து அவனுடைய கண்ணீரைத் தன் முன்தானையால் துடைத்தவாறு பேசத் தொடங்கி, "என் இன்ப காந்தரே! தாங்கள் ஏன் கண் கலங்க வேண்டும்? தாங்கள் என்ன சொல்லவேண்டும்? ஒன்றும் வேண்டாம்; தமது அடியாள் தம்முடைய நிழலன்றோ! மனிதரின் நிழல் அவர் கூடவே இருப்பது போல அடியாளும் உம்முட னிருந்து தமக்கு நன்மை செய்வது என் கடனுகும்; அதுபற்றி தாங்கள் எதுவும் கூறி வருந்த வேண்டாம்; தாங்கள் எனக்குச் செய்யும் உபகாரமாவது:—இனியே னும் என்னைக் கைவிடாமல், தமது ஊழியக்காரியாகப் பாவித்துக் காத்து வருவதொன்றேயாகும். ஆதலால் தாங்கள் கவலையை ஒழித்துவிடுங்கள்; இவை எல்லாம் போதாத வேளையின் பலனுகும்; இனிமேல் என்னுடன் கூட வராலா மல்லவா!" என்று அவனைத் தேற்றிக் கேட்டாள்.

மைலாவும், அவள் தாயும் அம்புஜாவே தங்களுக்குச் சத்ரு வாக வந்துவிட்டதை எண்ணி வயிறெரிந்து அவளைத் திட்டினுர்கள். அம்புஜா எங்கே தங்களுடைய இரகஸியத்தை வெளியிட்டுவிடு வாளோ என்கிற பயத்தினுல் மணிவண்ணனிடமிருந்து வாங்கிய ரொக்கமான பணங்களையும் நகைகளையும் பெட்டியிலிருந்து எடுத் துக்கொடுத்துவிட்டார்கள். அங்குவந்த மோகனுவும், மாமாவும் இந்த எதிர் பாராத சம்பவத்தினுல் நடுநடுங்கித் தம்மையும் அங்கு வந்தவர்கள் மைலாவின் குற்றத்தில் சம்பந்தப்படுத்திவிடுவார்களோ என்று பயந்துவிட்டார்கள். அம்புஜா, மைலாவை அதட்டி மஞ்சு ளாவைப் பிரதக்ஷணஞ்செய்து வணங்கி அவளிடம் மன்னிப்புக் கேட்

டுக்கொள்ளுமாறு முன்புச் சொல்லியபடியே அவள் செய்தாள். பிறகு அம்புஜா, தொலைந்தவை போக மிச்சமாயிருந்து மைலா கொடுத்த பெருந்தொகையாகிய பணத்தை எடுத்து மணிவண்ணனிடமளித்து, "ஐயா! மதியீனரே! யானிவ்விதம் அழைப்பதைப்பற்றி நீர் வருந்துதல்கூடாது; யான் இப்பாவி மைலாவுடன் பிறந்த பாதகிதான்; எனினும்,எனக்கு இவர்களுடைய செய்கை ஒரு சிறிதும் பிடிக்காது; எனது வரலாற்றைக் கேளும்" என்று கூறி தன்னுடைய ஜீவிய விநோதத்தையும், தன்னிடம் வரும் மனிதர்களுக்குத் தான் புத்தி கற்பித்துவரும் விதத்தையும் கூறிவிட்டு, "நீர் இனியேனும் இப் பணத்தைப்பெற்றுக் கடன்காரர்களிடம் கொடுத்துவிட்டு மனைவியுடைய மனங்கோணுது வாழும்; எழுந்திரும்; போவோம்; இந்தக் கொலைக்களத்தில் இனி இருக்கவேண்டாம்" என்று கூறித் தன் தாயையும், தங்கையையும் நன்றாகத் திட்டிவிட்டு மற்றவர்களை யழைத்துக்கொண்டு தான் தங்கியிருக்கும் விடுதியை அடைந்தாள்.

மணிவண்ணன் தனது செய்கைகளையும், தான் அநியாயமாக மாறிவிட்டதையும், இழிவான வேலையில் இறங்கிப் பாபியாகிவிட்டதையும் எண்ணிக் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டே யிருந்தான். மகாபுத்திசாலியும், உத்தமியுமாகிய மஞ்சுளா தனது பர்த்தாவை தேற்றியதுடன், அவளுடைய மிஞ்சிய நகைகளையும், அம்புஜா வாங்கியளித்த பணத்தையும் சேர்த்துக் கடன்காரரை வரவழைத்துக் கடனைப் பைசல் செய்துவிட்டாள். இந்த அதி அற்புதமான செய்தியைக்கேட்ட பாலாமணி, மரகதம், தாமோதரன் ஆகிய மூவரும் அடைந்த ஆச்சரியத்திற்கும் ஆநந்தத்திற்கும் அளவே இல்லை. மைலாவையே தான் நம்பியிருந்தும், அவள் தன்மீது விசுவாசமின்றிப் படுமோசம் செய்ததை அறிந்த மணிவண்ணன் அவளைக் கொலைசெய்துவிடவும் துணிபுகொண்டான். பின்னர் அவன், கருணைவள்ளலான கடவுளின் கிருபையே மஞ்சுள வல்லியின் உருவமாக வந்ததென்று தீர்மானித்து, அவள்மீது, தான் முன் வைத்திருந்த பிரியத்தையும், மத்தியில் அதை நீக்கிச்செய்த கொடுமையையும் எண்ணிக் கலங்கினுன். அம்புஜத்தையோர் தெய்வாம்சமாகப் பாவித்தான். மஞ்சுளா ஆதியில் சொல்லியமுதலெல்லாம் அவனுடைய நினைவிற்கு வந்து அவனை வதை செய்துகொண்டிருந்தன. அதன்மேல் அவனுக்கு மஞ்சுளாவிடம் பழய பிரியமானது ஊற்றுப்போலச் சுரந்துவிட்டது.

அதன்மேல், மரகதம், அம்புஜா பாலாமணி முதலியவர்களையும், மஞ்சுளாவையும், மணிவண்ணனையும் சில காரியார்த்தமாக அவ்விடத்திலேயே இருக்கும்படி வேண்டிக்கொண்டாள். அதனல் அவர்கள் அங்கிருக்க இசைந்தார்கள். தனது உறவினளாகிய

பாலாமணியைக் காணவும் வெட்கினன். மணிவண்ணன். பின்னர் மஞ்சுளவல்லி செய்த சமாதானத்தினால் எல்லோருடனும் கலந்து கொண்டான். மரகதவல்லி தன் தகப்பனாரின் நிலைமையையும், அவ்விடத்திலுள்ள தனது குழந்தையின் நிலைமையையும், தன் பர்த்தா அவ்விடத்திலிருக்கிறாரா என்பதையும் தந்திரமாக மறைந்து கவனித்துக்கொண்டு வரும்படி மணிவண்ணனையும், பாலா மணியின் பர்த்தாவையும் அனுப்பினாள்.

அவ்வாறே அவர்கள் சென்று அவ்விடத்திய நிலைமையைக் கவனித்துக்கொண்டுவந்து மரகதத்தை நோக்கி, "அம்மா! உங்கள் பிதா இனிப்பிழைக்கமாட்டாரென்று வைத்தியர்கள் அவருக்கு வைத்தியம் செய்வதைக் கைவிட்டுவிட்டார்களாம்; அதன்மேல் அங்குக்கூடிய இரு மந்திரவாதிகள் ஏதோ ஜபம் செய்து குறி பார்த்து, இன்னும் 4 நாளையில் ஒரு கன்னிகாதானம் செய்தால் உடம்பு குணமாகுமென்று கூறினார்களாம்; அதைக் கேட்ட உங்கள் பிதா தமது சினேகிதராகிய கோவிந்த ரெட்டியாரை வரவழைத்து அதற்குவேண்டிய ஏற்பாடுசெய்யத் தீர்மானித்தாராம்; தங்கள் அத்தைமகன் ஒருவர் இருக்கிறாராம்; அவர் பேர் தாமோதரனும்; அவர் ஏதோ துர்க்கிருத்தியம் செய்து தாம் வேலைபார்த்துவந்த கம்பெனியில் அதிகத்தொகையைத் திருடிவிட்டு ஓடிவிட்டனராம்; அதோடு அவர் தங்கள் தகப்பனருக்கு விரோதியாம்; ஆகையினால் அவருக்குத் தங்கள் தகப்பனார், தம்மகளைக் கொடுக்காமல் வேறு யாருக்கேனும் கொடுத்து இன்னும் நான்கு நாட்களில் விவாகம் நடத்திவிடப்போகிறாராம்; தங்கள் குழந்தை நன்றாகவிருக்கிறதாம்; இவற்றை நாங்கள் முன்னால் அறிந்தோம்" என்று கூறினார்கள்.

பின்னர் ரங்கமணி தனியே பேசத்தொடங்கி, "நாங்கள் மேற் கூறிய விஷயங்களை அறிந்ததற்குமேலும் சிறிது நேரம் கவனித்த தில் கோவிந்த ரெட்டியாரும் வந்துவிட்டார்; அவரை நான் பார்த்ததும் எனக்கு நெஞ்சம் திடுக்கிட்டது; அந்தக் கோவிந்தரெட்டியார் என்னுடைய சிறிய தந்தையாயிருக்கவேண்டும்; நான் அவரை நேரில் கண்டு விசாரிக்க எண்ணினேன்; ஆனால் நீங்கள் இரகஸியமாக விஷயங்களைத் தெரிந்து வரவேண்டுமென்று கூறியதால், அப்படி விசாரிக்காமல் வந்துவிட்டேன். அவருடைய தங்கையின் புதல்வன் தஞ்சையிலிருப்பதாயும், அவனுக்குத் தங்கள் தங்கையை மணம் செய்வித்துவிடலாமென்றும் அவர் கூறினார்; அதையுமறிந்து வந்தேன்; தங்கள் பர்த்தா அவ்விடத்தில் இல்லையாம். தங்கள் அத்தை மகன் யார்?" என்று விசாரித்தான்.

இந்த வரலாறுகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த தாமோதரன் கண்ணீர் உதிர்த்தான். பின்னர் மரகதவல்லி தனது அத்தை

யின் குமாரன் இவரே என்று கூறி அவனுடைய சகல வரலாறுகளையும் விவரித்துரைத்தாள். இதைக்கேட்ட மற்றையோர்கள், "ஆகா! ஆகா! இத்தகைய மனிதனின்மீதா இவ்வித அபாண்டமானதும், கொடுமையானதுமான மொழிகளை மொழிந்தார்கள்! அடாடா! ஏன் இத்தருணம் தாங்களே நேரில் சென்று 'தாமோதரன்மீது யாதொரு குற்றமும் இல்லை; அவனுக்கே ராஜத்தைக் கொடுக்கவேண்டும்' என்று கூறலாகாது? அவ்விதம் செய்வதுதான் நலம்!" என்றார்கள்.

மரகதத்தினுடைய உண்மையான ரகஸியத்தைத் தாமோதரன் ஒருவன்மட்டுமே முந்தி அறிந்திருந்தான்; பின்னர் அம்புஜா அறிந்திருந்தாள்; மற்றவர்களறியமாட்டார்கள். மரகதம், தனது பர்த்தா தன்மீது ஐயமின்றித் தன்னை ஏற்றுக்கொண்டால்மட்டும் தான் வெளிப்படையாக அங்குச் செல்லவேண்டுமென்றும், இல்லையேல் யாருமறியாதபடி குளத்திலோ கிணற்றிலோ வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானித்திருந்தாள். ஆகையினால் அவள் அதை வெளியிடாது, "எனது நாயகரை நான் முதலில் கண்ட பின்னரே மற்றவர்களைக் காண்பேன் என்று சத்தியம் செய்துகொண்டிருக்கிறேன். ஆகையால் யான் அங்கே வருவதற்கேதுவில்லை" என்று அவர்கள் கூறியதை மறுத்துவிட்டாள். பின்னர் ரங்கமணியைநோக்கி, "தாங்கள் எனக்கோர் முக்கியமான காரியம் செய்யவேண்டும்; அதாவது கோவிந்தரெட்டியாராகிய தமது சிறிய தந்தையிடம் தாம் நேரில் சென்று என்னுடைய விஷயத்தைக் கூறாமல் விடுத்து, உங்களுடைய சிநேகிதர் ஒருவரிருப்பதாயும், அவருக்கு ஓர் பெண்ணைத்தேடிக் கலியாணஞ் செய்துவைக்கவேண்டுமென்றும் தந்திரமாகச்சொல்லி அந்தப்பெண்ணை இவருக்கு விவாகம் செய்துவைக்கத்தக்க முயற்சி எடுத்து அதை முடித்துவிடவேண்டும்; என் தந்தை இவருக்குச் செய்துள்ள கொடுமைகளுக்காக அவரை ஏமாற்றியே அவரறியாமலே என் கண்மணி ராஜத்தை இவருக்கே மணம் செய்விக்கவேண்டியது எனது விருதமாகும்; ஆகையினால் அதற்கான முயற்சியை உடனே செய்யவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். ரங்கமணியும் அதற்கு இசைந்து அவ்வாறே செய்வதாகக்கூறிக் கோவிந்த ரெட்டியாரின் வீட்டிற்குச் சென்றான்.

பின்னர் மரகதம் தாமோதரனை நோக்கி, "தாமோதரா! நீ வேலையாகவிருந்த ஆபீஸில் பணத்தைத் திருடிவிட்டவன் யார் என்பதைத் தந்தி யடித்துத் தெரிந்துகொள்" என்றாள். அவனும் உடனே அவ்வாறே தந்தி யடித்து மறு தந்திக்குப் பணம் கட்டினான். அங்கு வேலையாளாக விருந்தவன் தனகோடி என்று பதில் தந்தி வந்தது. இதை யறிந்த மரகதம், அவனை நோக்கி,

“அத்தான்! எனக்கு மற்ருெரு யோசனை தோன்றுகிறது. அதாவது:—ராஜம் உன்னிடம் வைத்துள்ள பிரியத்தினுல் இப்போது கூடப்போகும் விவாகத்திற்கு இசையாமலிருந்தாலுமிருக்கலாம். ஆதலால் நீ என்னசெய்யவேண்டுமென்ருல் யான் கூறுகிறபடியே ஓர் கடிதம் எழுதி அதில் ஓர் ஆங்கில லேடியின் படத்தை வைத்துத் தபாலில் அனுப்பிவிடு” என்று கூறினுள். அதை ஆமோதித்து தாமோதரன் அவ்விதமே செய்துவிட்டான். (அந்தக் கடிதமே ராஜேச்வரிக்குக் கலியாணத்திற்குமுன் கிடைத்த கடிதமாகும்.)

கோவிந்த ரெட்டியார் வீட்டிற்குச் சென்றிருந்த ரங்கமணி சந்தோஷத்துடன் திரும்பி வந்து தான் குறித்துச் சென்ற காரியத்தை முடித்துக்கொண்டு வந்து விட்டதாகவும், கோவிந்த ரெட்டியார் அதற்குச் சம்மதித்து விட்டதாகவும், நாளை மறுநாளே முகூர்த்தம் வைத்தாய் விட்டதென்றும் கூறினுன். பின்னர் மரகதம், வெகு சந்தோஷமடைந்து, தாமோதரனை நோக்கி, “அத்தான்! நீ இந்தச் சன்னியாசி கோலத்துடனிருப்பது நல்லது தான்; எனினும், கலியாணம் முடிந்தபின் உன் ரூபத்தைக் காட்டவேண்டுமாதலால், அந்தச் சமயத்தில் இதைச்சௌரம் செய்துகளைய முடியாது; ஆதலால் இப்பொழுதே இத்தீக்ஷையைக் களைந்துவிட்டு நாடகக்காரர்கள் தரித்துக்கொள்ளும் ஸ்பிரிங்கு வைத்த மீசை,தாடிகளை வாங்கி வந்து விவாகத்தன்றுமட்டும் வைத்துக்கொண்டு காரியத்தை நடத்திவிட்டுப்பின்பு களைந்துவிட்டு உனது ரூபத்தைக் காட்டி விடவேண்டும்; அந்தச் சமயத்தை யான் கூறுகிறேன்; முதலில் அதைச் செய்துவிடு” என்ருள்.

இவள் கூறியபடியே தாமோதரன் தீக்ஷையைக் களைந்துவிட்டு வேறுவிற்பனை மீசைதாடிகளை வாங்கிக்கொண்டு வந்து தயாராக வைத்திருந்தான். பின்னர், மரகதம் தன் புருடன் வந்துவிட்டானு என்பதைப்பார்த்துக் கொண்டு வரும்படி ரங்கமணியிடம் தெரிவித்தாள். ரங்கமணி அவ்வாறே சென்று விசாரித்துக் கொண்டு வந்து வெள்ளிக்கிழமைக் காலையில் வரப்போவதாக அக்கம்பக்கலிலுள்ளவர்கள் கூறுகிருர்களென்று தெரிவித்தார். வெள்ளிக்கிழமையே முகூர்த்தமாகையினுல் அதைத்தடையின்றி நடத்திவிடவும், அன்று வரப்போகும் தன் புருஷனைக்கண்டு செய்தியறியவும் கருதி, மரகதம் தனக்குத்துணையாக அம்புஜாவை மட்டும் நிறுத்திக் கொண்டு, மஞ்சுளவல்லிக்கு டோபா வாங்கித்தலைக்கு அணிவித்து அவளையும், அவள் புருஷனையும், பாலாமணியையும், அவள் புருஷனையும், தாமோதரனுக்குக் கெட்டியாக ஸ்ப்ரிங்கு வைத்த மீசைதாடிகளைக் கட்டித்தலையில் குடிமி வளர்ந்துள்ளது போல தோன்றும்படி டோபாவைக்கட்டி அவனையும் வெள்ளிக்கிழமை

விடியற்காலம் தயாராக வந்திருந்த கோவிந்த செட்டியாருடன் அனுப்பிவிட்டாள். தன் செய்தியை வெளியிடவேண்டாமென்று எல்லோரிடத்திலும் கூறியதுடன் தாமோதரனைக் குனிந்த தலை நிமிராமலும், எவருடனும் அதிகமாகப் பேசாமலுமிருக்கும் படிக்கும், மீசைதாடிகள் விழுந்து விடாதபடி ஜாக்ரதையாக அவற்றைப் பார்த்துக்கொள்ளும்படிக்கும், யாரேனும் தீக்ஷை எதற்கென்று கேட்டால் திருவள்ளுருக்கு பிரார்த்தனை என்று கூறும்படிக்கும் அவனுக்குத் தந்திரங்களைச் சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினாள்.

அவ்வாறு அவர்களை யனுப்பி விட்டுத் தான் ஓர் பெரிய கடிதமெழுதி அதை எடுத்துக்கொண்டு, தான் முந்தி ரயிலில் அணிந்திருந்த துருக்கியமாதின் உடைபோல உடைதரித்து முகத்தை மூடிக்கொண்டு, அம்புஜாவையும் அழைத்துக் கொண்டு இரயிலேறித் திருவள்ளுரை யடைந்து, தனது துயரத்தை யடக்கிக் கொண்டு தன் வீட்டிற்குச்சென்று அங்கே நடக்கும் காரியங்களைப் பார்த்தாள். அவளுடைய பர்த்தா கூடத்தில் படுத்துக்கொண்டு அவள் பெயரையும், தன் குழந்தையையும் கூறிக் கூறி புலம்பிக் கொண்டிருந்தான். கிழவி அருகிலமர்ந்து, "ஐயோ! உன்னாலல்லவா குடி முழுகிவிட்டது" என்று கூறிக்கொண்டிருந்தாள். மரகதம் இச்செயல்களை நேரில் பார்த்ததும் அவளுக்கு அவ்விஷயங்கள் உண்மைதானோ வென்று சந்தேகமாய் விட்டது. அதனால் அவளுடைய மனம் குழம்பியது. அவற்றை அவள் அடக்கிக்கொண்டு நேரே உள்ளே சென்று, அவள் கணவனை நோக்கி, "ஐயா! வக்கீலய்யா தாங்கள் தாமோ? எங்களுக்கு ஓர் முக்கியமான கேஸ் வந்திருக்கிறது; அதன் விவரம் இதோ இந்த பேப்பரில் எழுதியுள்ளது; அதைப்படித்துப் பார்த்து எமக்கு உதவி புரியவேண்டும்" என்று குரலை மாற்றிக் கொண்டு கூறினாள்.

இதைக்கேட்ட தணிகாசலம் எழுந்து உட்கார்ந்தவாறு "அம்மா! யானிப்போது கேஸை எடுப்பதில்லை; வக்கீல் தொழிலை விட்டு விட்டேன்; ஆதலால் நீங்கள் வேறு வக்கீலிடம் போங்கள்" என்றான். இதைக்கேட்ட மரகதம், "ஐயோ! வக்கீல் வேலையை ஏன் விட்டு விடவேண்டும்?" என்று தனக்குள் யோசித்தபடியே பேசத் தொடங்கி, "ஐயா! தாங்கள் இந்தக்கேஸை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் இதைத் தாங்கள் படித்துப்பார்த்து இந்தக்கேஸ் ஜெயிப்பதற்கு எந்த வக்கீலை வைக்கலாம் என்பதைத் தாங்களே தெரிவித்தால் நான் அவர்களிடம் போகிறேன்; அவசரம்" என்று கெஞ்சினாள். அதன்மேல் தணிகாசலம் கடிதத்தை வாங்கிப்படிக்க ஆரம்பித்தான். படித்துக் கொண்டே வருகையில் அவனை யறியாமல் தேகமுற்றும் நடுங்குகின்றது. கண்ணீர் தாரை தாரையாக வழி

கின்றது; கடிதத்தில் மரகதவல்லி எழுதியிருந்த செய்திகள் எவை யெனில், தான் தனதுபதிக்கு வாழ்க்கைப்பட்டதுமுதல் பல தினங்களுக்குமுன் இரவில் விழுந்தும் சாகாது தப்பித்துக்கொண்டது வரையில் நடந்தவிஷயங்களே. இவற்றை அவள், யாரோ எழுது வதுபோல எழுதி, தணிகாசலம் அவளைச் சோதனைசெய்து அன்னியனுக்கு முறியல் சீட்டெழுதிக்கொடுத்த கொடுமைக்காக அவன்மீது வழக்குத்தொடுக்கப்போவதாகவும், அதற்குத்தணிகாசலமே வக்கீலாக வரவேண்டுமென்றும் வேடிக்கையாக எழுதிமுடித்திருந்தாள்.

அவன், அவற்றைப்படித்ததும் தன்னுடைய சரித்திரத்தையே யாரோ வரைந்ததுபோல மரகதவல்லியே வரைந்திருக்கிறாள் என்று அந்த எழுத்திலிருந்து தெரிந்துகொண்டான். அவனுள்ளம் அப்போதிருந்த நிலைமையைச்சொல்லுதல் சாத்தியமன்று. அந்தக்கடிதத்தினால் தன் காதலி உயிருடன் இருக்கிறாளென்பது தெரிந்தபடியால், அதன்பொருட்டு மகிழ்ச்சியும், அவளுக்குத் தான் செய்த தீமையினால் அவள் பட்டுள்ள கஷ்டங்களைப்பற்றிப் பெருந்துயரமும் அவனுக்குண்டாயின. இவ்விரண்டும் கூடி அவனை வதைத்ததால் அவன் தன்னையும் தன் னருகிலிருப்போரையும் மறந்து திடீரென்று, "ஆ! என் கண்மணி! மரகதவல்லி!" என்று கூறிக்கொண்டே சடாரென்று கீழே விழுந்துவிட்டான். அவனுடைய நிலைமையை அப்போது மரகதம் முற்று மறிந்து மனமுருகினாள். அவனைத் தூக்கி எடுக்கலாமா என்று நினைத்தாள் அதற்குள் தணிகாசலம் திடீரென்று எழுந்து மரகதவல்லியை நோக்கிக் கண்ணீர் பெருகியவண்ணம், "ஐயோ! அம்மணி! இந்தக் கடிதத்தைத் தம்மிடம் யாரளித்தவர்கள்? அவர்களைத் தயவுசெய்து எனக்குத் தெரிவிக்கவேண்டும்; நான் மகா பாவி என்று என்னைத் தாங்களும் விலக்காது அங்கு அழைத்துச்செல்லவேண்டும்" என்று கூறியவாறு அவனுடைய சோகத்தின் முதிர்ச்சியினால் தன்னையே மறந்து மரகதவல்லியை வணங்க முயற்சித்தான்.

மரகதம், அதற்குமேலும் பேசாதிருக்கலாகாதென்று எண்ணி அவனை நோக்கி, "ஐயா! வாருங்கள், நான் உங்களை அழைத்துச் செல்கிறேன்" என்று கூறி அவனை அங்கிருந்த அறைக்குள் அழைத்துச் சென்று, 'இதோ இந்த அம்மாள்தான் கொடுத்தார்கள்' என்று கூறியவாறு தனது முகம்மதிய உடையைக் களைந்தெறிந்துவிட்டுச் சுய ரூபத்துடன் தணிகாசலத்தின் காலில் தடாரென்று விழுந்துவிட்டாள்.

தணிகாசலம் முகம்மதியப் பெண்ணுடை தரித்துக் கடிதம் கொணர்ந்த மாதே தனது ஆருயிர்க் காதலி என்பதை யறிந்து

ஆச்சரியத்தை யடைந்து, தான் செய்துள்ள கொடிய செய்கைகளுக்காக வெட்கியவனுகித் தன்னையே மறந்து, "ஆகா! பாவி நான் இழந்துவிட்டதாக நினைத்த என் கண்மணி மரகதமணியா! என் காதலியா! என் ஆவிக் கமுதமா!" என்று அதன்மேற் பேசுதற்கு நாவெழாமல் அவளை வாரி இருகரங்களினுலும் சேர்த்து மார்போடு அணைத்துக் கண்ணீரைப் பெருக்கியவாறு பித்தங் கொண்டவன் போல, இன்னது செய்வது, சொல்வது என்பவற்றை மறந்து பிரமை கொண்டு நின்று ஏதேதோ பிதற்றினுன். இந்த அற்புதமான சம்பவத்தைப் பார்த்த கிழவி, மெய்ம் மறந்து விட்டாள். மரகதம், கிழவி காலிலும் விழுந்து வணங்கி யெழுந்தாள். அவ்வாறு பணிந்தெழுந்த மரகதவல்லியைக் கிழவி, கட்டித் தழுவி, "என் கண்ணே! உத்தமிப் பெண்ணே! ஐயோ! படுபாவியை—உன்னை உயிருடன் வதைத்த இந்த முழு மூடனை—என்ன செய்தாலும் தகுமே! ஐயோ! தற்போது எனக்கு நிலையே தடுமாறுகின்றதே! என் ரத்தினமே! மரகதவல்லி! நீ செத்துப் பிழைத்தாயோ! என் செல்வி!" என்று வாயில் வந்தவாறெல்லாம் ஏதேதோ சொல்லி உருகினுள்.

இதற்குள் தணிகாசலம், "ஐயோ! என் காதல் கிளியே! மரகதம்! நீறுபூத்த நெருப்பைப்போன்ற கற்பினையுடைய உன்மீது நான் சந்தேகங்கொண்டு, அச்சந்தேகமென்னும் பைசாசத்தின் சேஷ்டையால் உன்னையவ்விதம் செய்துவிட்டேன்; உன்னை நான் அன்னியனிடத்திலனுப்பியதாக ஒரு தந்திரமான செய்கை செய்தேனேயன்றி மெய்யாக அன்னியனிடம் சேர்க்கவில்லை; அன்னியன்போல வேஷமணிந்து உள்ளே வந்த மாபாவி நானேயாவேன்; அவ்விதம் யான் எதற்காகச் செய்தேனென்றால் உன்னுடைய உண்மையான கற்பைத் தெரிந்துகொள்ளவே செய்தேன்; நான் நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றும் ஆய்விட்டன; உன்னிடமிருந்து வரும் வார்த்தையைக்கேட்டு அதன்மூலம் உன் மனநிலைமையை நன்கறிந்துகொண்டு பின்னர் என்னை வெளியிடலாமென்று நான் மதியீனமாக அச்செய்கையைச் செய்தேன்; அவ்வாறு செய்த செய்கை இத்தனை விபரீதங்களையுண்டாக்கிவிட்டது" என்று உண்மையைக் கூறிக் கதறினுன்.

மரகதம் இதுபரியந்தம் உள்ளேவந்த மனிதன் அயலானென்றே எண்ணியிருந்தாள். இப்போது தன் பர்த்தாகூறிய விஷயங்களைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டு, ஆச்சரியமடைந்து, "ஆ! அன்று அன்னியனைப்போல வந்த மனிதர் தாங்களா! ஐயோ! நான் அவ்விஷயத்தை யறியாமல் இத்தகைய அல்லல்களையும், அவமானத்தையும், ஆபத்தையுமடைந்தேனே!" என்று கண்ணீர் உதிர்த்தாள்.

இதைக்கேட்ட தணிகாசலம், "என் கண்ணே! நான் விருந்துண்ணச்சென்ற விடத்தில் ஒரு படுபாவி சொல்லியதற்கும், (அதாவது, குட்டிச்சாமி கூறியதற்கும்);நான் வரும்போது நீ பாலாமணிக்குக் கடிதமெழுதியதற்கும் பொருத்தமாயிருந்தது; எல்லாம் எனது கெட்ட காலத்தால் ஒன்றுகூடிவிட்டன; அதனாலேயே இவ்வகைத் துன்பங்கள் நேர்ந்தன; என் இன்பமே! இனி அவைகளை நினைக்காதே; நான் அந்தப் படுபாவி குட்டிச்சாமி யார் என்பதைக் கண்டுபிடித்து அவனைத் தகுந்தவாறு வதைத்தாலன்றி என் வயிற்றெரிச்சல் அவியாது; ஐயோ! என் ஆருயிரே! நமது கதியும், நிலைமையும் சக்கரம்போல சுழன்றுவிட்டன; ஐயோ! நீ என்னை மன்னித்தேன் என்று கூறினாலன்றி என்னுள்ளம் குளிராது" என்று அவளை வேண்டினான்.

மகா அறிவாளியாகிய மரகதவல்லி பேசத்தொடங்கி, "என் பிராணபதே! மன்னிப்பு என்பதை மனிதரிடம் கேட்பது அழகாகாது; கடவுளிடமே கேட்கவேண்டும்; உங்களைக் கடவுள் கடாக்ஷிப்பார்; தாங்கள் வருந்தவேண்டாம்" என்று கூறித்தன்னுடன் வந்த அம்புஜாவை அவனுக்குக் காட்டி, "என் அருமை நாதரே! இந்த மாது சிரோமணி இன்னாரென்பதை நான் தங்களுக்குக் கூறுதிருப்பது அழகாகாது" என்று அவளுடைய வாலாற்றினைக் கூறத்தொடங்கி, அவள் குணவிசேஷங்களையும், அவள் தனக்குச் செய்த உதவியையும் கூறி, மேலும் தான் வீட்டைவிட்டு வெளியேறியது முதல் அன்றுவரை நடந்த சம்பவங்களையும் தெளிவாகவுரைத்து முடித்தாள். இவற்றைக் கேட்ட தணிகாசலமும், கிழவியும் சொல்லவொண்ணு ஆனந்தத்தையடைந்து அம்புஜாவை வாழ்த்தினார்கள். இதற்குள் கிழவி, "ஐயோ! மரகதம்! இதுபரியந்தம் உன் குழந்தையைப் பிரிந்திருந்தது போதும்; உன்னால் உன் மாதா பிதாக்கள் அனுபவித்த துன்பமும் போதும்; இன்றே உன் தங்கைக்கும் விவாகமாகையால் உடனே நாம் அங்குப்போய்ச் சேரவேண்டும்; நீங்கள் முதலில் ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிட வாருங்கள்". என்று அவளை அன்புடனழைத்தாள்.

பின்னர் எல்லோரும் ஸ்நானம் செய்துவிட்டுப் போஜனத்தை முடித்துக்கொண்டு அப்பொழுதே இரயிலுக்குச் செல்லத் தயாரானார்கள். மரகதம் தனது ஆடையாபரணங்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு, தான் அங்கு வந்ததை அக்கம் பக்கத்தாரறியாதபடி மற்றவர்களுடன் ஓர் வண்டியிலமர்ந்து ரயிலடியை அடைந்து ரயிலிலேறி அன்று மாலையே தனது தாய்வீட்டை அடைந்தாள். அப்போது மரகதம், கடுமையான சிக்கினால் அபாயகரமான நிலைமையில் படுத்திருந்த தனது தந்தையைத் திடீரென்று தான் பார்த்

தால் அவர் தன்னைக்கண்டு பிரமித்து மன அதிர்ச்சியினால் உயிர் துறந்துவிடக்கூடுமென்று நினைத்துத் தன் தந்தையையோர் தந்திரச் செய்கையால் பார்க்கவேண்டுமென்று தீர்மானித்தவளாய், முதலில் நேரே வீட்டினுள் புகுந்து தன் தாயாரைக் கண்டு வணங்கி அவளைக் கட்டியணைத்துக்கொண்டு ஆநந்தக்கண்ணீர் அருவிபோலப் பெருகவிட்டாள்.

மரகதவல்லியினுடைய எதிர்பாராத வருகையின் ஆநந்தத்தினால் ருக்மிணி மூர்ச்சையாகிவிட்டாள். பின்னர்த் தெளிந்து எழுந்து மரகதத்தைக் கட்டித்தழுவி, அவள் முகத்தில் பல முத்தங்களிட்டு, "என் கண்மணி! என் மரகதமணி! என் வயிற்றில் பாலை வார்த்தாயா! என் அங்கத்தின் அனலைத்தணித்தாயா!" என்று ஆனந்தக் கூத்தாடினாள். இவளைக் கண்ட ஏனையோர்க் கொண்ட களிப்புக்குக் கரையே இல்லை அவர்கள், மரகதத்தைநோக்கி, "நீ எவ்விதம் பிழைத்து வந்தாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அவள் தன் கணவனுக்கும் தனக்கும் நடந்த ரகஸியத்தை வெளியிடாது தன் கணவன் கூறியதைப்போல, தன்னைப் பைராகி தூக்கிக்கொண்டு போனானென்பதைக் கூறி, அவனைத் தான் துணிகரமாகக் கொன்று விட்டு மெல்லத் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டதாகச் சொன்னாள்.

மரகதம் அங்குச் செல்வதற்கு முந்தியே, முன் உரைத்தபடி ராஜேச்வரியின் திருமணம் ஒருவருக்கும் சொல்லாது ரகஸியமாக நடந்தேறிவிட்டது. மரகதம் தனது தாயாரிடம் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில்தான் ராஜம் முன்கூறியபடி தனது அறையில் தன் அத்தானின் படத்தை வைத்துப் புலம்பியதும், அவளுடைய பர்த்தாவந்துவிட்டதும், அவள் நடுநடுங்கி அந்தப் படத்தைக் கீழே நழுவவிட்டதும் நிகழ்ந்தன. அப்படி அவள் படத்தை நழுவவிட்டுத் தனது கணவனின் காலில் விழுந்து வணங்கி, "என் பிராணநாதா! அறியாமையினால் நான் இப்போது செய்த பிழையை க்ஷமிக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அவ்வாறு பணிந்து எழுந்திருப்பதற்குள் அவ்விடத்திற்கு மரகதத்துடன் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். அப்படி வந்தவுடன், "இவரே மணமகன்" என்று ருக்மிணி ராஜத்தின் கணவனை மரகதத்திற்குக் காட்டினாள். மரகதம் அப்போதுதான் மாப்பிள்ளையைப் பார்ப்பவள்போல அபிநயித்து மாப்பிள்ளையை நோக்கி, "இதென்னவிது! தாடிமிய்யா சாகிப்புவா மணமகனாக வந்தார்!" என்று கூறிக்கொண்டே மணமகனின் தாடியைப் பிடித்து இழுத்ததுடன் கண்ணால் ஜாடை செய்தாள். மணமகன் தாடி, மீசை, டோபா, முதலிய எல்லாவற்றையும் மெல்ல நழுவவிட்டுவிட்டான்.

ஆகா! அவைகளெடுக்கப்பட்டவுடனே மாப்பிள்ளை தாமோதரனாக மாறிவிட்டான். அவன் தாமோதரனே என்பதை ராஜம் அறிந்துகொண்டாள். அவ்வாறு தெரிந்துகொண்டவுடனே தாய்ப் பசுவைக் கண்டு தாவும் கன்றுக்குட்டியைப்போல ராஜம் துள்ளிக் குதித்துத் தன் தமக்கையின் காலில் விழுந்து எழுந்து அவளைக் கட்டிக்கொண்டு, "ஆகா! என்னருமை அக்கா! என்னுருயிர் அக்கா! நீ துணிபுடன் சுயாதீனமாக மாப்பிள்ளையின் தாடியை இழுத்ததால் இந்தத்திருமணத்தில் நீ சம்பந்தப்பட்டிருக்கிறாய் என்பதை நான் யூகித்தறிந்துகொண்டேன்; ஆ! என் பங்கிலும் கடவுளிருந்தாரா! கடவுளே உன் மூலம் இந்த அனுகூலத்தைச் செய்துவைத்தாரா!" என்று கூறிப் பின் தாமோதரனின் காலில்விழுந்து வணங்கி, "எனது கோரிக்கையை நிறைவேற்றிய அந்தப் பரம்பொருளுக்கு முதலில் வணக்கம் செய்யுங்கள்" என்று கூறியவாறு வெட்கத்தையும் விட்டு, அங்குள்ள மனிதர்களையும் பாராது, அவனிரு தாள்களையும், மண்டியிட்டு உட்கார்ந்த வண்ணம், கெட்டியாக அணைத்துக்கொண்டாள். உடனே அவள் பர்த்தா அவளை வாரித்தூக்கி அணைத்தவாறு, "என் கட்டிக்கரும்பின் சுவையே! நாம் இப்போது அனுபவிக்கும் ஆநந்தம், என்னரிய மரகதமணியினாலும், ரங்கமணியினாலுமே ஏற்பட்டதென்று விவரத்தைச் சொல்லி,'அவர்களே நமக்குத் தெய்வம்" என்று கூறியவாறு அங்குள்ளோரனைவருக்கும் வந்தனம் செய்தான். இந்த அதிவினோதமான காட்சியைக் கண்டு அங்கு வியப்புறாதவர்களில்லை.

இதற்குள் ருக்மிணி மரகதவல்லியின் குழந்தையைக் கொணர்ந்து அவள் கையில் கொடுத்துத் திருஷ்டி தோஷம் கழித்துத் தன் னுவலைப் பூர்த்தி செய்துகொண்டு மரகதத்தை அவள் தந்தையிடமழைத்தாள். மரகதம், "திடீரென்று அவர் என் வரவைக் கண்டால் அவருக்கு மார்பதிர்ச்சி யுண்டாகும்; ஆகையால் யான் கூறுகிறபடியே நீ செய்; நீ முதலில் தந்தை பக்கலில் அமர்ந்து, "அம்மா! மரகதவல்லி! மரகதவல்லி!" என்று என்னைக் கூப்பிடு; அப்போது என் தந்தை நீ அவ்வாறு கூப்பிடுவதற்குக் காரணமென்னவென்று கேட்பார்; பின்னர் என்வரவை நீ அவருக்குத் தெரிவி; அதன்மேல் நான் வருகிறேன்" என்றாள். உடனே ருக்மிணி கண்ணபிரானிடம் சென்று உட்கார்ந்து மரகதம் சொல்லியபடி அவளை அழைத்தாள்.

அதைக் கேட்ட கண்ணபிரான், "ஐயோ! ருக்மிணி! உனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதா! என் செல்வியை இனி யவ்விதம் அழைத்தும், கண்டும் நாம் ஆநந்திப்போமா!" என்றான். அதே தருணம் மரகதவல்லி தன் குழந்தையுடன் தந்தை யருகில் வந்து,

"அப்பா! அந்த ஆனந்தத்தை இப்போதே கடவுள் உங்களுக்கு அளித்துவிட்டார்" என்று கூறிக்கொண்டே குழந்தையைத் தன் தாயிடம் கொடுத்துவிட்டு அவர் பக்கலில் உட்கார்ந்து அவரை யணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டாள்.

தன் கனவிலும் எதிர்பாராவிதமாக மரகதத்தைக் கண்டதும் கண்ணபிரான், "ஆ! என் கண்மணியா; என் மரகதமணியா!" என்று ஆநந்த பரவசமடைந்துவிட்டார். மரகதத்தைக் கண்ட ஆநந்தத்தினுல் அவருக்கு விழுந்துவிட்ட கரங்களும் எந்திரம் வைத்துத் தூக்கியது போலச் சுவாதீனமாகி அவர் மரகதத்தை அக் கைகளால் கட்டி யணைத்துத் தடவினர்.

புத்திரி சோகத்தினுல் அவருக்கு ஏற்பட்ட நோயானது, அப் புத்திரியைக் கண்டவுடன் நீங்கிப் பழயபடி கரங்களும், வாயும் சுவாதீனமாகிவிட்ட அதிசயத்தை எல்லோரும் கண்டு வியந்தார்கள். பின்னர் மரகதத்தை நோக்கி, "நீ என்னவிதமாகத் தப்பிப் பிழைத்து வந்தாய்?" என்று அவளுடைய பிதா கேட்டார். அதற்கு அவள் உயர்ந்த யோசனை யுள்ளவளாகையினுலும், தாமோதரனுக்கு விவாகத்தைத் தான் ரகஸியமாக நடத்திவிட்டதனுலும், அதற்கு உண்மைகளையே கூறவேண்டுமென்று எண்ணியவளாய் எல்லோரையும் வெளியிலனுப்பிவிட்டு, தான் தெரிவிக்கும் விஷயங்களைப் பிறரிடம் உரைக்கலாகாதென்றும், அவற்றை யுத்தேசித்துத் தன் கணவனை யொன்றும் சொல்லலாகாதென்றும் சொல்லிக் கண்ணபிரானிடம் உறுதிமொழி வாங்கிக்கொண்டு பின்னர் தன்னுடைய சகல விஷயங்களையும், தான் அங்கு வந்து சேர்ந்தது வரையில் சாங்கோபாங்கமாகக் கூறிவிட்டாள்.

அவற்றைக் கேட்ட கண்ணபிரானுக் குண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அன்று ராஜேச்வரியை மணந்தவன் தாமோதரன் என்பதையும், தாமோதரனே மரகதத்தைக் காப்பாற்றினுன் என்பதையும், அவன் குற்றமற்றவன் என்பதையும், தனக்கு மிகவும் வேண்டியவளாகிய மரகதம் கூறிவிட்டமையால் கண்ணபிரானுக்குத் தாமோதரன் மீது இருந்த பழய துவேஷம் நீங்கிவிட்டது.

தனது புதல்வியை அடைந்த சந்தோஷத்தினுல் அவன் வேறு எதையும் பொருட்படுத்தவில்லை. அதோடு மரகதமே மறைந்து ராஜத்திற்கு விவாகத்தைச் செய்துவிட்டதால் அதை ஆட்சேபிக்கவும் அவன் மனம் துணியவில்லை. அவன் எல்லாம் கடவுளினருள், என்று மனந்தேறியவனுய் மணமகனையும் ராஜத்தையும் அழைத்

துத்தன்னெதிரில் நிற்கச்செய்து கண்டுமகிழ்ந்தவாறு மருமகனை நோக்கி, "என்னப்பனே! எனதன்பான மருகா! எனது மதியீனத்தினால் உனக்குச் செய்த திங்கை எல்லாம் மறந்து என்னை மன்னிக்க வேண்டுகிறேன்" என்றான். இதைக்கேட்ட தாமோதரன் மிகுந்த வணக்கத்துடன் "மாமா! எல்லாம் கால வித்தியாசமேயன்றி ஒருவராலும் ஒன்றும் தப்பிதமில்லை. தாங்கள் வருந்த வேண்டாம்." என்றான்.

அதே தருணத்தில் 10—15 பேருள்ளகூட்டம் அங்குப் பிரவேசித்தது. அதில் ஒருவர், "ஆ! எங்கே என் குழந்தைகள்? எங்கே என் குழந்தைகள்?" என்று ஆவலோடு கேட்டுக்கொண்டே வந்தார். அக்கூட்டத்தில் அவர்கூடவந்த கண்ணபிரானின் தங்கையாகிய கோமளவல்லியின் புருஷன் தாமோதரனை அவருக்குக்காட்டி, "இதோ உமதுசெல்வன்; நான் வளர்த்த சுதன் இவன் தான்". என்றார். டில்லியிலிருந்து கடிதமெழுதிய மனிதரும் மஞ்சுளாவை அவருக்குக் காட்டி, "ஆகா! இதோ உம்முடைய மகள்; இவளே நான் வளர்த்த வனிதை" என்றுகூறினார்.

அங்கு ஆவலுடன் வந்த மனிதர் ஸீதாராமதாஸர் என்பதை நாம் கூறவேண்டுவதில்லை. அவர் தாமோதரனையும், மஞ்சுளவல்லியையும் தழுவி உச்சி மோந்து, "மறைந்து கிடந்த மாணிக்கங்களா! என் செல்வங்களா!" என்று கொஞ்சி ஆநந்தக் கடலில் மூழ்கினார்.

இந்த அதி வினோதமான காட்சியின் வரலாற்றை அறிந்து கொள்ளக் கூடாமல் அங்கிருந்த எல்லோரும் திகைத்தார்கள். மஞ்சுளாவும், தாமோதரனும், இந்த மனிதரை தங்களுக்குப் பிதாவென்றும், தாமிருவரும் உடன் பிறந்தோர் என்றும் உணர்ந்து கொண்டார்கள்; அந்த அற்புதமான விஷயத்தால் சிறிது நேரம் மூர்ச்சித்துத் தெளிந்தார்கள். பின்னர் அவர்களுடன் கூடவிருந்த நாயுடு ஸீதாராமதாஸர் விவரங்களையும், தாமோதரனும், மஞ்சுளாவும் அவருடைய மக்களே என்பதையும் கூறியதுடன், கவர்னருக்கனுப்பிய மனுவை அவர் அங்கிகரித்துத் தாஸரை விடுதலை செய்து விட்டாரென்றும், சிவசாமியாயிருந்தவரே ஸீதாராமதாஸர் என்றும் விளக்கமாகக் கூறினார்.

இதைக் கேட்ட கண்ணபிரான், அடக்க வியலாத வியப்படைந்து ஸீதாராமதாஸரை நோக்கி, "ஆகா! சிவசாமி! என் அடையாளம் தெரிகிறதா? நீ எனது ஒன்று விட்ட அம்மானின் மகனல்லவா! அடாடா! கடவுளின் அருளை என்னென்று கூறுவேன்! உன் மகனுக்கு இன்றே நான் எனது குமாரத்தியைக் கொடுத்து விவாகஞ்

செய்து வைத்தேன்; நாமறியாதவாறே நமது சம்பந்தத்தை ஈசன் நடத்தி விட்டார்" என்றார். மஞ்சுளாவும், தாமோதரனும் தமது தந்தையை வணங்கி எழுந்தார்கள். தன்னுடைய ஆபத்தில் தன்னைத் தனது அண்ணனே காத்ததை எண்ணி மஞ்சுளா அவனைப் பலவாறு கொண்டாடினாள். அவர்களுடன் கூட வந்த கோமளவல்லி, ஸீதாராமதாஸை நோக்கி, "என்ன! என்ன! சிவசாமியா நீ! உனது மகனா தாமோதரன்! அடடா என்ன ஆச்சரியம்! எனது உறவினனாகிய உன்னுடைய மகனே தாமோதரன் என்ற தகவலை யறியாமலேயே அவனை நாங்கள் வளர்க்கும்படி கடவுள் எங்களிடம் சேர்ப்பித்திருக்கிறார்; (டில்லியிலிருந்து வந்த மனிதரைக் காட்டி) இதோ இவர் தான் தாமோதரன் 3 வயது குழந்தையாயிருக்கும் போது அகஸ்மாத்தாக எங்களைக் கோவிலில் சந்தித்து, அவனை அனாதைக் குழந்தை என்றும், புத்திரப் பேறில்லாத உங்களுக்குக் கடவுள் இவனைப் புத்திரனாகக் கொடுத்தார் என்றும் கூறிக் கொடுத்தார். அப்போது அவன் இன்னாருடைய குழந்தை என்பது எனக்குத் தெரியாது. அப்போதே நான் அவனை வாங்கிக் கொண்டு வந்து வளர்த்தேன்" என்று கூறி அவனுக்கு விவாகத்தையும் கடவுளே நடத்தி விட்டதையறிந்து மிகவும் மகிழ்ச்சியை அடைந்தாள். அங்கிருந்தவர்கள் எல்லோரும் மணிவண்ணனின் செய்தியையும், மஞ்சுளாவின் பதிபக்தியின் பெருமையையும் அறிந்து வியப்பென்னும் பெருங்கடலுள் ஆழ்ந்தார்கள்.

ஸீதாராமதாஸரும் இவர்களுடைய பாந்தவ்யத்தை யறிந்து மகிழ்ந்தார். அம்புஜா தாஸரைக்கண்டு வணங்கி அவருக்குவந்த ஆபத்து நீங்கியதற்கு மகிழ்ந்தாள். தாஸரும் அம்புஜாவைக் கண்டு மகிழ்ந்தார். இந்த அதிசயங்களை யெல்லாம் கண்ட ருக்மணிக்குச் சந்தோஷம் அதிகரித்தது. அவள், ஆனந்தசாகரத்தில் மூழ்கிய படியே பேசத்தொடங்கி, "ஆகா! கடவுளின் மகிமைச் செயல்களை எவரறியவல்லார்! அவரருளால் அழகியதோர் பூங்காவில் அதிசய மதிசயமாகப் பல புஷ்பங்கள் புஷ்பித்துப் பரிமளத்தை வீசுவது போல தற்போது ஒன்றன் பின் ஒன்றாகப் பல அற்புத சம்பவங்கள் நிகழ்ந்தன; இவற்றால் எல்லோருடைய மனமும் மகிழ்ச்சி மயமாக மாறிவிட்டது; இப்போது தான் என் வயிறு குளிர்ந்தது. என் மனம் சந்தோஷ மடைந்தது" என்றாள்.

ஸீதாராமதாஸரின் இளைய மனைவியாகிய ஜானகியம்மாளும் தனது மூத்தாளின் மக்களைக்கண்டு ஆநந்தித்து அவர்களை அணைத்துக் கொண்டாள். அவளும் அன்று அந்த ஆநந்தத்தில் கலந்து கொண்டாள்.

அன்று காலையில் வெகு ரகஸியமாக நடந்த திருமண வைபவமானது சாதாரணமாக எவ்வித கோலாகலத்துடன் நடக்க வேண்

டுமோ அதை விட பதினுயிரம் பங்கு அதிகரித்த கொண்டாட்டத்துடன் அன்று இரவு நடந்தது. இராஜ போக்யமான விருந்துச் சாப்பாடுகள் நடந்தன; வதுவரர்களுக்கு விநோதமாக நலங்கு, ஊஞ்சல் முதலியன நடை பெற்றன; உயர்ந்த பாட்டுக் கச்சேரியும் நடந்தது. காலையில் வராத உறவினர்களெல்லோரும் வரவழைக்கப்பட்டார்கள். அவர்களும் வந்து இந்த வைபவத்தில் கூடிக் கொண்டார்கள். அன்று கண்ணபிரான் பங்களாவானது சாக்ஷாத் ஸ்ரீ கண்ணபிரானின் நித்தியவைபவக் கொண்டாட்டத் திருக்கோவில் போலவே தோன்றியது. எல்லோரும் தேவாலயங்களுக்குச் சென்று கடவுளை ஆராதித்து அவருக்கு நிவேதனம் முதலியன செய்து மகிழ்ந்து வந்தார்கள்.

அன்று அந்தத் தடபுடலில் கூடியிருந்த யாவரும், 'எவரை எப்படி விசாரிப்பது? எவரிடம் எப்படிப் பேசுவது?' என்பவைகளை மறந்து ஆநந்தத்தினுல் மனம் போனபடி களியாட்டில் மூழ்கி யிருந்தார்கள். கண்ணபிரானும் தன் மகளின் வார்த்தையைத் தட்டாது தணிகாசலத்தினிடம் ஒருவித வித்தியாசமும் காட்டாமல் இருந்து விட்டான். அங்குவந்து கூடிய மந்திரவாதியையும், ஜோஸியனையும் அந்தக் கூட்டத்தில் எவரும் கவனிக்கவில்லை. அவர்கள் மெதுவாகக் கம்பி நீட்டிவிட்டார்கள். மறுநாள் அவ்விருவரும் வழக்கமாகத் தங்கியிருந்த விடத்தில் அவர்கள் காணப்படவில்லை; ஓர் கடிதம் மட்டுமிருந்தது. அதை நாயுடுவே கண்டெடுத்து எல்லோரும் கேட்கும் வண்ணம் படிக்கலாயினுர். அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தவைளாவன:—

"ஐயா!

வானத்திற்கும் பூமிக்கும் எத்தனையோ தூர மிருப்பினும் கடவுள் அங்கிருந்த நீரை மழையாக மாற்றிப் பூமியில் இறங்கச் செய்கிருர்; அதைப் போலவே எவ்வளவோ தூரத்திலிருந்த நாயுடுவாகிய புலியையும், உங்கள் புதல்வி மருமகன் முதலியோரையும் இங்கே கொண்டுவந்து சேர்த்து விட்டார்; இனிமேல் எனது சாமர்த்தியம் பலியாதென்பதை யானறிந்தேன்; இனி அந்தப் புலி என்னை விடப்போவதில்லை; ஒருவன் பிறருக்கு எண்ணும் வஞ்சகம் அவனுக்கே நேரு மென்பதை நிதர்சனமாக நான் கண்டுவிட்டேன்; பல வருஷங்களுக்கு முன்னுல் உங்கள் கிராமத்தில் வசித்த ஓர் பையன் சில துர்ச் செய்கைகளைச் செய்ததற்காக எங்கள் குடும்பத்தைஹிம்ஸைக்குள்ளாக்கி அவ்வூரை விட்டு வெளியேறும்படி நீங்கள் ஓட்டிவிட்டீர்கள்; அது தங்களுக்கு நினைவிருக்கலாம்; யான் அப்போது சிறு பையனுயிருந்தேன்; வயிற்றிற் கில்லாமல் பொருளைக் களவாடியதன் பயனுக அண்டமானில் 10 வருடமிருந்து வந்தேன்; உங்கள் செய்கையினுல்தான் எங்கள் குடும்பம் சிதறியதென்ற ஆத்திரம் என்னை விட்டு நீங்கவில்லை; அதனுல் உங்கள் குடும்பத்தையும் ஏதேனும் ஒரு வழியில் கலங்கச் செய்து, உங்கள் குடும்ப ஜனங்களுக்கும் துன்பத்தை உண்டாக்க வேண்டும் என்ற கருத்து எனக் குதித்தது; அதன்மேல் உங்கள் கண்ணைப் போன்ற பெண்ணை வருத்த வெண்ணி, உங்கள் மருமகனும், நானும் ஓரிடத்தில் விருந் துண்ணும் சமயத்தில் அவள்

மீது அபவாதமாகச் சில பொய்க் கதைகளைக் கூறினேன்; அதனால் இவ்வித ஆபத்துக்கள் நேரும் என்று நான் எண்ணவில்லை; மாப்பிள்ளை பெண்ணை இம்சிப்பார்; அதனால் உங்களுக்குத் துன்பம் நேரும் என்று எண்ணினேன்; அதன்மேல் தங்கள் சிறிய பெண்ணின் உயிர் போன்ற தாமோதரனைத் துன் புறுத்தினால் அந்தச் சிறிய பெண் வருந்து மென்றும், அதனால் நீங்களும் வருத்தமடைவீர்க ளென்றும் தீர்மானித்து மாந்திரீகன் போல வேடந் தரித்து வந்து உங்கள் வீட்டில் சேர்ந்து சில உபாயங்களால் தாமோதரன்மீது தங்களுக்கு வெறுப்புண்டாகும்படி செய்தேன். என்னுடைய மந்திர தந்திரங்களெல்லாம் அந்தரமாய்ப் போய்விட்டன; என் வினை எனக்கே வந்துவிட்டதென்பதற்கு அடையாளமாக அந்தத் துப்பறியும் புலி இவ் வீட்டில் வந்துவிட்டது; ஆதலால் மரகதவல்லி விஷயத்தில் தாமோதரனை சம்பந்தப் படுத்திக் கூறிய யாவும் கட்டுக் கதையேயாம்; நான் கிளம்புகிறேன்; இனி என்னையும் என்னுடன் ஜோவியனுக விருந்தவனையும் நீங்கள் காணமாட்டீர்கள்; எங்களுக்குப் புத்தியும் வந்து விட்டது; இப்போது புத்தி வந்ததால் ஒரு பயனு மில்லை; கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வதால் யாது பயன்?. அத்தகைய கருணை நிரம்பிய வீதாராம தாஸரையே பிடித்த புலிக்கு யான் சுண்டெலியே ஆவேன். என் குற்றத்திற்கு என்னைக் கடவுள் தண்டிப்பார்; ரங்கோனில் திருடியவன் தாமோதர னல்ல; அவன் வேறு மனிதனே யாவன். வேணும் நமஸ்காரம்" என்பவைகளே.

இவற்றை நாயுடு, மிகவும் உரக்கப்படித்தார். இவற்றைக் கேட்ட எல்லோரும் இயம்ப வியலாத ஆச்சரியத்தை யடைந்து, "ஆகா! ஆகா!" என்று ஆத்திரப்பட்டார்கள். கண்ணபிரானுக்கு ஒன்றுமே தோன்ருது அவர் திகைத்து விழித்தார். ருக்மிணியும், ராஜமும் மந்திரவாதியை நம்பாதீர்கள், என்று ஆதியில் அவருக்குக் கூறியதை நினைப்பூட்டி இடித்துக் காட்டினார்கள். "அனியாயமாகப் படுபாவியை நம்பி மிக மோசம் போய்விட்டோமே!" என்று கண்ணபிரான் துக்கித்தான்.

பின்னர் நாயுடு. "நான் இனிச் சென்று வருகிறேன்; எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று கண்ணபிரானிடம் கேட்டுக் கொண்டதுடன், "அந்த மோசக்காரர்களை யான் எவ்விதமேனும் கண்டுபிடித்துவிடுகிறேன்" என்றும் உறுதி கூறினார். எனினும் நாயுடுவை மேலும் 10 தினங்கள் வரை தம்முடன் கூடவே இருக்கும்படி கண்ணபிரான் வேண்டினார். அதன்பேரில் அவர் அதற்கிசைந்தார். நாயுடு தமக்குத் தெரிந்த வைத்தியரைக் கொண்டு கண்ணபிரானுக்குச் சிகிச்சை செய்விக்கத் தொடங்கினார். அவருக்கு வியாதி நீங்கிக் குணமடைய வாரம்பித்தது. கோமளவல்லி, அவள் புதல்வன் ஆகியோரிடத்தில் கண்ணபிரான் பகையின்றிப் பக்ஷமாக நடக்கத் தொடங்கினான்.

தன் பணங்களையும், நகைகளையும் வாங்கி மணிவண்ணனுக்குக் கொடுத்து விட்டதுடன், தனதுரகஸியத்தையும் வெளியிட்டு விடுவதாகத் தனது தமக்கை தெரிவித்ததால் மைவிழி பீதியடைந்து நோய் கொண்டு இறந்து விட்டாள். அவள் தாயாரும் மகளின் பிரி

வால் தற்கொலை செய்து கொண்டாள். அவர்களுக்கு மிகுதியிருந்த ஆஸ்தியை அம்புஜா தர்மத்திற்கு வைத்து விட்டாள். பின்னர்ச் சில தினங்களில் மந்திரவாதியும் ஜோஸியனும் ஓர் கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டு அரசாங்கத்தாராலேயே தூக்கு தண்டனையடைந்தார்கள். இவ்வாறு தண்டனையடையச் செய்தவர் நாயுடுவே. ரங்கோனில் திருடிய தனகோடியையும் அவரே கண்டு பிடித்து சிக்ஷையடையச் செய்தார். கவர்ன்மெண்டாரும் கண்ணபிரானும் நாயுடுவை வரவழைத்துஅவர் செய்த பேருதவிகளுக்காகத் தகுந்த மரியாதை செய்துகொண்டாடி அனுப்பினார்கள்.

பின்னர்க் கண்ணபிரான் தெளிவடைந்து மெல்ல நடக்கும் படியான நிலைமையை அடைந்து, சில தினங்களில் பூரண சௌக்கியத்தையடைந்தான். அவன் தனக்கு நன்றாகக் குணமடைந்த பின்னரே ராஜத்தின் சோபன கல்யாணத்தை நடத்தத் தீர்மானித்திருந்தான். ஆதலால் அவ்வாறு குணமடையவே, ஒரு நாள் சகல பந்துக்களையும் வரவழைத்து மிகுந்த கோலாகலத்துடன் ஓர் அற்புதமான சுபமுகூர்த்தத்தில் ராஜேச்வரிக்கு ருது சாந்தி முகூர்த்தத்தை நடத்தி வைத்தான். அம் முகூர்த்தம் வெகு சிறப்புடன் நடந்தேறியது.

சோபன அறையை அடைந்த ராஜம் தனது பிராணபதியின் சரணங்களில் மலர் தூவி அர்ச்சித்து வணங்கி எழுந்து அவனுக்குப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து அவன் மார்பில் கந்தகளப சந்தனம் பூசிப் பன்னீர் தெளித்து அவனுக்குப் பண்டு பலாதி பக்ஷணங்களையளித்துப் பின்னர் அவனை நோக்கி, “என்னாருயிர்க் காதலரே! ஆகா! என்னென்றுரைப்பேன் ஈசன் மகிமையை! தாங்கள் என் தலையில் பேரிடிவிழுந்து விட்டது போலான ஒரு கடிதத்தை விடுத்து என்னை வருத்தியது ஓர் விளையாட்டா!” என்று கேட்டாள்.

இதைக் கேட்ட அவள் கணவன் ஆநந்த முதிர்ச்சியாலும், அன்பின் பெருக்காலும் ராஜத்தை இறுகத் தழுவி அவள் முகத்தில் பல முத்தங்களிட்டுப் பின்னர்ப் பேசத் தொடங்கி, “என் அன்பின் ஆலயமே! தெவிட்டாத தீங்கனிச்சுவையே! யான் அந்த வேலை செய்திராவிட்டால் தற்போது யாமடைந்துள்ள ஆநந்தம் நமக்குக் கிடைத்திருக்கமாட்டாது;உன் மனம்முறிந்து நீ உன் தந்தையின் மனப்படி நடக்கும் பொருட்டே நான் அவ்விதம் செய்தேன்; இந்தச் சூழ்ச்சியும் உன் தமக்கையுடையதே யாகும்; அவ்வமயம் காரியசித்திக் கனுகூலமான வேறுவழியும், அவகாசமும், இல்லாமையால், அதுவே கடவுளின் கருத்தெனத் துணிந்து நாங்கள் அதைச் செய்தோம்; அவ்வாறு செய்ததால், அவனருளால் எல்லாம் அனுகூலமாகவே நடந்தது; அவனன்றியோரணுவும் அசையுமா! எல்லாம் அவன் கட்டளைப் படியே நடக்கின்றது; என் கண்ணின் மணியே! அன்று உன்னைத் தோட்டத்தில் பிரிந்து போகும்படி

கடவுள் செய்த காலத்தில் என் மனம் எந்த விதம் தவித்துருகின
தோ, அதற்கு நேர்மாறாகத் தற்போது ஆநந்த மயமாகிவிட்டது;
இதையும் அந்தக் கடவுளே செய்தார்; என் இன்பவல்லி! உனது
அடையாளமாக இதுகாறும் எனது ஜேபியிலேயே சதாவிருந்த
இந்தத் தங்கச் சங்கிலியை இதோ உன் கழுத்தில் நான் அணிகின்
றேன்; உன்னையே கடவுள் எனக்களித்தபின்னர் இதை உன் கழுத்தில்
சூடுவது நியாயமாகும்" என்று கூறி அதை அவள் கழுத்தில் அணி
ந்து அளவுக்கு மிஞ்சிய ஆநந்தத்தினால்உடல் பூரித்து, உள்ளம்
மலர்ந்து, அபாரமான இன்பவெள்ளத்திலாழ்ந்து அவளைக் கட்டி
யணைத்து முத்தமிட்டு ஆநந்த பரவசம் அடைந்தான்.

சில மாதங்கள் கழிந்த பின் மரகதம் தன் கணவனை நோக்கி,
"என் பிராண நாதா! ஓர் விண்ணப்பம்: அதாவது, நம் குழந்தை
பிறந்த ஜனன பூமியாகிய ஸிம்மாசலம் சென்று அங்குஎனக்கு உதவிய
கிழவியைக் கண்டு அவளுக்கு மரியாதைசெய்து, அவ்வூர்க் கடவுளை
வணங்கிப் பின் தம் குழந்தையின் வருடாப்த பூர்த்தி மகோற்சவ
த்தை அவ்விடத்திலேயே செய்யவேண்டும் என்ற எண்ணம் எனக்
கு உதித்திருக்கிறது; இவ்விஷயத்தில் உங்கள் அபிப்பிராயம் எப்
படியோ அதைத் தெரிவித்தால் அதன்படி நடக்கலாம்" என்று
வெகு வணக்கத்துடன் கூறினாள்.

இதைக் கேட்ட தணிகாசலம், "ஆகா! என்னாருயிர் மரகத
வல்லீ! இனியுமா நீ என்னை முன்னிருந்த தணிகாசலம் என்று
எண்ணுகிறாய்? எனது மந்தமதியைப் போக்கி எனக்கு நற் புத்தி
கற்பித்த உத்தமி சிகாமணியாகிய உன் நடக்கையையும், உனது
சினேகிதைகளான அம்புஜம், மஞ்சுளவல்லி இவர்களின் நடக்கை
களையும் கண்ட பின்னரும் எனக்குப் புத்திவராமலிருக்குமா! என
க்கு நற்புத்தி வந்தது; இனி உன் இஷ்டப்படியே நான் எதையும்
செய்வேன்; நீ உத்தேசித்த காரியத்தைத் தடையின்றி நிறைவே
ற்றலாம்" என்று கூறினான்.

இதைக் கேட்ட மரகதம், "நாதா! பழய காலத்து நினைவை
அறவே மறந்து விடுங்கள்; எல்லாம் ஈசனருள்; ஆகையால் இனி
மேல் நம்முடைய பொழுதை நல்ல வழியில் செலுத்திக் கடவுளை
இடைவிடாது பணிந்து அவனுடைய பாதங்களை அடையும் வழி
யைத் தேடுவதையே நாம் நாடவேண்டும்; ஸிம்மாசலத்தில் எழுந்
தருளியிருக்கும் நரஸிம்மனை எல்லோரும் சேவிக்க வேண்டுவது
அத்யாவசியமாகும்; ஆதலால், நாம் தனித்துச் செல்வது கூடாது;
எல்லோரும் ஒன்றாகச் செல்லவேண்டும்; நான் சென்று மஞ்சுள
வல்லியை அழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டு மஞ்சுளாவிருப்
பிடம் சென்றாள். அப்போது மஞ்சுளா, அவள் அண்ணன், தாய்,
தந்தை, ராஜம், மணிவண்ணன் ஆகியவர்கள் கூடித் தம் தம் அன்
பின் பெருக்கால் வெகு பிரீதியுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். அத்

தருணத்தில் தாமோதரன் மஞ்சுளாவை நோக்கிப் பேசத் தொடங்கி, "என்னருமை அக்கா! 'உப்பில்லா உண்டி பாழ்' என்றும், 'உடன் பிறவியில்லாத பிறப்பு பாழ்' என்றும் ஆன்றோர் கூறியுள்ளபடி எனக்கு உடன் பிறந்த செல்வமாகிய நீயும், என்னைப் பெற்ற மாதா பிதாக்களாகிய இவர்களும் இருந்தும் நான் உங்களோடு கூடி வாழும் பாக்கியத்தை யடையாது சில வருடங்களாகப் பாழான வாழ்க்கையை அடைந்திருந்தேன்; என்னை அத்தகைய வாழ்வில் வைத்த கடவுளே தற்போது உங்களோடு கூடி மகிழும்படி செய்திருக்கிறார்; அவர் எனக்கு இத்தகைய பேருதவியைச் செய்ததற்கு நான் மனமுவந்து அவரை வணங்குகிறேன். அன்று உன்னை நான் காப்பாற்றிய காலத்தில் மஞ்சுளாவென்ற உன் பெயரைக் கேள்வியுற்றதும் உன்னைப்பற்றி ஏதோ ஒருவித நினைவு வந்தது. ஆயினும் ஒரே பெயருடன் உலகத்தில் மனிதர் ஆயிரக்கணக்கிலிருப்பதை எண்ணி நீ வேறு அன்னியப் பெண்ணாயிருப்பாயென்று உன்னைக் கவனிக்காமல் வாளா விருந்துவிட்டேன்" என்று கூறினான்.

அதன்மேல் மணிவண்ணன் மஞ்சுளாவை நோக்கி, "என் கண்மணி! நீ இதுகாறும் இழந்திருந்த எல்லா ஆநந்தங்களையும், கடவுள் உனக்கு ஒரே சமயத்தில் கொடுத்துவிட்டார்; ஆகையால் பழங்கால வர்த்தமானங்களை இனிச் சிறிதும் எண்ணாதே; எல்லாம் காலவித்தியாசத்தால் நடந்தன" என்றான். அதே தருணம் மேற்கூறியபடி சென்ற மரகதம் அங்கு வந்து, "கால வித்தியாசமெல்லாம் தீர்ந்து விட்டது; இப்போது எல்லோருக்கும் நல்ல காலம் வந்துவிட்டது; இனி நமக்கு எப்போதும் ஆனந்தமே யுண்டாகும்; அன்புள்ள நேயர்களே! நான் உங்களுக்கோர் நற்செய்தி கொணர்ந்திருக்கிறேன்" என்று கூறித் தனது கருத்தைத் தெரிவித்தாள். எல்லோரு மதற் கிசைந்தார்கள்.

பின்னர் ஓர் சுப தினத்தில் கண்ணபிரான் வீட்டாரும், பாலாமணியும் அவள் வீட்டாரும், மஞ்சுளா, அவள் புருஷன், ஸீதாராமதாஸர், அவர் மனைவி, அம்புஜா ஆகிய எல்லோரும் சிம்மாசலம் சென்று கடவுளைத் தரிசித்து, மரகதம் குழந்தையின் வருடாப்த பூர்த்தியை அங்கு வெகு சிறப்பாகச் செய்து முடித்தார்கள். அதன்மேல் மரகதம், தனக் குதவிய கிழவிக்கு 5000 ரூபாய் சன்மான மளித்தாள். சிம்மாசலத்திலிருந்த பிரபல வைரவியாபாரியொருவர் அம்புஜாவின் வைரம் போன்ற குணத்தையே முக்கியமாகக் கருதி அவளுடைய சம்மதியின் பேரில் அவளை மணக்க இசைந்தார். ஸீதாராமதாஸரும், கண்ணபிரானும் சேர்ந்து அம்புஜத்தின் விருப்பத்தை யறிந்து பின்னர் அந்த வியாபாரிக்கும் அம்புஜத்திற்கும் திருமணம் செய்துவைத்தார்கள். அவர்கள் மரகதம் முதலியவர்களிடம் அடிக்கடி வருவதாகக் கூறித் தங்கள் சொந்த ஊராகிய சிம்மாசலத்திலேயே தங்கிவிட்டார்கள்.

# THE "HINDU"

(28—11—1928)

We have received a copy of *Gowri-Mukundhan* an interesting Tamil novel, by SRIMATHI V. M. KOTHAINAYAKI AMMAL, who has already won a reputation as a novelist as evidenced by the public appreciation of her previous works, *Jambaka Vijiam*, *Vaidehi* and *Padmasundaran*.

The book under review contains the pathetic and yet elevating story of two orphans, a prince and a princess who, under stress of circumstances, are denied even the ordinary comforts of life. Under assumed names, they spend their youth under the patronage of generous people. A sealed cover was left behind by their mother Sundaravalli, who committed suicide unable to bear the hardship and insult caused by the usurper of her husband's kingdom, after he murdered the legitimate monarch. Only very late in the story, their real identity is revealed, as their mother had specially desired that the sealed cover should be opened by a ruling monarch after a certain period. The spirit of public service and sacrifice, displayed by the prince, Mukundan, the admirable modesty, chastity, refinement and beauty of his younger sister, Gowri, are vividly brought out. The princess is eventually married to a prince of the neighbouring country and the hero, Mukundhan, marries a girl of his own choice, who is eventually recognised as a relation of his own mother.

*There are several stirring events in the novel both inspiring and educative.* Virtue triumphs over vice and the novel concludes with rewards to the virtuous and punishment to the wicked. *The moving incidents in the book are described in an eloquent and telling style.*

---

குறிப்பு:—482வது பக்கத்தில் 9-வது வரியிலுள்ள மைலாவின் என்பதை "மஞ்சுளாவின்" என்று படிக்கவும்

**ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்**

*எழுதிய அற்புதமான நாவல்கள்*

**(சித்திரப்படங்கள் கூடியவை)**

## சண்பக விஜயம்

இதுவரையில் எழுதி வெளிவந்த நாவல்களைவிட இதில், சிறுவரும், சிறுமியரும் உவந்து படிக்கவும், போற்றவும், படித்ததை நினைக்கவும், பிறருக்குச்சொல்லிப் புகழவும் தக்கபடி உயர்ந்த நீதிகளையும், உலகப்போக்கையும், கற்பின் பிரபாவத்தையும், பெரியாரின் பெருமையையும், நல்லோரின் நடவடிக்கைகளையும், உத்தம குணப்பெண்களின் இலக்ஷணங்களையும் அநேக மேற்கோள்களுடன் விளங்க வைத்திருக்கிறது.

இதில் எந்தச் சம்பவமும் ஆச்சரியத்தை யுண்டாக்கக் கூடியதாயும், அறிவைப் புகட்டக் கூடியதாயும், தீயவருடைய மனதைத் திருத்தக்கூடிய வகையிலும் சிறந்து நிற்கும். விலை ரூ. 1-12-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 1-8-0.

## வைதேகி

இதில் கதா நாயகியின் மன உறுதி, கற்பின் மாட்சி, உன்னத குணங்களின்உயர்ச்சி முதலியனவும் கதாநாயகி நாயகருடைய தெய்வீகக் காதலின் இலக்ஷணம். கீரைக்கார காமாக்ஷியின் உயரிய குணங்கள், துப்பறிபவரின் திறமையும், லொள்ளுதுரை, லோகாற்புதம் ஜமீந்தார், பொக்கைக் கிழவி, மார்வாடி, சாரங்கபாணி, ஊரளந்தான், அடியளந்தான் முதலியவர்களின் ஹாஸ்ய விநோத அற்புதச் செய்கைகளும் இன்னும் மற்ற ரஸங்களும் நிரம்பப் பெற்று ருசிகரமாக விளங்குகின்றன. இது அநேக பத்திரிகைகளாலும், பிரமுகர்களினாலும் மதிக்கப்பெற்றது. 540-பக்கங்கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூபாய். 2-8-0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0.

## பத்ம சுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் அதனாலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெருமையும், கதா நாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த நோக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான செய்கைகளும், செல்லப்பாவின் துயரமும், அவன் தன் தீயொழுக்கத்திலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் நிலைமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், அழுமூஞ்சி அண்ணாவி இவர்களின் ஹாஸ்யரஸப் பிரதானமான செய்கைகளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப்பென்பதே தராமல் ஆநந்திக்கச்செய்யும். விலை ரூ. 2-8.0.

நமது சந்தா நேயர்கட்கு ரூ. 2-0-0

"ஜகன் மோகினி" ஆபீஸ்,

26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஒளஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0




இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒருகைகண்ட ஒளஷதம் **அமிர்தாஞ்சனமே.**
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

**மோஹினி தைலம்.**
பாட்டில் 1-க்கு 0—12—0

**படைமருந்து**
டப்பி 1-க்கு 0—6—0

**பல்பொடி**
டப்பி 1-க்கு 0—2—0

**எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.**

அமிர்தாஞ்சன் டிபோ,
7, தம்புச்செட்டி வீதி, சென்னை.


Published by V. M. Parthasarathy Iyengar,
*for* " JAGANMOHINI OFFICE "
PRINTED AT THE [illegible]TA PRESS, MADRAS.